
குடும்பத்துடன் களிக்க...

# கல்கி

KALKI
24.7.2005
ரூ.6.00
96 பக்கங்கள்



நாங்க ரெடி...
நீங்க ரெடியா?



சிதம்பரத்துடன்
மோதலா?



எல்லாமே பொய்!

# ஸ்ரீ டிராவல்ஸ்

194 - A. 2வது மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.

Ph: 55345081, 55345082, 55345083, 28516799, 55870482

E-Mail sritrave@satyam.net.in Web:www.sreetravels.com

**எமது வெற்றிகரமான 17, 18வது திருக்கயிலாய யாத்திரைகள்:**

ரயில்மூலம் கோரக்பூர் வழியாக - ரூ.55,000/-

டில்லி - காத்மாண்டு - டில்லி விமானம் மூலம் ரூ.64,000/- புறப்படும் தேதிகள்: ஆகஸ்ட் 12, செப்டெம்பர் 10 பயணநாட்கள் 18.

ஹெலிகாப்டர் மூலம்: லக்னோ வழியாக 9 நாட்கள்: ரூ. 1, 10,000/-

## ஸ்ரீ டிராவல்ஸ் அளித்திடும் அருமையான வசந்த கால சுற்றுலாக்கள்

**குலு-மணாலி-சுற்றுலா:-** ஆப்பிள் பழ மரங்களின் அணிவகுப்பு:

சென்னை-டில்லி-அமிர்தசரஸ்-ஜம்மு வைஷ்ணவி-குலு-மணாலி-சண்டிகார்-ஆக்ரா-மதுரா-சென்னை.

புறப்படும் தேதி:12.9.2005

பயண நாட்கள்: 13 நாட்கள் பயணத்தொகை: ரூ.6,900/-

**வயது முதிர்ந்தோர்களுக்கான சுற்றுலா:** சென்னை - புவனேஸ்வர் - பூரி - கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் - காத்மாண்டு - போக்ரா - வாரணாசி - கயா - அலகாபாத் - சென்னை. பயணத் தொகை ரூ:14,900. (கூடுதல் முக்திநாத் பயணம் ரூ.13,500)

புறப்படும் தேதி: 29.8.05 (ரயில் பயணம் 3 A/c மற்றும் விமானப் பயணங்கள் உட்பட)

**முக்திநாத் யாத்திரை:-** சென்னை - கோரக்பூர் - போக்ரா - முக்திநாத் - காத்மாண்டு - வாரணாசி - கயா - அலகாபாத் - சென்னை. பயணத்தொகை: ரூ.18,900/-

பயண நாட்கள்: 10 நாட்கள் புறப்படும் தேதி: 05.09.05

**கோவா - மும்பாய் சுற்றுலா:-** சென்னை-ஹைதராபாத்-அவுரங்காபாத்-சனிசிங்கனாப்பூர்-எல்லோரா-ஷீரடி-பஞ்சவடி-திரியம்பகம்-நாசிக்-மும்பை-கோவா-சென்னை.

பயணத்தொகை: ரூ.5,900/- பயண நாட்கள்:11 புறப்படும் தேதி: 28.08.05

**பஞ்சதுவாரகை மற்றும் ராஜஸ்தான் சுற்றுலா:** சென்னை-அகமதாபாத்- பலிதானா - சோம்நாத் - துவாரகா - பெட்துவாரகா - கங்க்ரோலி - அம்பாஜி - மவுண்ட் அபு - உதயபூர்-ஜோத்பூர் - ஜெய்சால்மர் - பிகானீர் - அஜ்மீர் - புஷ்கர் - ஜெய்ப்பூர் - சென்னை.

பயணத்தொகை : 9,900 பயணநாட்கள் : 13 புறப்படும் தேதி : 18.09.05

குறைந்தபட்சம் 6 பேர் அல்லது அதற்கு மேல் உள்ள குழுவினருக்கு நீங்கள் விரும்பும் தேதியில் காசி-கயா-அலகாபாத்-யாத்திரை.

நபர் ஒருவருக்கு: ரூபாய்4900/- + ரயில் கட்டணம்.

4 பேர் அல்லது அதற்கு மேல் உள்ள குழுவினருக்கு பிரத்தியேக வெளிநாட்டு சுற்றுலாக்கள்:

1. இலங்கை சுற்றுலா - 18,500/- 6 நாட்கள்
2. தாய்லாந்து சுற்றுலா - 19,000/- 5 நாட்கள்

மத்திய தர வகுப்பினருக்கு தவணை முறையில் அடுத்த ஆண்டுக்கான திருக்கயிலாய யாத்திரைகள்.

மே முதல் செப்டெம்பர் மாதம் வரை.

பிரதிமாதம் ரூபாய் - 3000/-


10 மாதம் முடிந்தபின் - ரூபாய் 20,000/- மட்டும் கொடுத்தால் போதும்.

மேற்கண்ட சுற்றுலாக்கள் மட்டுமின்றி தேன் நிலவுச் சுற்றுலாக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பிரத்யேக சுற்றுலாக்களும் ஏற்பாடு செய்து தரப்படும்.

**கோவையில் எமது கிளை அலுவலகம்: எண்.52, ராஜ வீதி, (CEO அலுவலகம் எதிரில்) கோவை - 641 001.**

**போன்: 3950482, 5537299**


கல்கி
ஆகஸ்ட் 7,
ஆண்டு மலரில்...
உங்கள் உணர்வுகளை வருட...
உள்ளங்களை மீட்ட... உற்சாகம் பீறிட...
உயரங்களை எட்டிட...
அசத்தலான 4 தொடர்கள்...
எழுதப்போவது யார்? யார்?
காத்திருங்கள்... இன்னும் ஏழே நாட்கள்!



'ஜியாமெண்ட்ரி பாக்ஸ்' கதையை என்னால் மறக்கவே முடியாது. கதையின் சோகம் நெருப்பாய் நெஞ்சம் தொட்டது!

- அருணாசலம், மேற்கு மாம்பலம்.

'அம்மா, அம்மம்மா' அம்மாடியோ ரகம்! கலக்கிட்டீங்க!

- செ. சத்தியசீலன், கிழவனேரி.



இளையராஜாவின் திருவாசக விழா, ரஜினி - கமல், இளையராஜா- பாரதிராஜாவை இணைத்து வைத்த அற்புத விழா.

- கோவர்த்தனன், சென்னை - 42.

# நெஞ்சைத் தொட்ட

'இன்னொரு குழந்தை' சிறுகதை படித்து கண்ணீர் விட்டேன். சிறப்பான படைப்பு.


- ஆர். கமலா, பெங்களூர்.

'காதல் சிறகுகளில்' தேவிபாலாவின் அனுபவ உரைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

- மது, புதுச்சேரி.

காஷ்மீர் காடுகளில் அலைந்த அதிரடி அனுபவத்தை ஜாக்ரசே கூறிய விதம் த்ரில்லாய் இருந்தது!

- கேவி. ராமன், சென்னை.



## திருத்தம்

இந்த இதழின் 60ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள 'அந்தநாள் ஞாபகம்' தொடரை எழுதியவர் ஏவி.எம்.சரவணன். பெயர் விட்டுப் போனதற்கு வருந்துகிறோம்.

அரைவேக்காடு டாக்டர்களையும் இன்ஜினீயர்களையும் உருவாக்குவது நாட்டுக்கு ஆபத்தென்பதை வலியுறுத்திய தலையங்கம் அபாரம்!

- ஜே. துரைராஜ், சென்னை - 116.

சுஜாதாவின் 'உள்ளம் துறந்தவன்', எங்களின் உள்ளம் கவர்ந்தவன்!

- ஜோதிகுமார், சென்னை - 106

## வட்டமேஜை


### தவிர்க்கப்பட வேண்டியது!

'அசராமல் தண்ணி அடிக்கலாம்' என்ற கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. மூலிகைகளின் மருத்துவ குணங்களை மிகைப்படுத்திக் கூறுதல் இன்று எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. மதுபானத்தினால் ஏற்படும் பின் விளைவுகளையும், அதற்கான சிகிச்சையையும் ஆயுர்வேதம் விளக்கமாக எடுத்துரைக்கிறது. மதுபானத்தினால் நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப் புண், கல்லீரல் பாதிப்பு போன்றவை ஏற்படும் என்பது நாம் உணர்ந்ததே. மதுவானது உடலில் வாத, பித்தங்களை அதிகரித்து, மனிதன் உணர்ச்சிகளாகிய ரஜோ குணத்தைத் தூண்டி, மதத் தன்மையை ஏற்படுத்தி, மனிதனைக் கெடுக்கிறது. எனவே மதுபானம் அறவே தவிர்க்கப்பட வேண்டியதே. இதே மதுவை ஒரு சில சந்தர்ப்பங்களில் மருத்துவ அறிவுரையின் கீழ் மிகக் குறைந்த அளவில் ஒரு சில நோய்களுக்குக் கொடுப்பதுண்டு. மதுபானத்தினால் ஏற்படும் கேடுகளுக்குச் சில நேரங்களில் நீண்ட காலம் சிகிச்சையளிக்க வேண்டி வருகிறது. மனோரீதியாகவும் சிகிச்சை தேவைப்படுகிறது. குடும்பத்தாரிடம் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி, சிகிச்சையளிக்கும்பொழுது அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற வேண்டியுள்ளது. நவீன மருத்துவக் கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது, ஆயுர்வேத மருந்துகளின் வேதியல் செயல்திறனை ஆராய்ச்சி செய்வது என்பது சற்றுக் கடினமே. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குணாதிசயங்களால் வேறுபடுவதால், ஒரு மருந்து அனைவருக்கும் பொருந்தும் என்பது ஆயுர்வேத கண்ணோட்டத்துக்குப் புறம்பானதும் கூட.

## நெருப்பு!

- டாக்டர் எல். மஹாதேவன்,
ஸ்ரீ சாரதா ஆயுர்வேத மருத்துவமனை,
தரிசனம்கோப்பு, கன்னியாகுமரி - 629 851.

### வாரம் ஒரு வாசகர்



'அசராமல் தண்ணியடிக்கலாம்' கட்டுரை மக்களை நல்வழிப்படுத்தும் நல்ல முயற்சி, பாராட்டுக்கள்.

- ஜே.வி.ஜே. கண்ணன்,
திருச்சி.


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522, 22250623,
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

**பெட்ரோல் பிரச்னை நாடு முழுவதும் பற்றி எரிந்து கொண்டிருக்கும் நிலையில், அண்மையில் மயிலாடுதுறைக்கு வந்த மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யரைச் சந்தித்துப் பேசினோம். அவரது பேட்டியிலிருந்து...**



# சிதம்பரத்துடன் மோதலா?

## – மணிசங்கர் அய்யர்

**பணி நிமித்தமாக தில்லியிலேயே இருக்க வேண்டியிருக்கிறது; அடிக்கடி வெளிநாட்டுப் பயணம், தொகுதிப் பணிகளை கவனிக்க நேரம் கிடைக்கிறதா?**

"என்னை, பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தவர்கள் மயிலாடுதுறை பொதுமக்கள். எனவே என் முதல் கவலை அல்லது கவனம் தொகுதியைப் பற்றித்தான். தில்லியிலே பட்டம் பறந்து கொண்டிருந்தாலும், நூல்கண்டு மயிலாடுதுறையில்தான் இருக்கிறது. இங்கு பல நல்ல பணிகளைச் செய்ய முடிந்திருக்கிறது. ஆனால் சென்னை கோட்டையில் இருப்பவர்களுக்குப் பயந்து கொண்டு, சில மாவட்ட அதிகாரிகள் பாராமுகமாக இருக்கிறார்கள்."

**நீங்கள் சென்னைக்கு வருவதில்லை. அப்படியே மின்னல் போல் வந்தாலும் காங்கிரஸ் அலுவலகமான சத்திய மூர்த்திபவனுக்கு வருவதில்லை என்றும், தொண்டர்களை சந்திப்பதில்லை என்றும் புகார் சொல்கிறார்களே!**

"உண்மைதான். சத்தியமூர்த்தி பவனுக்குச் செல்வதில்லை. அதற்குக் காரணம் கட்சி விவகாரங்களில் கட்சியின் மாநிலத் தலைவர் மற்றும் அவருக்கு உதவியாக ஆட்கள் இருக்கிறார்கள். எனக்கு அங்கே என்ன வேலை? மேலும் காங்கிரஸ் தொண்டர்கள் தங்கள் கோரிக்கைகளையோ, சொல்ல விரும்பும் விவரங்களையோ, எனக்கு ஈமெயில் ஃபேக்ஸ் மற்றும் தபால் மூலமாகக் கூட அனுப்பலாமே"

**தமிழ்நாடு காங்கிரஸில் தொடரும் கோஷ்டிப் பூசல்களால் கட்சியின் வளர்ச்சி கணிசமாகப் பாதிக்கப்படுகிறதே? சமீபத்தில்கூட காமராஜர் பிறந்த நாள் விழாவை இரண்டு கோஷ்டியினர் தனித்தனியாகக் கொண்டாடினார்களே!**

"இந்த நிலையைப்பற்றி நானும் கவலைப்படுகிறேன். இதற்கு மேல் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை."

**இந்த நிலையைச் சீர் செய்ய வேண்டியது அகில இந்தியத் தலைமையின் கடமையல்லவா!**

"ஆமாம். சரி செய்யணும். என்னை என்னச் செய்யச் சொல்கிறீர்கள்? என் தொகுதிப் பணிகளைத் தவிர, நான் தமிழ்நாட்டின் அரசியல் விவகாரங்களிலோ, அல்லது கட்சி விவகாரங்களிலோ பெரும்பாலும் தலையிடுவதில்லை."

**பெட்ரோல் விலை ஒவ்வொரு முறை உயர்த்தப்படும் போதும், இடதுசாரிகள் போராட்டம் நடத்துகிறார்களே?**

"ஐக்கிய முன்னணி அரசின் நிலைத்தன்மையில் இடதுசாரிகள் முக்கியப் பங்காற்றுவார்கள். எனவே பொது மக்களை பாதிக்கும் பிரச்னையில் அவர்களுக்குக் கருத்துச் சொல்ல உரிமை உண்டு. அதைக் கேட்டு விவாதித்து முடிவெடுக்கும்

கடமையும் எங்களுக்கு உண்டு. சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏறும் போதெல்லாம் நாமும் உயர்த்தி, பொது மக்களைச் சிரமப்படுத்தாமல், இங்கே உள்நாட்டில் போடப்படும் இறக்குமதி வரி, சுங்கவரி ஆகியவற்றைக் குறைத்து விலையேற்றத்தைத் தடுக்கலாம் என்பது அவர்கள் வைக்கும் வாதம்."

**நீங்களும் இந்த வாதத்திற்கு உடன்பட்டதால், உங்களுக்கும் நிதி அமைச்சர் ப. சிதம்பரத்துக்கும் மோதல் என்று சொல்கிறார்களே!**

"உலகின் பல நாடுகளில் வருவாய் பெருக்கத்துக்கு பெட்ரோலியத் துறையைப் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவிலும் இதுபோன்ற நிலைதான் இருக்கிறது. ஆனால் கடந்த ஒரு வருட காலத்தில், நிதி அமைச்சகம் பெட்ரோலியப் பொருள்கள் மீதான இறக்குமதி வரி, மற்றும் சுங்கத் தீர்வையை ஓரளவு சீரமைத்து இருக்கிறார்கள். எனவே எனக்கும் நிதி அமைச்சகத்துக்கும் எந்த மோதலும் இல்லை. என் கவலையெல்லாம் எண்ணெய் நிறுவனங்களுக்கு வரவேண்டிய ஆயிரக்கணக்கான கோடிகள் வராவிட்டால், அந்த நிறுவனங்களின் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுமே என்பதுதான்."



**'பெல்' நிறுவன முதலீடுகளை விற்பது தொடர்பாக இடதுசாரிகளின் நிலைப்பாடு குறித்து...**

"அது எனக்குப் பிடித்திருக்கிறது. அவர்கள் ஒரு கருத்தை உங்களிடம் சொல்கிறார்கள். அதற்கு ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு அவர்களிடம் குறை காணாதீர்கள்."

**இந்த விவகாரத்தில் நிதி அமைச்சர் சிதம்பரத்துக்கு கடுமையாக நீங்கள் கடிதம் எழுதியதாகத் தகவல்கள் வந்தனவே...**

"இடது சாரிகள் இந்த விவகாரத்தைக் கிளப்பு

வதற்கு முன்பு நான் என் கருத்தைத் தெரிவித்தேன். அது பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக சொல்லப்பட்ட கருத்தல்ல. அந்தக் கடிதம் நிதி அமைச்சகத் தரப்பிலிருந்து லீக்காகி இருக்கிறது என்பது என் அபிப்ராயம். தேசிய அளவில் 70 பொதுத்துறை நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன. அவற்றின் பங்குகளை விற்க முயற்சிக்காமல், லாபம் சம்பாதிக்கும், நாட்டின் கௌரவத்தை உயர்த்தும் பொதுத்துறை நிறுவனமான 'பெல்'லின் பங்குகளை விற்பது எந்த வகையில் நியாயம்! இது என் தனிப்பட்ட கருத்து. நிதி அமைச்சருக்கும் எனக்கும் இந்த விவகாரத்தில் எந்த மோதலும் கிடையாது. நாளையே அமைச்சரவை பெல் பங்குகளை விற்க அனுமதி கொடுத்துவிட்டால், அதன் பிறகு கூட்டுப் பொறுப்பை உணர்ந்து நான் இதுபற்றி பேச மாட்டேன்."

**தமிழ்நாட்டிலிருந்து 12 பேர் அமைச்சர்களாக இருந்தும் இதனால் மாநிலத்துக்கு எந்தப் பயனும் இல்லை என்கிறாரே ஜெயலலிதா.**

"அந்த அம்மா பேசுவது அர்த்தமற்றது. பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எட்டு மாதத்தில் கோட்டையைக் காலி செய்யப்போகிறார். அதன் பிறகு வரலாற்றில் "அவரும் முதல்வராக இருந்தார்" என்ற குறிப்பு மட்டும் இருக்கும். என் இலாகாவைப் பொறுத்தவரை எண்ணூர் எரிவாயு டெர்மினல், தென்னக எரிவாயு இணைப்பு, சென்னை - மதுரை தனிப்பட்ட வாயு இணைப்பு என்று பல பணிகள் நடந்திருக்கின்றன. இதே போல் மற்ற அமைச்சர்களும் செய்திருக்கிறார்கள்.

**பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் எடுத்த பல முக்கியமான முடிவுகளை மாற்றிக் கொண்டது மட்டுமில்லாமல், மக்களுக்குப் பல சலுகைகளை வாரி வழங்கிக் கொண்டிருப்பதால், மீண்டும் ஜெ. செல்வாக்குப் பெற்று வருகிறாரே...?**

"நான் அந்த அம்மாவின் உண்மையான ஆதரவாளனாக இருந்தேன். ஆனால் சோனியா அவர்களைத் தனிப்பட்ட முறையில் ஜெ. விமர்சித்தது அபாண்டம். இது மட்டுமல்லாமல், என்னை அடித்த அ.தி.மு.க. என்றைக்கும் திருந்தாது."

**சில காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஜெயலலிதாவுக்கு ஜால்ரா போடத் துவங்கியிருக்கிறார்களே.**

"இப்படிச் செய்வது சரியல்ல. இது குழப்பத்தைதான் உண்டு பண்ணும்."

**இடைத் தேர்தல் பிரசாரத்தில் ஜெயலலிதா முக்கியமாக மத்திய அரசு பெட்ரோல் விலை உயர்த்தியது பற்றித்தானே பிரசாரம் செய்தார்?**

"என்னிடம் யாரும் இது பற்றிச் சொல்லவில்லை. ஆனால் பின்னால் கேள்விப்பட்டேன். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், பிரசாரத்துக்கு என்னை யாரும் அழைக்கவேயில்லை. அப்படி அழைத்திருந்தால் அவருடைய பிரசாரத்துக்கு, தக்க பதிலடி கொடுத்திருப்பேன். பெட்ரோல் விலையேற்றத்தைப் பற்றிப் பேச ஜெயலலிதாவுக்குத் தகுதி இல்லை. அவர் முதலில் தமிழக அரசு பெட்ரோல் மீது போட்டுள்ள கடுமையான விற்பனை வரியைக் குறைக்கட்டும்."

- ப்ரியன்

---

டிராமாவுக்கும் சினிமாவுக்கும் பிறந்த குழந்தைதான் டீ.வி. சீரியல். இதில் என்னைக் கவர்ந்தது, தூர்தர்ஷனில் ஒளிபரப்பான 'ரெயில் சிநேகம்'தான். கே.பி.யின் இந்த சீரியலில் முக்கியமாக அழுகை இருக்காது.

- கிரேஸி மோகன்

## எனக்குப் பிடிச்ச சீரியல்...



## திருப்பதி ஏழுமலையான் பெண் தெய்வமா?




**17 வண்ண புகைப்படங்கள்**
**அபூர்வ ஓவியங்கள்**
**அரிய மந்திரங்கள்**

**Price Rs.60/- No.VPP**

**ஏழுமலையானுக்கு சங்கு சக்கரம் கிடையாது**

கிடைக்குமிடம்:

சென்னை: புத்தா-9884328642, LKM:24361141, திருமகள்: 24342899
கோவை: விஜயா-0422-2382614
சேலம்: சந்திரா-0427-2265635
நெல்லை: அருள்நந்தி-0462-2339692
தஞ்சை: 9884473186



## மூலிகைமணி Dr. க. வேங்கடேசனின்
## THE MODERN SIDDHA SPECIALITY CLINIC

- பால்வினை நோய்கள் (STD)
- சர்ம நோய்கள் (Psoriasis, & Eczema, வெண்புள்ளி)
- மஞ்சள் காமாலை, (Hepatitis 'B' Virus)
- நீரிழிவு
- ஆஸ்துமா
- அல்சர்
- மகப்பேறின்மை
- மூட்டுவலி

ஆகிய சிக்கலான நாட்பட்ட நோய்களுக்கு பாரம்பரிய சித்த மருத்துவ மூலிகை சிகிச்சையும், நவீன நோய் கணிப்பும் இணைந்த நவீன சித்த மருத்துவம் மூலம் பின் விளைவற்ற தீர்வு கண்டு பூரண நலம் பெறலாம். கனத்த சரீரம் இளைக்கவும், மூட்டு வலி மற்றும் வஜ்ரதேகம் பெற மூலிகைத் தைலக் காப்பு (கேரள ஆயுர்வேத சிகிச்சை) சிறப்பு சிகிச்சையாக அளிக்கப்படும். விபரங்கட்கு

சென்னை தி. நகரில், காலை 9:00 - 5:00 மணி வரை
9, BBC Manor, துரைசாமி ரோடு, தி. நகர், சென்னை-17. ☎ 24331494

சென்னை புரசைவாக்கத்தில், மாலை 6:00 - 8:00 மணி வரை
B7, ராம்ஸ் பில்டிங், 21, ராஜா அண்ணாமலை ரோட்,
புரசைவாக்கம், சென்னை- 84. ☎ 26412025

கோவையில் New No.10, (175) நேரு வீதி லேன், (சிங்கப்பூர் பிளாசா பின்புறம்) ராம்நகர், கோவை - 9. ☎ (0422) 2234808.

# புறா-பெய்ட் மெயில்!

ப்ரீ மெய்ட், போஸ்ட்-பெய்ட் மொபைல்களில் நாம் சந்திக்கும் நெட்வொர்க் பிஸி, சார்ஜிங், ரீ-சார்ஜிங் தொல்லைகள், ஒவ்வொரு மாதமும் மறக்காமல் நம்மை வந்து சேரும் குதிரை வால் பில், எதுவும் இல்லாத அற்புதமான தகவல் பரி மாற்றத்திற்கு ஏற்றது புறா பெய்ட் மொபைல்தான்.

1150 ஆம் வருடத்தின் தொடக்கத்தில் பாக்தாத் வாசிகள் தபால் புறாக்களின் திறமையைக் கண்டு கொண்டனர். முதல் உலகப் போர் நடைபெற்ற சமயம், செர் அமி எனும் புறாவிற்கு மாலை, மரியாதை எல்லாம் செய்து, மாய்ந்து மாய்ந்து உபசரித்து விருது கொடுத்தார்கள். ஏன்? குண்டடி பட்ட பிறகும் இந்தப் புறா தனக்கு கொடுக்கப்பட்ட 12 முக்கியச் செய்திகளை மிகத் துல்லியமாகக் கொண்டு போய் சேர்ப்பித்திருக்கிறது.

அது மட்டுமா? ஒரு மெசேஜிற்கு இவ்வளவு என்று உங்கள் கழுத்தில் கத்தியை வைத்து புறா கேட்காது. எப்பொழுது எழுப்பி விட்டாலும் மூக்கைச் சுளிக்காமல் பறந்து போகும். இன்-கமிங், அவுட்-கோயிங் இரண்டும் ஃப்ரீ. ஆனால் அதற்காக புறாவைக் கண்டுகொள்ளாமல் இருக்கவும் கூடாது. வேளாவேளைக்கு உணவளிக்க வேண்டும். தேவைப்படும்பொழுது புறாவை டாக்டரிடம் கூட்டிப் போய் காட்ட வேண்டும் (ஊசி போடும்பொழுது புறா அழுதால், கண்களைத் துடைத்துவிட வேண்டும்). உங்கள் வீட்டுப் பரணை காலி செய்து, பெட்ஷீட், தலையணை எல்லாம் போட்டுத் தூங்க வைக்க வேண்டும். நல்ல கதையாகச் சொன்னால் தலையை ஆட்டிக் கேட்கும்! ('தூளியிலே ஆடவந்த' என்றும் தாலாட்டு பாடலாம்.)

முயன்று பாருங்கள். 'இன்று மாலை 6.00 மணிக்கு ஸ்பென்ஸர் ப்ளாஸாவில் சந்திக்கலாம். வரும்பொழுது மறக்காமல் கைமுறுக்கு கொண்டு வரவும்' என்று ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி புறாவின் காலில் கட்டிவிட்டால் போதும். பறந்து போய் மிகச் சரியாகச் சேர்ப்பித்துவிடும்.

ஆனால் ஒன்று! எஸ்.எம்.எஸ். மாதிரி உங்கள் காதலியிடம் மட்டும்தான் சீட்டைச் சேர்ப்பிக்கும் என்று சொல்ல முடியாது. ஒரு வேளை உங்கள் காதலி உள்ளே டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தால், ஈஸி சேரில் சாய்ந்து, கையில் முறுக்கோடு பேப்பர் படித்துக் கொண்டிருக்கும் அவள் அப்பாவின் மடியில் லேண்ட் ஆகிவிடலாம். திரும்பி வந்து 'மெஸேஜ் டெலிவர்ட்' என்று இறக்கையை அடித்துக் கொண்டு சொல்லிவிடும். அதற்குப் பிறகு 6 மணிக்கு உங்களைத் தேடி யார் வருவார்கள் என்பதும், அப்படி வருபவர்கள் கையோடு கைமுறுக்கு எடுத்து வருவார்களா, உங்கள் கையை முறுக்க வருவார்களா என்கிற விவரமும் உங்களுக்குப் பின்னர் தெரிய வரும்.

- கங்கா







# இதற்குப் பெயர்தான் காதலா..!



மொட்டவிழ்ந்து பூவாக மாறும் அற்புதத் தருணம் எப்பொழுது நிகழும் என்று சொல்ல முடியுமா? முடியாது அல்லவா? அதுபோலவே காதலும். ஆனால் தமிழ் சினிமா பார்த்துப் பார்த்து காதலைக் குழப்பிக் கொண்டவர்களுக்கும், 'இதற்குப் பெயர்தான் காதலா..' என்று விட்டத்தைப் பார்த்து குழம்புபவர்களுக்கும் 'இது தாண்டா காதல்' என்று சொல்லியடிக்கிறது ஒரு ஆராய்ச்சி.

❦ அருகிலிருக்கும்பொழுது வேண்டுமென்றே அவரை / அவளைத் தவிர்ப்பீர்கள். எப்பொழுது அந்த வேண்டாதவர் உங்கள் அருகில் இல்லையோ, அப்பொழுது ஏங்கித் தவிப்பீர்கள். அழுகை கூட வரும். வந்ததா, அட இது காதல்!

❦ உங்களை குஷிப்படுத்த, நேரத்தைக் கழிக்க ஆயிரம் பேர் இருப்பார்கள். ஆனாலும் உங்கள் கண்கள் ஒருவரைத் தேடுமே... தேடியதா... யூ ஆர் இன் லவ். பப்பர...பாம்!

❦ ஊர் போய்ச் சேர்ந்த பிறகு உங்களின் பயண சுகங்கள் பற்றி 'அந்த' நபரிடம் (மட்டும்) சொல்லத் துடிப்பீர்கள். ஆனால் உங்க 'மக்கு' ஆளுக்கு, போன் பண்ணி உங்கள் ஆசையை தீர்க்கத் தெரியாது. அவர் செல்போனும் சமர்த்தாக உறங்கிக் கொண்டிருக்கும். அந்த நிமிடங்கள்... அந்த உணர்வுகள், ஹா... நீங்கள் அகப்பட்டு விட்டீர்கள்.

❦ ஷாப்பிங் பண்ணும் போது... சினிமா பார்க்கும் போது... 'ச்சே அவர் மட்டும் கூட இருந்திருந்தா எப்படியிருக்கும்' என்று மனதில் ஆசை 'பல்ப்' விட்டுவிட்டு எரிகிறதா..? அதேதாங்க...!

❦ 'அந்த' செல்லிலிருந்து வந்த எஸ்.எம்.எஸ். - ஈமெயில் மட்டும் அழிக்கவே மாட்டீர்கள். "அவர் / அவள் என் க்ளோஸ் ஃப்ரெண்ட் அதான்..." என்று நொடிக்கு நூறு முறை உங்களுக்குள் சமாதானம் சொல்வீர்கள். சொல்கிறீர்களா... கை கொடுங்கள், நீங்கள் காதலிக்கிறீர்கள்.

இதை ஆர்வத்துடன் படித்து வரும்பொழுது, எந்த முகம் உங்கள் முன் நிழலாடிக் கொண்டிருந்ததோ... அவரை நீங்கள் அறிந்தும் அறியாமலும் காதலித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தமாம். கங்கிராட்ஸ்!

- சநகன்

# உலகத்தின் பாஷை!

**ந**ம்மூர் டி.ராஜேந்தர் மாதிரி என்றுகூட சொல்ல முடியாது. அதையும் தாண்டி பல வேலைகளைத் தான் ஒருவரே செய்து வருகிறார் இந்திய இசையுலகின் மாடர்ன் பாப் ஐகான், ரெமோ பெர்னாண்டஸ்! எல்லா இசைக் கருவிகளையும் வாசிக்கிறார், பாடுகிறார், பாடல் எழுதுகிறார், ரெக்கார்டிங், எடிட்டிங், மிக்ஸிங், ஷூட்டிங், கிராஃபிக்ஸ், அனிமேஷன், காஸ்ட்யூம் டிசைனிங் என்று இவருக்குத் தெரியாத விஷயங்களே இல்லை.

சமீபத்தில் இந்தியாவின் முதல் சைபர் ஆல்பத்தை ரிலீஸ் செய்துள்ளார். சைபர் ஆல்பம்...? ஒரு மியூசிக் ஆல்பத்தை நேரடியாக இணையத்தில் ரிலீஸ் செய்துள்ளார், 'சைபர் வைபர்' என்ற பெயரில்! ரிலீஸான முதல் இரண்டு வாரங்களிலேயே 20,000 டௌன்லோட் என சாதனை படைத்திருக்கிறது அந்த ஆல்பம். அந்த ஆல்பத்திற்கு ஏ டு இஸட் எல்லா வேலைகளையும் பார்த்தது ரெமோவேதான்.

'இப்படி எல்லா வேலைகளையும் நீங்களேதான் செய்ய வேண்டுமா? மற்றவர்கள் மேல் நம்பிக்கையில்லையா?' என இவரிடம் கேட்டால், 'நோ யா, என் சொந்த ஊர் கோவா. அந்த அழகான சூழ்நிலையில் வேலை பார்க்கத்தான் எனக்குப் பிடிக்கும். ஆனா, அங்கே மியூசிக் டெக்னீஷியன், வேற வசதிகள் எதுவும் அவ்வளவா கிடையாது. ஸோ, எல்லா வேலைகளையும் நானே லவ் பண்ணி செய்றேன்" என்கிறார் கூலாக!

ஒரு காதலன் தவித்துக் கொண்டிருக்கிறான். எப்படி தன் காதலை தன் காதலியிடம் சொல்ல? எந்த வழியில் அவள் மனதைக் கவர முடியும்? நீண்ட கடிதங்களை எழுதி அனுப்புகிறான். ரோஜாக்களை, பரிசுப் பொருள்களை அனுப்பி வைக்கிறான். ம்ஹூம்... என்ன செய்ய? உலகம் எஸ்.எம்.எஸ். பாஷைக்கு மாறி விட்டதை உணருகிறான். தன் காதலை உருக்கி, குறுஞ்செய்தி வடிவில் ஊற்றி அனுப்புகிறான். க்ளிக் ஆகிறது. இதுதான் ரெமோவின் லேட்டஸ்ட் ஆல்பம் - 'லவ் ஆன் எஸ்.எம்.எஸ்.' எப்படி ரிலீஸ் பண்ணினார்கள் தெரியுமா? டாடா இண்டிகாம் மொபைல் வழியாக! எஸ்.எம்.எஸ். விடு காதலர்களே... உங்களுக்காக இந்த ஆல்பம் கேசட், சி.டி.யாகவும் கிடைக்கிறது.

- முகில்





இனிமை கல்கி

# கண்ணாலே மிய்யா... மிய்யா!



### நான் யார்?

ஸ்ரீவர்த்தினி. சினிமாவுல ஒரு நல்ல பின்னணிப் பாடகியா வரணும்னு எனக்கு ரொம்ப நாள் ஆசை. அதை நிறைவேற்றினது வித்யாசாகர் சார்தான். அவரோட மியூசிக்ல 'அன்னித் தந்த வானம்' படத்துல 'கண்ணாலே மிய்யா மிய்யா' பாட்டுதான் எனக்கு முதல் பாடல்... அது ஹிட்டாகவே, தொடர்ந்து நிறைய வாய்ப்புகள் வர ஆரம்பிச்சது.

### சந்தோஷ வருத்தம்

நான் பாடி பிரபலமான பாடல்கள்னு சொன்னா 'தவசி' படத்துல 'பஞ்சாங்கம் பார்க்காதே மாமா', 'ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே' படத்துல 'தொட்டு தொட்டு... தொட்டுச் செல்லும்...' இப்படி நிறைய சொல்லலாம். எனக்கு மெலோடியான சாங்ஸ் பாட ரொம்ப இஷ்டம். மனசுக்கு இதம் தர்றதால எனக்கு மெலோடி மேல அப்படியொரு காதல். ஆனா எனக்கு அமையற எல்லாப் பாட்டுமே அப்படி அமையறதில்லை.

### குரலழகி

சினேகா, ஜோதிகா, லைலா, சதா, த்ரிஷா ஆகியோருக்காக நான் பாடியிருந்தாலும், என்னோட குரல் லைலாவுக்கும், ஜோதிகாவுக்கும் பக்காவா சூட் ஆகுதுன்னு பல பேர் சொல்றாங்க. அந்த விதத்துல நான் குரலழகிதானே!

### பெருமை

எனக்கு ரொம்பப் பெருமையான விஷயம்னா, அது இளையராஜா சாரோட திருவாசகத்துல மிகப்பெரிய இசைக் கலைஞர்களோட இணைந்து பாட வாய்ப்புக் கிடைச்சதுதான்.

### நம்பிக்கை

இப்போ நான் எம்.பி.ஏ. படிச்சுட்டு இருக்கேன். படிப்பையும் சங்கீதத்தையும் என் ரெண்டு கண்களா பாவிச்சுட்டு வர்றேன். ரெண்டுலயும் பெரிய லெவலுக்கு வருவேன்னு நிறைய நம்பிக்கை இருக்கு.

- கலை



• வைத்தி

# பா.விஜய்க்கு வஸந்த் சிபாரிசு!

**2004**ம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. விருதுகளைத் தேர்ந்தெடுத்த குழுவில் தமிழ்நாட்டிலிருந்து இயக்குனர் வஸந்த், இசையமைப்பாளர் எல்.வைத்தியநாதன் இருவரும் இடம் பெற்றிருந்தனர். வஸந்த் தமது அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்துகொண்டார்.

▸ தேர்வுக் குழுவினரின் பரிசீலனைக்கு மொத்தம் 107 படங்கள் வந்திருந்தன. தினம் ஐந்து படங்கள் வீதம், மொத்தப் படங்களையும் பார்த்தோம். மலையாளத்தில், அதிகபட்சமாக பதினேழு படங்கள் வந்திருந்தன. தமிழில் அனுப்பப்பட்டிருந்த படங்கள் பதினான்கு.

▸ சிறந்த நடிகைக்கான விருதுக்கு இறுதிச்சுற்று வரை போட்டியில் இருந்தவர் ஐஸ்வர்யா ராய் மற்றும் கீதுமோகன் தாஸ். ரெய்ன்கோட் படத்தில் ஐஸ்வர்யா ராயும், அகலே மலையாளப் படத்தில் கீதுவும் நன்றாக நடித்திருந்தனர் என்றாலும், ஹசீனா கன்னடப் படத்தில் நடித்துள்ள நடிகை தாரா, அவர்களை மிஞ்சி விட்டார்.

▸ தேர்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த நடிகை வாணிஸ்ரீயை சந்தித்தபோது எனக்கு. இனிய ஆச்சர்யம்! "தாமரை நெஞ்சம், வசந்த மாளிகை படங்களைப் பார்த்து நான் உங்கள் விசிறி" என்று நான் சொல்ல, அவரோ "கேளடி கண்மணி தொடங்கி, ஆசை, ரிதம் வரை எல்லாப் படங்களைப் பார்த்துவிட்டு நான் உங்கள் விசிறி" என்றார்.

▸ பிரபல இந்திக் கவிஞர்களான குல்சார், ஜாவித் அக்தர் ஆகியோருடன் போட்டியிட்டு, ஆட்டோகிராப் படப்பாடலுக்கு, சிறந்த பாடலாசிரியருக்கான விருதினைப் பெற்றிருக்கிறார் பா. விஜய். பாடல் வரிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, பாடலின் மேன்மையை தேர்வுக் குழுவினருக்கு விளக்கிச் சொன்னேன்.


▸ சித்ரா விருது பெற்றதால், விருதை நழுவ விட்டவர் பிரபல பாடகி சுபா முட்கல்.

▸ சந்தோஷ் சிவனின் நவரசா ஒரு க்ளாசிக் சினிமா. அரவாணிகள்மீது மதிப்பும் மனிதாபிமானமும் ஏற்படும்படி படமெடுத்திருக்கிறார் சந்தோஷ்சிவன். டீன் ஏஜ் பெண்ணாக வரும் ஸ்வேதாவின் நடிப்பு அருமை.

▸ பெரும்பாலான படங்கள் சப்-டைட்டில்களுடன் திரையிடப்பட்டன. இல்லையென்றால், ஒருவர் வசனங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்ல, இயர் போனில் வசனங்களைக் கேட்டபடி, படத்தைப் பார்க்கலாம்.

▸ இயக்குனர் கே. பாலசந்தர், நடுவர் குழுவில் இடம் பெற்றபோது, அவர் தந்த ஆலோசனையின் பேரில்தான், பாடலாசிரியர்களுக்கு தேசிய விருது தர ஆரம்பித்தார்கள். அதுபோல, நான் இப்போது 'மேக்-அப்' புக்கு தேசிய விருது கொடுக்கலாம்' என்று பரிந்துரை செய்திருக்கிறேன்.

தொகுப்பு : **மௌலி**




## இஸ்லாமிய பயங்கரவாதம் Vs நவீன பயங்கரவாதம்!

லண்டன் குண்டுவெடிப்பைத் திட்டமிட்ட சதிகாரர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான சாட்சியங்கள் கிட்டியிருப்பதில் சிறிதும் ஆச்சரியமில்லை. காஷ்மீரில் இதே ரக பயங்கரவாதம்தான் மக்களை தினம் தினம் சித்திரவதை செய்கிறது. அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வளைய வருகிறார்கள். சராசரியாக, வாரமொருமுறை காஷ்மீரில் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்.

இந்தியாவில் (குறிப்பாக காஷ்மீரில்) பல வருடங்களாக மக்கள் எத்தனையோ அவஸ்தைகளுக்கிடையில் அமைதியாக வாழ்வு நடத்தத் துணிந்து பொறுமை காக்கிறார்கள்.

தினம் தினம் நடக்கிற கதையாகி விட்டதால், இந்தியாவில் தலைதூக்கும் பயங்கரவாதம் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்குவதில்லை. ஆனால் பிரிட்டனில் இஸ்லாமிய பயங்கரவாதம் இவ்வளவு பெரிய அளவில் சேதம் விளைவித்திருப்பது முதல் முறை என்பதால், உலகமே ஸ்தம்பித்துப் போய் அனுதாபம் கொள்கிறது. அமைதி காத்த பிரிட்டிஷ் மக்களும், உணர்ச்சி வசப்படாமல் பொறுமையாக அறிக்கைகள் விடுத்து வரும் டோனி பிளேரும் வெகுவாகப் புகழப் படுகின்றனர். காஷ்மீர் மக்களுக்குக் கிடைக்காத உலகளாவிய கவனமும், ஆதரவும் பிரிட்டிஷாருக்கு இன்று கிடைக்கிறது!


பிரிட்டனுக்கு ஆதரவாக எழுந்துள்ள இந்த அனுதாபப் பெருக்



கல்கி




2005 ஜூலை 24
பார்த்திப ஆடி 8
மலர் : 63
இதழ் : 52




கினூடே நாம் சில விஷயங்களை நினைவுகூர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

இஸ்லாமிய மதத்தைப் பயில பாகிஸ்தானுக்குச் சென்ற பிரிட்டிஷ் குடிமகன்கள் (இவர்களது பெற்றோர் பாகிஸ்தானியர்) மூளைச் சலவை செய்யப்பட்டு, இந்தச் சதியை நிறைவேற்ற, மனித வெடிகுண்டுகளாக மாற்றப்பட்டுள்ளனர். மதத்தின் பெயரால் பிரிட்டனைத் தாக்க தங்கள் உயிரைத் துச்சமாகப் பணயம் வைத்துள்ளனர்.

இந்தியாவுக்கு பயங்கரவாதிகளைப் பயிற்றுவித்து அனுப்ப, தூண்டுதலாகவும் துணையாகவும் உள்ள பாகிஸ்தான், இன்று பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளையும் குறி வைக்க ஆரம்பித்துவிட்டது.

இதுநாள் வரை இந்தோ - பாக் பிரச்னையில் பாகிஸ்தானை மட்டுமே செல்லப் பிள்ளையாகக் கருதி வந்த அமெரிக்கா, இனி என்ன செய்யப் போகிறது? பாகிஸ்தான் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்குமா? அல்லது யுத்தம் செய்யுமா! அமெரிக்காவுக்கு உதவியாக, பிரிட்டன் அந் நாட்டில் விமானத் தாக்குதல் நடத்துமா?...!

இதுவரை பாகிஸ்தானை ஆதரித்த இரு நாடுகளுமே இப்போது திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் இருக்கின்றன.

இன்று இஸ்லாமிய பயங்கரவாதம் உலகெங்கும் வேரூன்றி, ஆங்காங்கே தாண்டவமும் ஆடிக்கொண்டிருக்கிறது. அதனை எதிர்கொள்ள, பிற உலக நாடுகள் ஒத்துழைத்து ஒன்றுபட்டால் மட்டும் போதாது. ஆயுத உற்பத்தி மூலம் லாபம் ஈட்டும் போக்கையும், ஆயுதக் குவிப்பு மூலம் பிற நாடுகளை அச்சுறுத்தும் காரியத்தையும் அமெரிக்கா போன்ற நாடுகள் உடனே கைவிட வேண்டும்.

ஆனால் அமெரிக்கா என்ன செய்கிறது...? தான் மட்டும் வேண்டிய அளவுக்கு அணு ஆயுதங்களையும், பேரழிவு ஆயுதங்களையும் குவித்து வைத்துக் கொண்டிருக்கிறது. அதே காரியத்தை பிற நாடுகள் செய்தால், தப்பு என்கிறது! வர்த்தக - பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுத்தி தொல்லை கொடுக்கிறது. இதனினும் கேவலமாக, ஈராக் பேரழிவு




ஆயுதங்களைத் தயாரிப்பதாகக் குற்றம் சாட்டி, அந் நாட்டின் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் போர் தொடுத்தன. ஆனால் அந்த ஆயுதங்கள் ஈராக்கில் கண்டு பிடிக்கப்படவேயில்லை; ஒரு பொய்யின் அடிப்படையில் போர் தொடுக்கப்பட்டதாக இன்று நிரூபணம் ஆகிவிட்டது.

ஆக, இன்றைய உலகில் ஒரு புறம் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளைத் திரித்து நோக்கி, வன்முறையை நியாயப்படுத்துகிற பயங்கரவாதம் மூர்க்கத்தனமாக வளர்கிறது. இன்னொருபுறம், முன்னேறிய சிந்தனைக்கும், மனித உரிமைக்கும் முக்கியத்துவம் தருவதாகச் சொல்லிக் கொள்ளும் மேற்கத்திய நாடுகள் சில, இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு, கற்பனைக்கெட்டாத அத்துமீறல்களில் ஈடுபடுகின்றன. ஈராக் மீதும், ஆஃப்கானிஸ்தான் மீதும் நடந்த தாக்குதல்களில் எளிய மக்கள் புற்றீசல்களாக மாண்டனர்! அபு கரீப் சிறையில் நடந்த ஃபாஸிஸ அக்கிரமங்கள் நாஸி கொடுமைகளுக்கு நிகரானவை...! இதற்கெல்லாம் தங்களுக்கு மட்டும் உரிமை இருப்பதாக இவர்கள் கருதுகிறார்கள்!

இஸ்லாமிய பயங்கரவாதத்தை இந்த 'நவீன பயங்கரவாதத்தால்' வென்றுவிட முடியாது. ஆயுத உற்பத்தி மூலம் லாபம் கண்டு உலகை ஜெயிக்க நினைத்த அமெரிக்கா, இன்று அந்த நெகடிவ் வியாபாரத்தின் விளைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவும் பிரிட்டனும் நம்பி ஆதரித்த பாகிஸ்தானால், முதுகில் குத்தப் பட்டிருக்கின்றன.

ஆயுதங்கள், அச்சுறுத்தல், அழிவு, ஆக்கிரமிப்பு என்ற அணுகுமுறையை, அமெரிக்காவும் பிரிட்டனும் கைவிட வேண்டும். அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள், நட்பு ஒப்பந்தங்கள் மூலம்தான் பயங்கரவாத அமைப்புகளையும், இஸ்லாமிய கொடுங் கோலர்களையும் வழிக்குக் கொண்டு வர முடியும். சூளுரைகளை நிறுத்திவிட்டு, இந்நாடுகள் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும். இல்லையேல் பழி வாங்கும் படலம்தான் தொடர்கதையாக நீடிக்கும்! ○

# "எல்லாமே பொய்!"

**நீண்ட இடைவேளைக்குப் பிறகு மறுபடி படம் இயக்க வருகிறார் பாலசந்தர். மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையில் 'பொய்' படத்தின் வேலைகளை ஆரம்பித்திருப்பவர், நேர நெருக்கடியிலும் நம்மை சந்தித்துப் பேசினார்...**

**எழுபத்தைந்து வயதிலும் எப்படி உங்களால் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது...?**

"நான் ரொம்ப ரொமான்டிக். இதற்கு வெறுமனே 'லவ்' என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளக் கூடாது. நான் செய்கிற தொழில் மீது எனக்குக் காதல்; சினிமா என்கிற அற்புதமான மீடியத்தின் மீது காதல்; வாழ்க்கையின் மீது காதல்; உலகத்தின் மீது காதல்; சக மனிதர்கள் மீது காதல். எதைச் செய்தாலும் ஆர்வமாய், கிரியேடிவாக, முழு ஈடுபாட்டுடன் செய்கிறேன். அதுதான் எனக்குள்ளே சுறுசுறுப்பையும், புத்துணர்ச்சியையும், உத்வேகத்தையும் தொடர்ந்து கொடுத்துக்கொண்டே இருக்கிறது. நான் என்னுடைய கடைசி மூச்சு வரை இப்படியே இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்."

**உங்களது முந்தைய 'பார்த்தாலே பரவசம்' படத்துக்கும் 'பொய்'க்கும் இடையில் ஏன் இவ்வளவு இடைவெளி?**

"நான் சஹானா தொடரில் பிஸியாகி விட்டேன். எனவே சினிமாவைப் பற்றி சிந்திக்கவில்லை. ஆனால், ஒரு உண்மையைச் சொல்லணும். சினிமாவில் கிடைக்காத சில சுதந்திரங்கள், சின்னத் திரையில் கிடைத்தது எவ்வளவு உண்மையோ, அதே அளவு, சின்னத் திரைக்கென்று பட்ஜெட் உட்பட சில கட்டுப்பாடுகள் உண்டு. அப்போதெல்லாம், சினிமா என்றால், இந்தக் கட்டுப்பாடு இருக்காதில்லையா? என்று தோன்றும். கடந்த பத்தாண்டுகள் தொடர்ந்து டி.வி சீரியல்களாகவே எடுத்ததில், கொஞ்சம் திகட்டுகிற மாதிரி உணர்ந்தேன். மீண்டும் சினிமாவுக்கு வரத் தீர்மானித்தேன்."



**கவிதாலயா பட நிறுவனத்தை ஆரம்பித்த பின், 'அழகன்' நீங்கலாக வெளித் தயாரிப்பாளர்களுக்கு நீங்கள் படம் இயக்கவில்லை. இப்போது பிரகாஷ்ராஜ் மட்டும் என்ன ஸ்பெஷல்?**

"பிரகாஷ் தயாரிப்பாளர் என்பதுதான் ஸ்பெஷல். என் மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் கொண்டவர் அவர். 'டைரக்டர் கே.பி. இயக்கத்தில் ஒரு படம் தயாரிப்பது என்பது பெருமைக்குரிய விஷயம். அந்த பெருமைக்குரிய வாய்ப்பை என் கம்பெனிக்குக் கொடுங்கள். படத்தின் வெற்றி, தோல்வி, லாபம், நஷ்டம் எல்லாமே இரண்டாம் பட்சம்' என்று என்னை சில வருடங்களாகவே கேட்டுக் கொண்டிருந்தார்.

அது மட்டுமின்றி, பிரகாஷ்ராஜ், சினிமாவில் மிகவும் பிஸியாக இருந்த கட்டத்தில்கூட, நான் கூப்பிட்டேன் என்பதற்காக வந்து சஹானா டி.வி தொடரில் நடித்துக் கொடுத்தார். அது அசாதாரணமான விஷயம். அதற்கு பிரதி உபகாரமாக, நான் அவருக்கு படம் இயக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன்."

**வாழ்நாள் முழுக்க உண்மை மட்டுமே பேச வேண்டும் என்ற லட்சியம் கொண்ட ஜெமினி கணேசன் கதாபாத்திரத்தை 'புன்னகை' படத்தில் உருவாக்கிய நீங்கள், இந்தப் படத்துக்கு 'பொய்' என்று பெயர் சூட்டியிருக்கிறீர்களே!**

"முதல் காரணம், 'பொய்' என்பது சுத்தமான தமிழ் வார்த்தை. வைரமுத்து எழுதிய 'கவிதைக்குப் பொய் அழகு' என்பதைக் கொஞ்சம் மாற்றி, 'இளமைக்குப் பொய் அழகு' என்று தலைப்புக்கு ஓர் இணைப்பும்

கொடுத்திருக்கிறேன்.

இன்றைய உலகத்தைப் பாருங்கள். சிந்தனையில் பொய்; பேச்சில் பொய்; செயலில் பொய்... எல்லாமே பொய்! சமுதாயத்தில் நிலவுகிற லஞ்சம், ஊழல் இதெல்லாம் கூட பொய்மையின் பரிமாணங்கள் தானே!"

**'பொய்'யின் கரு என்ன?"**

"இளமையில் காதல் இல்லாமல் இருக்குமா? காதலில்தான் பொய் இல்லாமல் இருக்க முடியுமா? பொய் ஒரு ஊடுருவும் சமாசாரம். உள்ளே நுழைந்து விட்டால், அடுக்கடுக்காய் பொய் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். அது வரம்பு மீறுகிற போது வரும் சிக்கலைத் தீர்ப்பது அத்தனை சுலபமில்லை. பதின்மூன்று ரீல்கள்வரை ரொம்ப ஜாலியாக, ரொமான்டிக் காமெடியாக போகிற கதை, கடைசி இரண்டு ரீல்களில், சற்றும் எதிர்பாராத திருப்பம் நிகழ்கிறது."

**ஹீரோ, ஹீரோயின் எல்லாம் புதுமுகங்களா?**

"ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்தியப் பெண்ணான விமலா ராமன் அங்கே நடந்த அழகிப் போட்டி ஒன்றில் ஜெயித்த தகவலைக் கேள்விப்பட்டேன். விமலா ராமன் என்ற அந்த நல்ல உயரம் கொண்ட டான்ஸ் தெரிந்த மாடலுக்கு மேக் அப் டெஸ்ட் செய்து பார்த்தபோது, பொருத்தமானவர் என்று தோன்றியது. அவரது உயரத்துக்கு ஈடாக யாரை ஹீரோவாகப் போடுவது என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், தெலுங்கின் பிரபல இளம் ஹீரோவான உதய்கிரண் என்னை வந்து சந்தித்தார். தெலுங்கில் நான் எடுத்த சூப்பர் டூப்பர் ஹிட் படமான மரோ சரித்ராவை, அவரை ஹீரோவாய்ப் போட்டு, மறுபடியும் நான் இயக்க வேண்டும் என்று கேட்டார். கூடவே, அந்தப் படத்தைத் தயாரிக்க, ஒரு தயாரிப்பாளரையும் அழைத்து வந்திருந்தார். அவரது வேண்டுகோளை ஓரளவுக்குத்தான் என்னால் நிறைவேற்ற முடிந்தது. அவரை 'பொய்'யில் ஹீரோவாக்கிவிட்டேன். நடிக, நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் என்று, சுமார் ஒரு டஜன் பேரை நான் 'பொய்' மூலம் அறிமுகப்படுத்துகிறேன்."



* படத் துவக்க விழாவில்...



* விமலா ராமன்

**வித்யாசாகருடன் முதல்முறையாக இணைகிறீர்களே...?**

"வித்யாசாகரிடம் அந்தக் காலத்து எம்.எஸ்.வி.யின் மெலடிகள் புதைந்து கிடக்கின்றன. அவரை எம்.எஸ்.வி.யின் இசை வாரிசு என்றால் மிகையில்லை. அவர் அற்புதமான மெலடிகளாய் போட்டுக் கொடுத்திருக்கிறார். இப்போதைய ட்ரெண்ட்படி, அதிவேகப் பாடல் ஒன்றும் உண்டு."

**- எஸ். சந்திரமௌலி**

இந்த வார விசிட்டுல கோட்டையை கொத்து பரோட்டா போடக் கிளம்பிட்டோம். நமக்குத் தான் அங்க போறதும் வர்றதும் தண்ணிபட்ட பாடாச்சே... அடுத்த அரைமணியில 'அம்மாபேட்டை' யிலே ஆஜரானோம்.

நாம போன அன்னிக்கு கோட்டையே 'JJ'ன்னு கோலாகலமா இருந்துச்சு... எங்க பார்த்தாலும் ரத்தத்தின் ரத்தங்கள்! கோட்டைக்குள்ள அம்மா மினி கட்சி மாநாடு எதுவும் போடப் போறாங்களோன்னு நமக்கு டவுட்டே வந்துடுச்சு. என்ன மேட்டர்னா, அன்னிக்கு நாலஞ்சு மந்திரிங்களைத் தவிர, மத்த எல்லாருமே கோட்டையில ஆஜர் ஆகியிருந்துதான்.

எல்லா மந்திரிமாருங்க ரூம் வாசல்லயும், வராண்டாவுலயும் இண்டு இடுக்கு விடாம, கையில மனுக்களோட ஏகப்பட்ட பேரு நெருக்கியடிச்சிக்கிட்டு நின்னுட்டிருந்தாங்க. சிலபேர்கிட்டே நைஸா போட்டு வாங்கின பிறகுதான் தெரிஞ்சது, பலபேரு அவங்கவங்க ஏரியா கட்சிக்காரங்களைப் பத்தி போட்டுக் கொடுக்க வந்தவங்கன்னு... வோட்டுப் போடற மக்கா... பார்த்துக்கங்க, கோட்டை எதுக்கெல்லாம் யூஸ் ஆவதுன்னு...

வாசல்ல நின்னு சீரியஸா பேசிக்கிட்டிருந்த நாலுபேர் என்னதான் பேசிக்கறாங்கன்னு பார்ப்போம்னு அவங்க பக்கத்துல போய் ஒண்ணுந் தெரியாத புள்ள மாதிரி உட்கார்ந்தோம். இப்போ அவங்க பேசின டயலாக்குல ஒரு பார்ட்டை எடுத்து விடறேன் பாருங்க...

"என்ன நகரம்... இந்தப் பக்கம் காத்து வீசுது..."

"ஆமாம்பா... அஞ்சு ரூவா காண்ட்ராக்ட் ஒண்ணு... ரொம்ப நாளா இழுத்துக்கிட்டே போவுது... அதான் நேர்ல வந்து அண்ணன் கிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டுப் போயிடலாம்னு வந்தேன்."

"தனியாவா வந்த... இந்த மாதிரி பெரிய காண்ட்ராக்டுக்கு வர்றப்போ, மாவட்டத்தையும் கூட்டிட்டு வரணும்பா."

திடீர்னு ரெண்டாவது ஃப்ளோர்ல ஒரே சத்தம்... என்னன்னு பார்ப்பதற்காகப் போனா, ஒரு அமைச்சரோட அறைக்குள்ள போறதுக்கு கரை வேட்டிக் கூட்டமொண்ணு முட்டி மோதிக் கொண்டிருந்தது. நாமும் கூட்டத்தோடு கூட்டமாக உள்ளே போனால், அம்மா மோதிரம் போட்ட ஒருத்தர், அமைச்சரிடம் பேசிக் கொண்டிருந்தார். விஷயம் என்னவென்றால், ஒரு வெயிட்டான காண்ட்ராக்ட் ஒன்று தி.மு.க.காரர் ஒருவருக்கு அவருடைய ஏரியாவில் ஒதுக்கப்பட்டு விட்டதுதானாம். காண்ட்ராக்ட்டை ரத்து செய்ய இவர் வலியுறுத்த.

# 'அம்மா'வுக்கே



அமைச்சரோ, "இதுக்கும் எனக்கும் சம்பந்தமில்ல... நீ கிளம்பு முதல்ல" என்று விரட்டாத குறையாகப் பேச, டென்ஷனில் கத்தியபடி வெளியேறினார் அந்த ரத்தம். அவர் பின்னாலேயே நாமும் ஓடிவந்து, கீழே உள்ள டூவீலர் ஸ்டாண்டில் மடக்கினோம்.

"இவனுக்காக எத்தனை பேரு கால்ல விழுந்து வோட்டு கேட்டிருக்கேன். ஆனா இன்னிக்கு... அத்தனை பேரு முன்னாடி.... வரட்டும், ஊர்ப் பக்கம் வரட்டும்" என்று பொருமியபடி வெளியேறினார்.



• மில்லர்

நாம் மீண்டும் இரண்டாவது ஃப்ளோருக்குச் சென்று கீழே பார்த்தால் அமைச்சர் கே.பி. அன்பழகன் மூச்சு வாங்க படிக்கட்டுகளில்

ஏறிக் கொண்டிருந்தார்... "ஏன், லிப்டில் வர வேண்டியதுதானே?" என்று கேட்டால், "அண்ணன் எப்போதுமே இப்படித்தான்" என்கிறார் அவருடன் வந்த கட்சிக்காரர்.

அவருடன் பேசிவிட்டுத் திரும்பினால் எதிரில் அமைச்சர் மில்லரின் அறை. உள்ளே சென்று, "என்ன ஸார்... தொகுதிக்குப் போறதில்லையாமே..." என்று கம்மனாச்சும் கேட்டு வச்சோம். "ஆஹா.. ஏதோ ஒரு முடிவோட வந்துட்ட மாதிரி தெரியுதே. ரொம்ப நேரமா இந்தப் பக்கம் சுத்திக் கிட்டு இருக் கீங்க.. நான் தொகுதிக்குப்

# அம்மா!






* அம்மா...ஆ!


போறதில்லைன்னு யார் சொன்னது... வாரத்துல ஒருநாள் சொந்த மாவட்டம். ஒருநாள் வெளி மாவட்டம்... ரெண்டு நாள் தொகுதி விசிட்டுதான் தெரியுமா... மீதி 3 நாளு கோட்டை... அதனாலதான் அம்மா ஆட்சியில சுற்றுலாத் துறை நல்லபடியா இருக்கு" என்று அம்மா புராணம் பாடத் துவங்க... நாம் விட்டோம் ஜூட்.

எல்லாம் முடிந்து, வெளியில் வரும்போது போட்டோ ஞாபகம் வர, கேமராவை வெளியில் எடுத்ததுதான் தாமதம்... எங்க நின்னுக்கிட்டு இருந் தாங்களோ தெரியல... ஏழெட்டு போலீஸ்காரங்க மஃப்டியில வந் துட்டாங்க... "யார் நீங்க..? எதுக்கு வந்தீங்க? ஏன் போட்டோ...? யார்கிட்டே பர்மிஷன் வாங்கினீங்க... ஐடி கார்டு எங்க...?" என்று ஆளுக்கொரு கேள்வி சரமாரியாக மிரட்டத் துவங்க, ஒருவழியாக மேட்டரைச் சொல்லிவிட்டு, வெளியில் இருக்கும் நாகாத்தம்மன் கோயிலை மட்டும் க்ளிக்கிக் கொண்டோம். இதுல என்ன சூப்பருன்னா, செகரட்ரியேட்ல வேலை பார்க்கும் ஒவ்வொருத்தரும் கோட்டைக்குள்ள போகும் போதும், திரும்ப வீட்டுக்குப் போகும்போதும் அம்மனை 'விஷ்' பண்ணிட்டுதான் போறாங்க... அம்மாவும்கூட சிக்கலான நேரத்துல இந்த 'அம்மாவை' கும்பிட்டுத்தான் கோட்டைக்குள்ள போவாங்களாம். அட அம்மாவுக்கே அம்மா!

- ஒற்றன்

படங்கள்: ரிச்சர்ட்





# ஆயிரம் மீட்டர் தடைகள்!

“பெங்களூர்ல நடந்த மீட்ல அஞ்சு ஜார்ஜ் என்னைக் கூப்பிட்டு, 'நல்லா பண்றே. வாழ்த்துக்கள்'னு சொன்னப்போ, என் கால் தரையிலேயே இல்லை” என்று சிலிர்க்கிறார், 100 மீ தடை ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவின் நெ.1 வீராங்கனையாக ஜொலிக்கும் கே.என். ப்ரியா. 100 மீ ஓட்டத்தில் தாம் ஜெயிப்பதற்கு சந்திக்கும் பல ஆயிரம் மீட்டர் தடைகளை நம்மிடம் பட்டியலிட்டார்.

**தடை 1:** விளையாட்டுல நுழையணும்னா, அதுவும் குறிப்பா தமிழ்ப் பெண்கள் நிறைய சவாலை சந்திக்க வேண்டியிருக்கு. பஸ்ஸுக்குக்கூட காசில்லாம கைவசம் ஏராளமான திறமையும், மனசு நிறைய ஆர்வமுமிருந்த எத்தனையோ பேர், கண்ணீரோட தங்களின் கனவுகளுக்கு விடை கொடுத்திருக்காங்க. இதெல்லாம் பார்த்தா, நமக்கும் சில சமயங்கள்ல பயமா இருக்கும். ஆனாலும் நல்ல உள்ளங்களோட வேண்டுதல் எனக்கு எப்பவும் இருக்கு.

**தடை 2:** ஒரு வீரர் சர்வதேச அளவுல ஜெயிச்ச பிறகுதான் 'நீ, நான்'னு ஸ்பான்ஸர் பண்ண போட்டி போடறாங்க. இது ரொம்பத் தப்பு. அடிமட்டத்திலிருந்து கிளம்பும்போது கைதூக்கி விடுங்க. இந்தியாவுக்கு ஆயிரம் சாம்பியன்கள் கிடைப்பாங்க. இப்போ நான் யு.எஸ்.ஸுக்கு ட்ரெயினிங் போகணும்னு ஆசைப்பட்டா, அதை நிறைவேற்ற யாராவது உதவுவாங்களா?

**தடை 3:** இந்திய விளையாட்டுல சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கு. நான் என்னதான் நெ.1 ப்ளேயரா இருந்தாலும், பஞ்சாப்ல நடக்குற ஆறுமாத கேம்புல கலந்துக்கிட்டாத்தான் சர்வதேசப் போட்டிக்கு அழைச்சிட்டு போவாங்க. இதுக்கொரு தீர்வு கிடைக்காதான்னு ஏங்கிக்கிட்டு இருக்கோம்.

**தடை 4:** கேரளா மாதிரி தமிழ்நாட்ல அத்லெட்டுக்கு ஆதரவு இல்ல. ஒரு கிரிக்கெட் ப்ளேயரைக் காட்டிலும் நாட்டுக்காக அதிகமாக உழைக்கிறோம். ஆனா பேரும் புகழும் யாருக்குப் போகுது? டி.வியில நாள் முழுவதும் நடிகைகளோட பேட்டியும் பாட்டும் போடறாங்களே, அப்படி ஒரு அத்லெட்டுக்கு, என்னைக்காவது மரியாதை பண்ணியிருக்காங்களா? இதை விடுங்க, அவ்வளவு பெரிய நேரு ஸ்டேடியத்துல, நாங்க ஓடறதை எத்தனை பேர் பார்க்குறீங்க? ஆதரவு, ஊக்கம் எதுவுமில்லாம 'ஒலிம்பிக்கில் மட்டும் பதக்கம் ஜெயிச்சிட்டு வா'ன்னா எப்படி முடியும்?

- **சநகன்**

படம்: **ஸ்ரீஹரி**

# "மாணவர்களால் சாதித்தேன்!"

அவரவர் விருப்பப்படி வாழ இங்கு யாருக்கும் அனுமதி கிடைப்பதில்லை. போகிற போக்கில், யார் யாரோ வந்து நம் தலையெழுத்தை நிர்ணயம் செய்வார்கள். சில சமயங்களில் அது அஃறிணையாகவும் அமைவது உண்டு. அரசு வேலையை உதறிவிட்டு,



ரியல் எஸ்டேட் பிஸினஸில் செழித்து ஓங்கலாம் என்றிருந்த அருணாசலத்துக்கு, ஒரு தொலைபேசி இணைப்பு அவரது வாழ்க்கையையே தடம் மாறச் செய்ததோடு, முற்றிலும் சம்பந்தமில்லாத ஜெராக்ஸ் பிஸினஸில் ஈடுபட வைத்து இன்று அவரை வெற்றி சிம்மாசனத்தில் அமர வைத்திருக்கிறது.

இன்றைக்கு, 'ஸ்டூடண்ஸ் ஜெராக்ஸ்' வாசற்படி ஏறாத மாணவனை சென்னையில் காண்பது அரிது. இப்படி மாணவர் கூட்டத்தையே தன் வசப்படுத்தியிருக்கும் இந்நிறுவனத்தின் உரிமையாளர் அருணாசலத்தால் எப்படி இந்த உயரத்தை எட்ட முடிந்தது? நாம் கேட்டதுதான் தாமதம்... நினைவலைகளில் மூழ்கத் தொடங்கினார் அருணாசலம்.



★ அருணாசலம்

"தஞ்சை மாவட்டம் திருக்கண்ணபுரம் பகுதியைச் சேர்ந்த எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான். பத்தாவதுக்கு மேல் படிக்க வழியில்லை. ஆனாலும் சுக்கிராமத்தில் பிறந்த எனக்கு எப்படியாவது அரசு வேலையில் புகுந்து குமாஸ்தா பணியில் அமர்ந்திட வேண்டுமென்று ஆசை.

அதுவரை கோயில் பணி, கொளுந்து வேலை என கிடைத்த வேலையைச் செய்து கொண்டிருந்தேன். 64ல் ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரின் பரிந்துரையில் 'திருமருகள்'

பஞ்சாயத்தில் குமாஸ்தா வேலை கிடைத்தது. நாளடைவில் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதித் தேர்வாகி, பொன்னேரி அரசு அலுவலகத்தில் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டேன். ஒரு ட்ரங்குப் பெட்டியுடன் சென்னைக்கு வந்திறங்கினேன்.

பயிற்சி முடித்து, 65ம் வருடத்திலிருந்து தொடர்ந்து 23 ஆண்டுகள் செங்கல்பட்டில் பணிபுரிந்தேன். 'லஞ்சம் வாங்கவில்லையென்றால் இங்கே வேலை செய்யாதே' என்று ஒரு அதிகாரி என்னிடம் மோதியதால், என் கைகளில் கறை படிய விருப்பமில்லாமல் வேலையை உதறினேன்.

பிறகு சென்னையில் நண்பர் ஒருவர் உதவியுடன் ரியல் எஸ்டேட் பிஸினஸில் ஈடுபட்டு செழித்து வளரத் தொடங்கினேன். எனக்குக் கீழ் ஐந்து பேர் வேலை செய்ததால் ஒரு தனி அலுவலகம் இருந்தால் நன்றாக இருக்குமே என்றெண்ணியபோது, அடையாரில் ஓர் அலுவலகம் தொலைபேசி இணைப்போடு விற்பனைக்கு இருப்பதாக அறிந்து ஓடோடிச் சென்றேன்.

அந்தக் காலத்தில் தொலைபேசி இணைப்பு வேண்டுமென்றால் மூன்று, நான்கு வருடங்கள் வரிசையில் காத்திருக்க வேண்டும். நிலவரம் இப்படியிருக்கையில், கரும்பு தின்னக் கூலியாக தொலைபேசி இணைப்போடு சேர்த்து கடையிருப்பது எனக்கு மிகவும் வசதியாகப் போனது. ஒரு லட்சத்து பத்தாயிரத்துக்கு 86ம் வருடம் அந்த இடத்தை வாங்கினேன். விற்றவர்கள் ஏற்கெனவே 'ஸ்டூடெண்ஸ் ஜெராக்ஸ்' என்ற பெயரில் ஒரு ஜெராக்ஸும், ஒரு டைப் ரைட்டிங் மெஷினும் வைத்து வியாபாரம் செய்து வந்தனர். அது சரியாகப் போகாததால் என்னிடம் விற்று விட்டார்கள்.

இந்த மெஷின்களை அப்புறப்படுத்தி விடலாமா என்ற யோசனையில் அடுத்த நாள் கடையைத் திறந்தேன். சிறிது நேரத்தில் அங்கே, முன்பு வேலை செய்த பெண்கள் வழக்கம் போல் வேலைக்கு வந்திருந்தார்கள். சரி, சரி... ஓர் ஓரத்தில் அமர்ந்து ஜெராக்ஸ், டைப்பிங்கென்று கஸ்டமர்கள் வந்தால் அதன் வேலையைக் கவனியுங்கள்' என்று கூறி நகர்ந்து விட்டேன். நானே எதிர்பாராத வகையில் நிறையப் பேர் ஜெராக்ஸுக்காக வர ஆரம்பிக்க, 'அட, இதையே பிஸினஸாகத் தொடர்ந்தால் என்ன' என்று புதிதாய் யோசனை பிறந்தது.

உடனே செயல்பட்டு, ரூபாய் 97,000த்தில் புது ஜெராக்ஸ் மெஷின் வாங்கினேன். நாளடைவில் வந்து குவியும் ஆர்டர்களை சமாளிக்க முடியாததால், ஆறு டைப் ரைட்டிங் மெஷின்களையும் வாங்கினேன். அன்று சென்னையில் எங்களைத் தவிர போட்டிக்கென்றுகூட இத் தொழிலில் யாரும் இல்லாமலிருந்தார்கள்.

88ம் வருடம் எலக்ட்ரானிக் டைப் ரைட்டிங் தோன்றி, மேனுவல் மெஷின்களை பின்னுக்குத் தள்ளியது. இதன் பின்னால் கம்ப்யூட்டரின் வருகை டி.டி.பி துறையில் பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. 1,65,000 ரூபாய் கொடுத்து லேசர் பிரிண்டர் வாங்கிய பிறகு, இத்தொழிலில் மேலும் வேகம் ஏற்பட்டது.

எலக்ட்ரானிக் டைப்ரைட்டிங் மெஷின் உபயோகித்து வந்த காலத்தில் ஆறு நிமிஷத்துக்கு ஒரு பக்கம்தான் டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டரில் எடுக்க முடியும்.

**"ஊழியர் நலனில் அக்கறை காட்டினால் நிறுவனத்தின் வளர்ச்சி அவர்கள் கையில்!"**



ஆனால் லேசரின் வரவுக்குப் பிறகு, ஒரு நிமிஷத்துக்கு ஆறு பக்கம் பிரிண்ட் அவுட் எடுக்க முடிந்தது. என் மகன் எலக்ட்ரானிக்ஸ் படித்திருந்ததால் அவன் ஆலோசனையின் பேரில் என்னால் தைரியமாக புதுப் புது மெஷின்களை வாங்க முடிந்தது. இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஒவ்வொரு நெருக்கடியான கட்டங்களிலும் எங்களின் வளர்ச்சியை நிர்ணயிப்பது ஐ.ஐ.டி, அண்ணா யுனிவர்சிட்டி போன்ற பயிலகங்களில் படிக்கும் மாணவர்கள்தான். கல்வியாண்டு இறுதியில் ப்ராஜெக்ட் பணிக்காக எங்களை அணுகும்பொழுது, அவர்கள் வைக்கும் கோரிக்கைகளும் கேள்விகளும்தான் தொழில்நுட்ப அளவில், மேலும் மேலும் எங்களை உயர்த்தியது. இப்பொழுது ஒரு நிமிடத்துக்கு 160 காப்பிகள் எடுக்கும் அயல்நாட்டு ஜெராக்ஸ் மெஷின்கள் எங்களிடம் மட்டுமே உண்டு.

89ம் வருடம் அண்ணா யுனிவர்சிட்டியின் துணைவேந்தரை அணுகி, ப்ராஜக்ட் பணியில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை விளக்கி, அதற்குத் தேவையான நடைமுறைகளை நான் பரிந்துரைத்தேன். அதை அவர் உடனே ஏற்றுக் கொண்டார். இதன் விளைவாக, ஸ்டூடண்ஸ் ஜெராக்ஸில் ப்ராஜெக்ட்டுக்குத் தேவையான டி.டி.பி வேலைகள், பைண்டிங் செய்தால் எவ்விதச் சிக்கலும் ஏற்படாது என்கிற கருத்து மாணவர்கள் மத்தியில் உருவானது. இதன்பின் சென்னைக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவச் செல்வங்களும் பெரு வாரியாக எங்களை நோக்கி வர ஆரம்பித்தனர்.

வருடா வருடம் 5,000 ப்ராஜெக்ட்டுகள், 500 ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவற்றுக்கான பணிகள் முழு வீச்சில், எந் நேரமும் எங்கள் அலுவலகத்தில் நடை பெற்றுக் கொண்டிருக்கும். உலகிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிடமிருந்தும் எங்களைத் தேடி வந்து ப்ராஜெக்ட்டுகள் செய்திருக்கிறார்கள். இன்று எங்களின் 22 கிளைகளில் 600 பேர் தேனீக்குண்டான சுறுசுறுப்போடு வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டைப்பிங், கரெக்ஷன்... என ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 70 பக்கங்களையாவது முடித்து விடுவார்கள். 70 ஜெராக்ஸ் மெஷின்கள், 160 கம்ப்யூட்டர்கள் இவையிரண்டும் ஓயாது இயங்கி, ஆண்டு வருமானமாக பத்து கோடியைச் சம்பாதித்துக் கொடுக்கின்றன. இதையெல்லாம் சாத்தியமாக்கிய மாணவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.



உழைப்பு மட்டுமின்றி, தொழிலில் நாளுக்கு நாள் ஏற்படும் நவீன மாற்றங்களை அறிந்து, அதற்குரிய வசதியை ஏற்படுத்தினாலொழிய வியாபாரத்தில் வெற்றியைத் தொட்டு விட முடியாது. அதோடு தொழிலில் எப்போதும் சுத்தம் இருக்க வேண்டும். 18 வருடங்களாக இயங்கி வரும் எங்கள் நிறுவனத்தின் மீது இதுவரை சிறு களங்கமும் ஏற்பட்டது கிடையாது. அறுநூறு ஊழியர்களும் என்னை 'அப்பா' என்றே அழைப்பார்கள். நமக்குக் கீழே வேலை பார்க்கும் ஊழியர்களின் நலனில் அக்கறை காட்டினால், பின்னர் நிறுவனத்தின் வளர்ச்சியை அவர்களே கவனித்துக் கொள்வார்கள்."

**- ச.ந.கண்ணன்**

படங்கள்: **ஸ்ரீஹரி**

# உள்ளே ஓர் உமா!

அந்தத் தெருவில், எல்லோர் வீட்டு ஜன்னல்களிலும் முகங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

வழக்கமான தகராறைவிட இன்று மீறிப்போய், தபால்காரர் வீட்டு மருமகள் தெருவில் நிற்கிறாள்.

பச்சை நிற வர்ணம் பூசிய பத்தாம் நம்பர் வீடுதான் தபால்காரர் வீடு. தபால்காரர் இறந்துபோய் இரண்டு வருடங்களாகிவிட்டன. ஆறு மாதங்களுக்கு முன்புதான் அவர் மகனுக்குத் திருமணமானது.

மருமகளை ஏனோ மாமியாருக்கு சீக்கிரமே பிடிக்காமல் போய்விட்டது. மகனோ, தாய் சொல்லே மந்திரமாய் நின்றான்.

பாவம், அந்தப் பெண்ணுக்கு தினசரி அடி, உதைதான். அழுகைதான். இதோ இன்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். நடுத்தெருவில் மலங்க விழித்தபடி நிற்கிறது அந்தப் பெண்.

ஜானகி அம்மாவும் அத்தனையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவர்களின் எதிர்வீட்டுக்காரி.

பொழுது நன்றாய் இருட்டியிருந்தது. டிசம்பர் மாதக் குளிர் வேறு. இந்த இரவு நேரத்தில் இனி அந்தப் பெண் என்ன செய்யப் போகிறது?

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் ஜானகியம்மாள்.

க்ளைமேக்ஸ் முடிந்துபோன திருப்தியில், தெருவின் ஜன்னல் முகங்கள் விலக ஆரம்பித்ததைப் பார்த்தாள்.

ஜானகியம்மாள் அவள் அருகில் சென்று அணைத்துக் கொண்டாள். அந்தப் பெண்ணின் உடம்பு நடுங்கிக் கொண்டிருப்பது புரிந்தது. பயமா இல்லை குளிரா?

"வா" என்று தன் வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள். சூடாக டீ போட்டுத் தந்தாள்.

நல்ல பசி போலும். உறிஞ்சி, உறிஞ்சிக் குடித்தாள்.

"உன் பெயர் உமாதானே?"

அந்தப் பெண் தலையசைத்தாள். கூடவே அழ ஆரம்பித்தாள். அவள் அழுகை அடங்கக் காத்திருந்தாள் ஜானகியம்மாள்.

"எல்லாம் வெளியே போயிடுச்சா?"

உமா புரியாமல் விழித்தாள்.

"துக்கமெல்லாம் போயிடுச்சான்னு கேட்டேன். இதுதான் உன்னிடம் நான் பார்க்கற கடைசி அழுகையாயிருக்கணும். கோழைத்தனத்தின் வெளிப்பாடுதான் அழுகை, புரியுதா?"

உமா மௌனமாய் இருந்தாள். எம்.எஸ். சுப்புலட்சுமியின் சங்கீத சி.டி.யை போட்டுவிட்டாள் ஜானகியம்மாள்.

அரைமணி நேரம் ஓடியது. நல்ல சங்கீதம் காது வழியே நுழைந்து, மனதின் கீறல்களை ஆற்றும். எரிச்சலைத் தணிக்கும். மனம் சாந்தி பெறும்.

சமையலறைக்குள் போய் இரண்டு தட்டுகளில் தயிர்

**விமர்சிக்கிறார் டி.டி.பி. ஆபரேட்டர்...**

உமாவைப் போல் ஒவ்வொரு பெண்ணும் மாறிவிட்டால் மங்கையர் சக்தி மகத்தான சக்தியாகிவிடும். வெல்டன் டு கிருஷ்ணா.

- கதிரவன்





கிருஷ்ணா

சாதமும், மாவடும் கொண்டு வந்தாள்.

''சாப்பிடு'' என்று ஒரு தட்டை நீட்டினாள்.

சாப்பிடும் போதே உமா தன் வீட்டுப் பிரச்னையைச் சொன்னாள்.

இவள் பிறந்தவீடு சாதாரண ஏழை நடுத்தரக் குடும்பம். இன்னும் நகையும், சீரும் கேட்டு மாமியார் கொடுமைப் படுத்துகிறாள்.

அடுத்த நாள் காலை தூங்கி எழுந்ததும் உமா கிளம்ப ஆயத்தமானாள்.

"எங்கே?" என்று கேட்டாள் ஜானகியம்மாள்.

"அம்மா வீட்டுக்குத்தான்"

"அவர்களே கஷ்டநிலையில் இருப்பதாய்ச் சொன்னாய். உன் வரவை அவர்களால் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ள முடியுமா?"

உமா விழித்தாள்.

"உன் வயது என்ன?"

"இருபத்தி நாலு"

"இந்த வயதில் உன் பிரச்னையை நீ சமாளித்துக் கொள்ள வேண்டாமா? ஏன் அடுத்தவர்களைச் சார்ந்தே இருக்க நினைக்கிறாய்?"

ஞானகியம்மாளின் குரலில் அதட்டல் இருந்தது.

"நான் என்ன செய்ய முடியும்?" என்று கேட்ட உமாவை உறுத்துப் பார்த்தாள்.

"நீ யார்?"

"நான் யாருன்னா... அது, உமா"

"உமா உன் பெயர். ஆனாலும் நீ யார்?"

உமாவுக்குச் சத்தியமாய்ப் புரியவில்லை.

"சரி, என்னைப் பற்றிச் சொல்கிறேன். எனக்கு ஓவியம் வரையத் தெரியும், புத்தகங்களைத் தேடித் தேடிப் படிக்கப் பிடிக்கும், நல்ல சங்கீதத்தை இரசிக்கப் பிடிக்கும். வெட்டியாய் வம்பு பேசப் பிடிக்காது. முக்கியமாய் அழும் பெண்களைக் கண்டாலே கோபம் வரும். இதுதான் நான். இப்போது நீ யார் என்று சொல்லு"

உமா யோசித்தாள்.

"அது... எனக்கும் பாட்டு பிடிக்கும். பக்கத்து வீட்டுல இருந்த மாமிகிட்டே பாட்டு கத்துக்கிட்டேன். வாய்ப்பும், வசதியுமிருந்தால் என் குரலுக்கும், ஞானத்துக்கும் பெரிய அளவில் வரமுடியும்னு மாமி அடிக்கடி சொல்லுவாங்க. அப்புறம்... ப்ளஸ்டூ வரைக்கும் படிச்சிருக்கேன். ஆனால் இந்தியில பிரவீண் உத்தராத் வரைக்கும் பாஸ் பண்ணியிருக்கேன். எங்க அப்பாவே இந்தி மாஸ்டர்தான். அப்புறம்... ம்... மழை பிடிக்கும்... ம், சண்டைப் படம் பிடிக்கும்"

குழந்தையைப் போன்ற உற்சாகத்துடன், நினைத்து நினைத்து யோசித்து, தனக்குத் தெரிந்ததையெல்லாம் பட்டியலிடும் உமாவை, புன்சிரிப்புடன் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

"அடேங்கப்பா, உமான்னா இவ்வளவு சரக்கும், ஞானமும் உள்ள பெண்ணா? அப்புறம் ஏன் நீ யாருன்னு கேட்டப்ப விழிச்சே?"

உமா வெட்கமாய்ப் புன்னகை செய்தாள்.

"எனக்கே என்னைப் பற்றி மறந்து போச்சு"

ஞானகியம்மாள் பலமாய் தலையை அசைத்தாள்.

"இதுதான் நம்ம பெண்களின் பலவீனமே. பெற்றோருக்குப் பெண்ணாய், கணவனுக்கு மனைவியாய், குழந்தைகளுக்கு அம்மாவாய் மாறி, தங்களோட சுய அடையாளத்தை இழந்துடறாங்க. பெற்றோரும், கணவரும், குழந்தைகளும் வாழ்க்கையில எவ்வளவு முக்கியமோ, அதே முக்கியத்துவம் உள்ளதுதான் சுய அடையாளமும். உறவுகளுக்காக தன்னையும் மறந்துடக் கூடாது. தன் சுயநலன் கருதி உறவுகளையும் விட்டுடக் கூடாது. இந்த சமச்சீர் விகிதம்தான் வாழ்க்கை"

ஞானகியம்மாவின் பேச்சு உமாவின் உள்ளே சொட்டுச் சொட்டாய் இறங்கி, அவளை பிரமிக்கவும், சிந்திக்கவும் வைத்தது.

"இப்படி வா" என்று பூஜை அறைக்குள் கூட்டிச் சென்றாள் ஞானகியம்மாள்.

"கடவுளை வேண்டிக்கோ. இந்தா இந்த அட்டையைப் பிடி" என்று கூடவே பேனாவையும் எடுத்து நீட்டினாள்.

"எதுக்கு?"

"எழுது! 'இங்கு இந்தி கற்றுத் தரப்படும்!' இன்னொரு அட்டையில 'கர்நாடக சங்கீதம் கற்றுத் தரப்படும்' ஊசி, நூல் அந்த டப்பாவில் இருக்கு

இங்கிலாந்து எனக்கு இன்னொரு தாய்வீடு மாதிரி. அங்குள்ள மக்கள் எஃப்.1 ஃபார்முலா ரேஸ் பத்தி நிறைய தெரிஞ்சு வச்சிருக்காங்க. எனக்கு ஏராளமான பெண் ரசிகைகளும் அந்த நாட்டில் உண்டு.

- நாராயண் கார்த்திகேயன்

**எனக்குப் பிடிச்ச நாடு...**



பாரு"

அடுத்த பத்து நிமிடத்தில் அந்த வீட்டு வாசலில் இரண்டு அட்டைகளும் தொங்கின.

கொஞ்சம் கொஞ்சமாக வகுப்புகள் சூடு பிடிக்க ஆரம்பித்தன. முதலில் நாலைந்து மாணவர்கள் என ஆரம்பித்த இரு வகுப்புகளிலும், உமாவின் சிரத்தையையும், ஞானத்தையும் கண்டு, அதிக சிறுவர், சிறுமிகள் சேர்ந்தனர்.

இரண்டு மாதங்கள் ஓடிய பிறகு, ஜானகியம்மாள் உமாவை அழைத்தாள்.

"ஏன் வீட்டுக்குள்ளேயே எப்பவும் அடைஞ்சு கிடக்கறே?"

"அது வந்து..."

"புரியுது! எதிர்வீட்டில் புருஷன். கூடவே தெருப் பெண்களின் பார்வை. விட்டுத் தள்ளு. இப்போது நீ உமா, இந்தி டீச்சர் உமா. கோயிலுக்குப் போ. கம்ப்யூட்டர் வகுப்பில் சேர். ஏதாவது பட்டப் படிப்பில் தொலைதூரக் கல்வித் திட்டம் மூலம் சேர்ந்து படி. இதோ பார், இனி இந்த வலது பக்க அறை உன் அறை."

"எனக்கு எதுக்கும்மா தனி அறை எல்லாம்?"

"உனக்குன்னு ப்ரைவசி இருக்கும். சென்ட் அடிச்சுக்கலாம், உடைகளை தளர்த்தி விட்டுண்டு படுத்துக்கலாம், அட, உன் விருப்பமான சினிமா நடிகர் படத்தையோ, பிடித்த சாமி படத்தையோ மாட்டிக்க விரும்பலாம். எப்போது மனதும், வயிறும் மனுஷங்களுக்கு தனித் தனியாய் இருக்கோ, அப்போதே விருப்பங்களும் தனிதான்" என்றாள்.

அன்று உமா கனத்த மௌனமாய், எதையோ யோசித்தபடி அமர்ந்திருப்பதைக் கண்டாள் ஜானகியம்மாள்.

"என்ன உமா, எதையோ சொல்லத் தயங்குவது போல இருக்கு."

உமா தலையசைத்தாள்.

"அம்மா, நேற்று கோயிலில் அவர் வந்து பேசினார்."

"எவர்? ஓ... உன் கணவரா, சொல்லு."

"மன்னிப்புக் கேட்டார் நடந்ததுக் கெல்லாம். நம்ம வீட்டுக்கே வந்துடுன்னு கெஞ்சினார்."



## எனக்குப் பிடிச்ச பாட்டு...

'சந்திரமுகி'யில வர்ற 'ரா.. ரா..' பாட்டு வித்தியாசமா, என்னைக் கவருகிற மாதிரி அமைஞ்சிருக்கு. அந்த பாட்டுல வித்யாசாகரோட இசை தூள். ஜோதிகாவோட டான்ஸ் தூள் தூள்!

- ஓவியர் ராமு

"ஓ!"

"நான் என்னம்மா செய்யட்டும்?"

ஜானகியம்மாள் சிரித்தாள்.


"அந்த வீட்டிலிருந்து வெளியே வரும்போது குழப்பமாய் இருந்தாய். நீ யார் என்றே தெரியாமலிருந்தாய். இப்ப உமா என்பவள் தன் சொந்தக் காலில் நிற்பவள். தன் முடிவுகளைத் தானே எடுக்கும் தைரியமும், தெளிவும் கொண்டவள். இது உன் வாழ்க்கை. நீதான் முடிவு செஞ்சுக்கணும்."

சற்று நேரம் மௌனமாய் அமர்ந்திருந்த உமா, ஜானகியம்மாவின் கைகளைப் பிடித்தபடி பேசினாள்.

"அவருடன் மறுபடியும் பேசறேன். அவருக்கு வேண்டியது பழைய பயந்தாங்குளி உமான்னா, அது நான் இல்லைன்னு புரிய வைக்கிறேன். இப்ப உமான்னா, பாட்டு டீச்சர், இந்தி டீச்சர்னு தனக்குன்னு சுய அடையாளம் உள்ளவள்னு எடுத்துச் சொல்றேன். என்னை இந்த அடையாளங்களோடு அங்கீகரிக்கற மனசு அவருக்கு இருந்தால், எனக்கும் அவரோடு வாழ்வதில் சம்மதமே. வாழ்க்கை என்பதே பரஸ்பர புரிதலும், அப்படிப் புரிந்து கொண்டதை உணர சேர்ந்து வாழ்வதும்தானே"

பளிங்கு புத்தியுடன் வாழ்க்கையை அணுகும் உமாவை, ஜானகியம்மாள் சந்தோஷமாய் அணைத்துக் கொண்டாள். ●

EXCLUSIVE EXCLUSIVE EXCLUSIVE



# ரஜினியுடன் ஒரு

'சந்திரமுகி' ஹிட்டானாலும் ஹிட்டாச்சு... எந்தப் பத்திரிகையின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் ரஜினி அழிச்சாட்டியம்தான். எங்கே நாமும் அவரைப் பற்றி நல்லவிதமாக நாலு வார்த்தை எழுதாவிட்டால் கற்கால மனிதர்களாகி விடுவோமோ என்கிற பயத்தில் 'கற்பனை' பத்திரிகையின் பழுத்த நிருபர் பஞ்சபூதமும், புகைப் படக்காரர் பல்லிநாதனும் சூப்பர் ஸ்டாரின் பொட்டானிகல் கார்டனுக்கு மாநகரப் பேருந்தில் ஃபுட்போர்டு அடித்து தலைதெறிக்க விரைகின்றனர். வீடு தேடி ஓடி வருபவர்களை தெருமுனையிலேயே மடக்குகிறார் ரஜினி.

**ரஜினி** : எங்க வந்தீங்க?

**பஞ்சபூதம்** : (மூச்சிரைக்க) பேட்டிக்கு சார்... ப்ளீஸ்...

**ரஜினி** : கண்ணா! கிடைக்கிறது கிடைக்காம போகாது. கிடைக்காம இருக்கிறது கிடைக்கவே கிடைக்காது. ஸோ...

**பஞ்ச்** : ஸார்! (வேர்த்துக் கொட்டுகிறது)

**ரஜினி** : ஹாஹ்... ஹாஹ்... ஹாஹ்... சும்மா தமாசு. வாங்க வாங்க ஸ்டில்ஸ் எல்லாம் ரெடியா வைச்சிருக்கேன் (என்றபடி நிருபரின் கன்னத்தைக் கிள்ளி) ச்சோ ஸ்வீட்! இப்போ என்னவா வொர்க் பண்றீங்க?

**பஞ்ச்** : நான் ரிப்போர்ட்டர் சார். டென் இயர்ஸ் எக்ஸ்பீரியன்ஸ்

**ரஜினி** (சட்டென்று முகம் சுருங்குகிறது) : என்னங்க இப்படி பண்ணிட்டீங்க. யூ ஸீ, நான் இப்போல்லாம் ஒன்லி எக்ஸ்கியூடிவ் பீப்பிள்கிட்ட மட்டும்தான் மூவ் பண்றது. இது உங்களுக்குத் தெரியாதா... (சலிப்புடன்) இட்ஸ் ஓ.கே. கேரி ஆன்.

(பேசியபடி பிரம்மாண்ட வீட்டுக்குள் விரைகின்றனர். குளிரூட்டும் அறையில் கதகதப்பான பேட்டி ஆரம்பமாகிறது).

**பஞ்ச்** (கையில் பேப்பர், கட்ட பேனா சகிதம்) : அதெப்படி ஸார், எல்லா பத்திரிகைகளையும் ஈஸியா கவர் பண்றீங்க?

# 'லொக்கு லொக்கு' சந்திப்பு..!

**ரஜினி** *(படு உற்சாகமாக தலையைக் கோதிவிட்டு)* : த்தேங்க்யூ த்தேங்க்யூ த்தேங்க்யூ... இதுல காமெடி என்னன்னா, கல்யாணம், மஞ்சள் நீராட்டு விழா, காது குத்து, அஞ்சாம் நாள் காரியம்னு எல்லா பத்திரிகையிலும் என் போட்டோ, பேட்டி இருந்தாத்தான் ஃபங்க்ஷனுக்கு கூட்டமே வருதாம்.

**பஞ்ச்** : உங்க 'சந்திரமுகி' படத்தை மலையாளமா, கன்னடமா, எதிலிருந்து தழுவினீங்க?

*(இதைக் கேட்டவுடன் திடீரென உணர்ச்சிவசப்பட்டவராய் இருக்கையிலிருந்து எழுந்து வந்து நிருபரை ஆரத் தழுவிக் கொள்கிறார் ரஜினி. 'இது ஸீனு' என்று 'கிளிக்'கித் தள்ளுகிறார் பல்லிநாதன்)*

**ரஜினி** : *(மெல்ல தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு)* எங்களுக்கே தெரியலைங்க. அதான் நிஜம். நான் ஒரு முறை யாருக்கும் தெரியக்கூடாதுன்னு பாரதியார் வேஷம் போட்டுட்டு, பெங்களூர் தியேட்டர்ல படம் பார்க்கப் போனேன். யூ நோ, படம் ஆரம்பிச்சதிலிருந்து தியேட்டர்ல அப்படியொரு பின் ட்ராப் சைலன்ஸ். பின்னே, அந்த டப்பா படத்தை தியேட்டர்ல பார்த்திட்டிருந்தது நான் மட்டும்தானே. அப்பவே முடிவு பண்ணிட்டேன். இது தமிழ்நாட்டுல பிச்சிக்கும்னு.

*(பேசப் பேச ரஜினிக்கு 'லொக்கு லொக்கு' என இருமல் வருகிறது. அப்பொழுது சூப்பர் ஸ்டார் 'லகலகலக' வெனச் சிரித்தார் என்று குறிப்பெழுதிக் கொள்கிறார் பஞ்ச்)*

**பஞ்ச்** : ஆன்மிகத்துல உங்களுக்கு எப்ப கில்பான்ஸி, அதான் ஆசை உருவாச்சு?

**ரஜினி** *(சோகமாக)* : கல்யாணம் பண்ணினேன் சார். ஆட்டோமேடிக்கா ஆன்மிகம் பக்கம் திரும்ப வேண்டியதாய் போச்சு. நெக்ஸ்ட் கொஸ்டீன்.

**பஞ்ச்** : இமயமலையோ, பரங்கிமலையோ எங்கேயோ போய்க்கோங்க... ஆனா ஏன் பொந்துக்குள்ள சந்துக்குள்ள தலை வுடறதையெல்லாம் விளம்பரமாக்கி ஸ்பான்சர் பிடிக்கிறீங்க? *(அந்த சமயத்தில் அனைவருக்கும் ஆவி பறக்க காபி வருகிறது)*

**ரஜினி** : பஞ்ச், இங்கே பாருங்க காபியில ஜோதிகா பறக்குறாங்க. உஹாஹ்.. ஹாஹ்... ஹாஹ்... ஆங். ஏதோ கேட்டீங்கள்ல... சொல்றேன். இமயமலை போய் நொந்து, நூடுல்ஸா திரும்பி வந்தா, பாருங்க இங்கே ஒரு பய அதை நம்ப மாட்டேங்கிறான். பின்னாடி நின்னுட்டு





## எனக்குப் பிடிச்ச தலைவர்...

பெரியாரைப் பிடிக்கும்னாலும் அதே அளவுக்கு அம்பேத்காரையும் பிடிக்கும். தர்க்கவியல் தத்துவத்தைப் படிச்சு, அதன்படி நடந்த ஒரே தலைவர் அவர் மட்டும்தான். இந்தக் காரணம் ஒண்ணு போதாதா...

- பெரியார்தாசன்

ரீல் சுத்தறாங்க. வம்பே வேண்டாம்னு, எங்க போனாலும் அத்தாட்சிக்கு போட்டோகிராபர், வீடியோகிராபர், ஸ்டெனோகிராபர்னு ஒரு படையோடு கிளம்பிடறது. இப்படிதான் ஒரு முறை நான் இமயமலை போனப்போ... *(என்றபடி ரஜினி ப்ளேடு போட ஆரம்பிக்க, இதற்கிடையில் ஒரு குட்டித் தூக்கம் போட்டு எழுகிறார் பஞ்ச்)*

**பஞ்ச்** : *(கொட்டாவி விட்டபடி)* சார், தனுஷுக்காக உங்ககிட்ட பொண்ணு கேட்டு வந்த கஸ்தூரிராஜா, வரதட்சணையா 'சூப்பர் ஸ்டார்' பட்டத்தைக் கேட்டதா 'குசுகுசு'ன்னு வெளியில பேசிக்கறாங்களே.

**ரஜினி** *(சட்டென்று சிவாஜி குரலில்)* : நம்ம மாப்பிள்ளைக்கு சிகரெட் என்ன, பீடியைக்கூட ஒழுங்கா கையில பிடிக்க முடியலையேப்பா. இதுல சூப்பர் ஸ்டார் பட்டம் எப்படி கொடுக்கறது சொல்லு.

**பஞ்ச்** : ஓ.கே. சார். உங்க அடுத்த படம்?

**ரஜினி** : இதோ உங்க போட்டோகிராபர் இப்போ எடுக்குற படத்தையெல்லாம் கழுவி பிரிண்ட் போட்டுக் கொடுத்தார்னா, அதான் என்னுடைய அடுத்த படம். *(என்றபடி 'ஹலோவ்' என்று குரல் கொடுக்க, இரண்டு புத்தகக் கட்டுகள் வருகின்றன.)*

**ரஜினி** : போற வர்ற பொண்ணுங்களையெல்லாம் ஒண்ணு விடாம டீஸ் பண்ணிட்டிருந்த ஒரு 'கப்பு' சாமியார், கடைசியா மனம் திருந்தி, 'பரங்கிமலை ஏறுவது, இறங்குவது. சர்ர்ர்....னு சறுக்குவது எப்படி'ன்னு எழுதின பழைய பொஸ்தகம் இது. *(நன்றாக தூசி தட்டி கொடுக்கிறார்)*

**பஞ்ச்** *(தும்மியபடி)* : ம்... தேங்க்யூ சார். உங்களோட இந்த பிஸியான டைட் ஷெட்யூல்லயும் *(ஹச்... ஹச்.. ஹச்!)* ஸாரி... எங்களுக்கு நேரம் ஒதுக்கி தந்ததுக்கு மிக்க நன்றி. *(என்றபடி மீண்டும் இரண்டு தும்மல் போட்டுவிட்டு பல்விநாதனுடன் கிளம்ப 'ஸ்டா...ப்' என்று அலறுகிறார் ரஜினி)*

**ரஜினி** : ஏங்க? என்னை இப்படி அசிங்கப்படுத்தறீங்க. படியேறி என் வீட்டுக்கு வந்துட்டு ஒத்தை பேட்டியோடவா போறது. ஷேம் ஷேம்... பப்பி ஷேம் *(மிகவும் ஃபீல் ஆகிறார்)*. எங்க வீட்டுக் குலவிளக்கை, கோதுமை மாவை, நாதஒலியை நீங்க பேட்டி எடுக்க வேணாம்! ஹலோவ்... நிருபர் வந்திருக்காக... போட்டோகிராபர் பல்விநாதன் வந்திருக்காக.. வாம்மா இடி மின்னல்!

*(கூப்பிட்ட குரலுக்கு பாரதிராஜா பட ஹீரோயின் போல ஸ்லோமோஷனில் துள்ளித் தாவி வருகிறது. டாமி! வந்த வேகத்தில் தன் எஜமானரின் காலைப் பிறாண்ட, ரஜினி அதைத் தூக்கி வைத்து மூக்கோடு மூக்கு உரசி...)*

**ரஜினி** : இங்க பாருடா செல்லம். நீ பத்திரிகையில வரப்போறடா. உன் பேட்டியைப் படிச்சு தமிழ்நாடே அலறணும். ஓ.கே.வா.. பல்வி சார்.. என்ன பார்த்துட்டிருக்கீங்க. படம் எடுங்க.

*(பஞ்ச்சும், பல்விநாதனும் ஒருவரையொருவர் வெறுப்புடன் பார்த்துக் கொள்கின்றனர். டாமி மிகுந்த ஆர்வத்துடன் காலைத் தூக்கி கூலாக போஸ் கொடுத்துக் கொண்டிருக்க, வேறு வழியின்றி அடுத்த பேட்டிக்குத் தயாராகி...)*

**பல்விநாதன்** : டாமி, ஸ்மைல் ப்ளீஸ்!

கற்பனை : **பப்பி**

## சூப்பர் மிக்ஸி... சூப்பர் சமையல்... சூப்பர் விலையில்...

45 Years of Convenience

# விஜய்

அறிமுகப்படுத்தும்
சூப்பர் எக்கோ மிக்ஸி



ரூ.1895/-
மட்டுமே

* அதிக திறன் வாய்ந்த மோட்டார் * ஷாக் புரூப் ABS பாடி
* கவர்ச்சிகரமான மூன்று ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜார்கள்
* ஓவர்லோடு கட் ஆப் சுவிட்ச

Vijay®
A friend of your family

விஜய் ஹோம் அப்ளையன்சஸ் லிமிடெட்
தலைமை அலுவலகம்: 27, A&B, கிருஷ்ணஸ்வாமி அவின்யூ, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை – 600 004. ✆ 5210 6622 / 33 / 44


கிளைகள் மற்றும் சேவை மையங்கள்:
• சென்னை ✆ 2860 0667 • கோயம்புத்தூர் ✆ 255 2904 • மதுரை ✆ 253 0741 • பாண்டிச்சேரி ✆ 224 0790 • பெங்களூர் ✆ 2670 1487 • எர்ணாகுளம் ✆ 236 7285 • ஹைதராபாத் ✆ 2475 5142 • விஜயவாடா ✆ 257 6366 • விசாகப்பட்டினம் ✆ 275 0095 • ராய்பூர் ✆ 252 6249 • புவனேஸ்வர் ✆ 253 0654 • நாக்பூர் ✆ 221 974

வெற்றிகரமான
19–ஆம்
ஆண்டில்

ஏராளமான ஓவிய ஆசிரியர்களை
உருவாக்கிய ஒப்பற்ற கலைக்கூடம்
பலரும் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர்.
அஜந்தாவின் அர்ப்பணிப்பில் உங்களையும்/
இணைத்துக் கொள்ளுங்கள்.

# ஓவிய ஆசிரியர் பயிற்சி

வீட்டில் இருந்தபடியே தபால் மூலம் படிக்கலாம்.




நேர்முகப் பயிற்சியும் உண்டு. கல்வித்தகுதி
SSLC, +2 ஆண்கள், பெண்கள்.
அரசுச் சான்றிதழ்.

*வரும் நவம்பரில் தமிழ்நாடு அரசுத் தொழில் நுட்பத்தேர்வு Freehand Drawing - Higher Grade தேர்வு எழுதி நீங்களும் ஓவிய ஆசிரியர் ஆகலாம்.*

உங்கள் முகவரியை
ஒரு தபால் கார்டில்
எழுதி அனுப்புங்கள்.
அல்லது தொலைபேசியில்
தெரிவியுங்கள். இலவச
விவரப்புத்தகம் உங்கள்
வீடு தேடி வரும்.

**AJANTHA SCHOOL OF ARTS** (Govt Regd)
No. 6, Muthu Nagar, (Near Sundar Thirumana Mandapam),
Poonamallee, Chennai - 600 056.
Ph : 044 - 26490363, Cell : 9381050477




**ஆ**ளில்லா வீடு என்பதை, தனிமையில் கதறும் தொலைபேசியே சொல்லிவிடும். எத்தனை பேர் இருந்தாலும், உறைபனி போல் படிந்து கிடக்கும், அலாதியான அமைதியைத் தக்க வைத்திருக்கும்



# ஆஷ்ட்ரே



எங்கள் வீட்டின் தொலைபேசி ஓசையை, தெருவில் வரும்போதே தெளிவாய்க் கேட்கலாம். ஒவ்வொரு அழைப்புக்கும், கனிவாகக் காது கொடுத்து பொறுமையாக பதில் சொல்வார் அம்மா. அபூர்வமான சந்தர்ப்பங்களில் நானோ, தம்பி, தங்கையோ அட்டெண்ட் பண்ணுவோம்.

நன்றாக நினைவிருக்கிறது. கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வேலை தேடி அலைந்து கொண்டிருந்த நேரம். ஒருநாள் காலை 9.05 மணிக்கு வந்த தொலைபேசி அழைப்பு, எனக்குள் ஒளிந்து கிடந்த மிருகத்தை உசுப்பிவிட்டது. சுள்ளென்று கோபம் தலைக்கேற, மோட்டார் சைக்கிளில் சீறிப் புறப்பட்டேன். கற்பகம் ஸ்டுடியோவிலிருந்து வந்த கால் அது. அன்று அங்கேதான் அப்பாவுக்கு படப்பிடிப்பு. ஆனால் கற்பகம் ஸ்டுடியோ எங்கே இருக்கிறதென்று எனக்குத் தெரியாது!

ஒரு மாதம், இரண்டு மாதம் என வெளியூர் படப்பிடிப்பில் மூழ்கிவிடும் அப்பாவைப் பார்க்க, சிறுவயதில் அம்மா எங்களை அழைத்துப் போவார். ஆனால் இருபத்திரண்டு வயது வரை சென்னையிலிருக்கும் எந்த சினிமா ஸ்டுடியோவுக்கும் நான் போனதில்லை. எந்த ஸ்டுடியோ,, எந்த திசையில் இருக்கிறது என்பதே தெரியாமல் வளர்ந்து விட்டேன். சினிமா வேறு, வீடு வேறு

• நெ.15, கிருஷ்ணா தெரு, தி.நகர்...



# இல்லாத வீடு!

எனப் பிரித்துக் கொண்டு அப்பா வாழ்க்கையை அமைத்திருந்ததுதான் காரணம். "இப்போது கற்பகம் ஸ்டுடியோவுக்கு போ!" என்று எனது கோபம் ஆவேசமாய் துரத்த, பாண்டி பஜார் ஆட்டோ ஸ்டாண்டில் விசாரித்துக்கொண்டு வடபழனி நோக்கி விரைந்தேன்.

காலந்தவறாமையை வெளியே யாரிடமும் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கில்லாமலேயே போய் விட்டது! ஏழு மணிக்கு படப் பிடிப்பு என்றால், குறைந்தது அரை மணி நேரமாவது முன்கூட்டியே ஸ்பாட்டுக்குப் போய்விட வேண்டும் என்பதை தவம் மாதிரி பின் பற்றுகிறவர் அப்பா.

'ராஜராஜ சோழன்' படப்பிடிப்பில், ஒப்பனை, சர்வ அலங்காரங்களோடு காலை ஆறே முக்காலுக்கு நடிகர் திலகம் சிவாஜி செட்டுக்கு வந்தாரென்றால், அப்பா ஆறேகாலுக்கே போய்விடுவாராம். 'சிந்துபைரவி' படப்பிடிப்பில் "ஒரு நாளாவது உனக்கு முன்னால் வந்து காட்டறேன் பார்" என்று சவால் விட்டு தோற்றுப்போன இயக்குனர் சிகரம் கே.பி, "வேண்டாண்டா, இந்த விஷயத்தில உன்னை ஒண்ணும் செய்ய முடியாது" என்று பாராட்டியிருக்கிறார்.

அப்படிப்பட்டவரை "சார் இன்னும் ஸ்பாட்டுக்கு வரல! வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டாரா?" என்று கேட்டு முதல் போன். போனை எடுத்த அம்மா, "பத்து மணிக்கு வந்தாப் போதும்னு அசோஷியேட் நேத்து சொல்லியிருக்கிறார். இருந்தாலும் எட்டே முக்காலுக்கே அவர் கிளம்பிட்டாரே... இந்நேரம் ஸ்டுடியோவை நெருங்கியிருப்பார்..." என்று பதில் சொன்னார். அடுத்து இரண்டு நிமிடம் கூட ஆகியிருக்காது. மறுபடியும் போன். இந்தமுறை முதலில் பேசிய அதே உதவி இயக்குனர், "இன்னும் சார் வந்து சேரலீங்க! உண்மையிலேயே கிளம்பிட்டாரா?" என்று கேட்டிருக்கிறார். துணுக்குற்ற அம்மா "பொய் சொல்ல ஒரு அவசியமும் வந்துடல தம்பி" என்றார்.

மூன்றாவதாய் அலறிய போனை நான் ஓடிப்போய் வெடுக்கென்று எடுத்தேன். எதிர்முனையில் பேசுவது யார் என்பதைக்கூட கேட்காத அவரிடம், "நான் சிவகுமார் சார் பையன் சரவணன் பேசுறேன்! நீங்க யார் பேசுறது?" என்றேன். ஆனால் அவரோ "உங்க அப்பா கிளம்பி விட்டாரா இல்லையா? செட்ல எல்லோரும் காத்துக்கிட்டு இருக்காங்க" என்றார்

படபடப்பாக. நான் கொதிநிலைக்குப் போனேன். அத்தனை டிராஃபிக்கிலும் ஆக்ஸிலேட்டரைத் திருகிய திருகில், அடுத்த இருபதாவது நிமிடம் கற்பகம் ஸ்டுடியோ வந்துவிட்டது.

வண்டியை நிறுத்திவிட்டு நேரே செட்டுக்குள் போய் உட்கார்ந்தேன். பதற்றத்துடன் என்னைப் பார்த்த அப்பாவுக்கு அதிர்ச்சி. "என்னப்பா திடீர்னு?" என்றார். படப்பிடிப்பில் இருந்த அத்தனை பேர் பார்வையும் என் பக்கம் திரும்ப, "உங்கப்பா லேட்டு! இன்னும் கிளம்பலையான்னு எரிச்சலோடு தொடர்ந்து மூன்று தடவை ஒருவர் போன் பண்ணினார். அவர் மூஞ்சியைப் பார்த்துட்டுப் போலாம்னு வந்தேன்" என்று குரலை உயர்த்திக் கத்தினேன். "என்ன தம்பி... என்ன பிரச்னை?" என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்த இயக்குனர், "யாருடா அவன் மரியாதை இல்லாமல் போன் பண்ணி பேசினவன்?" என்று குட்டி நாடகமாடினார். நான் அதற்கெல்லாம் அசரவில்லை.

கண்களில் வன்முறை தீப்பறக்க நின்றிருந்தேன். அசம்பாவிதம் நடக்குமுன்பு, என்னை வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றிய அப்பா, இரவு வீடு திரும்பியதும் சொன்னார். "என்னை பத்து மணிக்கு வரச் சொன்ன டைரக்டர், ஒன்பது மணிக்கே வந்து உட்கார்ந்துகொண்டு உதவி இயக்குனர்களை விட்டு வேண்டும் என்றே போன் செய்யச் சொல்லியிருக்கிறார். பாவம்! அவர்களெல்லாம் பலியாடுகள்! ஆனால் ஊமை மாதிரி இருந்த உனக்குள் எப்படி இத்தனை வயலென்ஸ்! முன்கோபம் ஆபத்தப்பா!" என்று அறிவுரை சொன்னார்.

அப்பாவிடமிருந்து பங்சுவாலிட்டியை மட்டுமல்ல, வாழ்க்கை முறையைக் கற்றுக்கொண்டேன் என்பதுதான் சரி. எங்களை சினிமா செலிபிரட்டி வீட்டுப் பிள்ளைகள் போலவே அவர் வளர்க்கவில்லை. செல்வச் செழிப்பில் மிதக்கும் நண்பர்களின் வீடுகளுக்குப் போயிருக்கிறேன். பத்து கிரவுண்டில் வீடு, ஏழு, எட்டு கார்கள், வகை வகையாக நாய்கள், வாட்ச்மேன், தோட்டக்காரர் என்று டசன் வேலை ஆட்கள். வீட்டிலேயே பார்! நீச்சல்குளம்! அப்பா பிசினஸ் விஷயமாக உலகம் சுற்றிக் கொண்டிருப்பார். அல்லது பிசியான தயாரிப்பாளராகவோ, நடிகராகவோ, இயக்குனராகவோ இருப்பார். அம்மா கார்ப்பரேட் கிளப்புகளில் பொழுதைப் போக்குவார். இவர்களிடம் ஐயாயிரம், பத்தாயிரம் என்று பாக்கெட் மணி இருக்குமே தவிர, அன்பும், அரவணைப்பும் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருப்பார்கள்.

எங்கள் வீட்டின் நிலவரமே வேறு. இந்த அறையில் நின்று கூப்பிட்டால், அடுத்த அறையில் இருப்பவர்களுக்குக் கேட்கிற மாதிரி அடக்கமான வீடு. சிகரெட் ஆஷ்ட்ரே இல்லாத வீடு. வீட்டில் கூர்க்கா கிடையாது. கூட்டம் கிடையாது. எல்லோருக்கும் தனித்தனி அறைகள் உண்டு. ஆனால் கல்லூரி காலம் வரை அம்மா அப்பாவோடுதான் தூங்குவோம்.

எனக்குச் சாமி ரொம்பப் பிடிக்கும் என்றால், அதற்கு அப்பாதான் காரணம். தினசரி இறைவனை வழிபடாமல் அவர்



**"இருபத்தியிரண்டு வயது வரை, சென்னையிலிருக்கும் எந்த சினிமா ஸ்டுடியோவுக்கும் நான் போனதில்லை..."**

சாப்பிட்டு நான் பார்த்ததில்லை. குளித்து முடித்து ஈரத் துண்டோடு வந்து தாத்தா வைத்துக் கும்பிட்டு, வந்த முருகன் படத்தின் முன்பு கைகுவித்து நிற்பார். மனசுக்குள்ளேயே மௌனப் பிரார்த்தனை. அப்போது யாரும் பேசக் கூடாது. அவரின் காலை பக்தியால் வீடே கோயில் மாதிரி ஆகிவிடும்.

அதிகாலை ஐந்து மணிக்கு என்னையும், தம்பியையும் கூட்டிக்கொண்டு கடற்கரைக்குப் போவார். அங்கே ஜாகிங். வீடு திரும்பிய பிறகு யோகா. அவர் செய்வதை நாங்கள் அதிசயமாய் வேடிக்கை பார்த்தபடியிருப்போம். எங்கள் ஈடுபாட்டைக் கவனித்து யோகா மாஸ்டரிடம் சேர்த்துவிட்டார். சினிமாவில் பல்டி அடிக்க வேண்டும். தாவிக் குதிக்க வேண்டும் என்றால், இருபத்தைந்து வயதில் உடம்பு வளையாது. இன்று சினிமாவில் இந்த ஜிம்னாஸ்டிக் யுக்திகளையெல்லாம் சிறப்பாகச் செய்ய முடிகிறதென்றால், சிறு வயதிலேயே யோகா கற்றுக் கொண்டதால் உடம்பில் ஏற்பட்ட நெகிழ்வுத் தன்மைதான் காரணம்.



அனுபவத்தைப் போல் சிறந்த ஆசிரியர் இருக்க முடியாது என்று சொன்ன அப்பாவோடு ஒரு மலேஷியப் பயணம். கல்லூரியில் சேருமுன்பு என்னை அழைத்துப் போனார். பிசினஸ் கிளாஸ் விமானம். எல்லோருக்கும் சின்னச் சின்னக் கண்ணாடிக் குவளைகளில் கிரிஸ்டல் க்ளியராக மினரல் வாட்டர் போன்ற ஒன்றைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்பாவின் காதோரமாய் நெருங்கி, "குடிக்கிற தண்ணீரில் ஏன் அவ்வளவு கணக்குப் பார்க்கிறார்கள். கொஞ்சம் பெரிய கிளாஸில் நிறைய கொடுத்தால் என்ன?'' என்றேன். எனக்குப் பதில் சொல்லாமல் விமானப் பணிப்பெண்ணை அழைத்தார். இரண்டு கிளாஸ்களில் அந்தத் தண்ணீர் வந்தது.

என்னிடம் ஒரு கிளாஸை எடுத்துக் கொடுத்து 'குடி' என்றார். கிளாஸை வாயில் வைத்து உறிஞ்சும் முன்னரே சுர்ர்...! என்றது. சிலதுளிகள்கூட நாக்கில் பட்டிருக்காது. கண்களில் நீர்ப் படலம். குடல் மொத்தமும் வாய் வழியே வந்துவிடுவது போல அப்படி ஒரு கசப்பு. மூச்சிறைத்தபடி ''என்னப்பா இது?'' என்றேன். ''இதுதான் வோட்கா. சந்தோஷம் வந்தாலும் துக்கம் வந்தாலும் நம்ம ஆளுங்க இதுலதான் மூழ்கி அழிஞ்சி போறாங்க. பார்த்துக்கோ!'' என்றார். அதன் பிறகு மதுக்கடைகளை நெருக்கமாகக் கடந்து போக நேரிட்டால், அருவருப்பில் முகம் திருப்பிக்கொள்வேன்.

மது விஷயத்தில் மட்டுமல்ல... அனாவசிய ஆடம்பரத்தைக்கூட வெறுக்கக் கற்றுக் கொடுத்தது அப்பாவும் அம்மாவும்தான். படிக்கிற காலத்தில் எங்களை ஃபைவ் ஸ்டார் ஓட்டல்களுக்கு ஒருநாள் கூட சாப்பிட அழைத்துச் சென்றதில்லை. காஸ்மோபாலிடன் வாழ்க்கை சகஜமாகிப் போய்விட்ட மாநகரில் எங்களுக்கு எளிமையான வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்தார்கள். அம்மாவும் அப்பாவும் சண்டை போட்டு நான் பார்த்ததேயில்லை. ஷூட்டிங் பரபரப்பில் எப்போதாவது அப்பா ஓங்கிக் குரல் கொடுத்தால்கூட, அம்மா அமைதியாக இருந்து விடுவார். எதிர்த்து ஒரு வார்த்தை பேச மாட்டார். ஆனால் நான் பிளஸ் டூ படித்துக் கொண்டிருந்தபோது, எனது நெருங்கிய நண்பனின் வீட்டில் என்ன நடந்தது தெரியுமா?

(டைரியைத் தொடருவேன்)

படங்கள்: ஸ்ரீஹரி

இளமைத் தொடர்

# உள்ளம் துறந்தவன்

## 29

மஞ்சரிக்கு தைரியம் வந்துவிட்டது. அழகேசனை அழித்த தீய சக்திகளை ஒவ்வொன்றாகத் தேடிப்பிடித்து, நீதி மன்றச் சட்டங்கள் தரும் தண்டனைக்கு உட்படுத்த ராஜன் ஸ்ரீராமின் உதவியுடன் முடியும் என்று தோன்றியது "வன்முறையை மென்முறையால் சந்திக்க முடியும்"

"நல்லா யோசிச்சு சொல்லுங்க. இந்த ரிஸ்க்கு எடுக்க விரும்பறீங்களா?"

"நிச்சயம், உங்க மேல எனக்கு நம்பிக்கை வந்துருச்சு"

"ஏன், பாத்தா சாம்பார் வடை மாதிரி இருக்கேனே, அதனாலயா?"

"உங்க அங்கிள் டெபுடி கமிஷனரா இருக்கறதால பத்திரம் கிடைக்கும்ங்கற நம்பிக்கையினால"

''அதெல்லாம் பாதுகாப்பில்லைங்க. ப்ரகாஷ் மாதிரி என்னையும் அடிச்சுப் போட அவங்களுக்கு அரை மணி போதும். நான் அங்கிளை எமர்ஜென்சிக்குத்தான் அணுகுவேன். எங்க வீட்டில் ஒருமுறை டீ.வி. திருட்டுப் போயிருச்சு. அவருக்கு போன் பண்ணினேன். 'இந்த மாதிரி சின்ன விஷயங்களுக்கெல்லாம் என்னைப் பயன்படுத்தாதே. ரொம்பப் பெரிசா இருந்தா வா, ஒரு நாளைக்கு சென்னை மெட்ரோ பாலிட்டன் ஏரியாவில 125 டீ.வி. திருடு போவுது'ன்னார் புள்ளி விவரத்தால கொன்னுடுவார்."

"நான் என்ன செய்யணும் இப்ப"

''கொஞ்ச நாள் கம்முனு இருங்க. செல் போனை மாத்திக் கொடுத்துர்றேன். தலைமறைவா இருந்தா உத்தமம். ப்ரஸ்காரங்க துரத்துவாங்க, ஏன்னா இன் சாஃப் சாம்ராஜ்யத்தை கவுக்கப் போறீங்க"

"எப்படி?"

''கம்பெனி லா படி! சட்டத்துக்கு உள்ளயே - உங்க கிட்ட ப்ராக்ஸி வாங்கிகிட்டு, ஒரு இ.ஜி.எம். கூப்பிடப் போறேன். அதில் முதல் ரெசல்யூஷன் பழைய மெம்பர்களை துரத்திட்டு, புது போர்டு அமைக்கிறது. எப்படியாவது உங்க சேர்மன் ராகவேந்தரை சந்திச்சே ஆகணும் நானு"


''உடல்நிலை அதிக அதிர்ச்சி தாங்காதுன்னு தனியா வச்சிருக்காங்க"

"கார்டியாலஜிஸ்ட் யாரு?"

"எம்.வி. ராவ்னு, மினர்வாவில அவர்தான் டாக்டர் பாலாவுக்கு ஆபரேஷன்ல கூட இருந்தவர்"

''சரி அவரை முதல்ல சந்திக்கறேன். நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷன்ல ஒரு கிரிமினல் கான்ஸ்பிரசி வழக்கு பதிவு செய்யணும். ஒரு வக்கீல் தேவைப்படும். புனாவில

**"நீ செய்றது நல்லா இல்ல. மனசுல தப்பெண்ணம் வந்துருச்சு!"**





லா ஸ்கூல்ல படிச்ச என் ஃப்ரெண்ட் விஜோது இங்கே கார்ப்பரேட் பண்ணிக் கிட்டிருக்கான். அவன் மூலமா ஒரு பெட்டிஷன், ஒரு எப்.ஐ.ஆர். பதிவு செய்யப் போறேன்.

"யார் பேர்ல?"

"எல்லார் பேர்லயும். உங்க மாமா, டாக்டர் பாலா பேர்ல, மினர்வா பேர்ல, சர்ஜன்கள் பேர்ல, சர்டிபிகேட் கொடுத்த அரசாங்க டாக்டர்கள் பேர்ல, நாகரத்தினம் பேர்ல, போலீஸ் அதிகாரி கள். உங்க வீட்டு நாய்க்குட்டியக் கூட விடப் போறதில்லை. இன்னும் யாரார் அதில உண்டு? ஏன் உங்க ராகவேந்தர் பேர்லயும். எல்லாம் சேர்ந்து சதித் திட் டம் போட்டு அழகேசனைக் கொன் னாங்கன்னு போடப் போறேன். இது தான் லக்ஷ்ராயுதம். துருப்பு சீட்டு. இதை வச்சுக்கிட்டு ஷேர்களை மாத்தணும், பேரம் பேசணும். என்னைக் கொஞ்சம் பேச விடுங்க, அதுக்கு எனக்கு உங்க கிட்டருந்து பத்து ஷேர் மாத்திக்கப் போறேன். முதல்ல கேள்விகள் கேட்க, பாத்துக்கிட்டே இருங்க, ஒரு பைரோ டெக்னிக்ஸ் வாண வேடிக்கை அடுத்த வாரம் நடக்கப் போறது. இந்தியாவையே கலக்கப் போறது"

"நான்?"

"சொன்னேனே, தலைமறைவா இருக்கணும். இந்த ப்ராக்ஸி யுத்தத்தை ப்ரஸ்காரங்க உகப்பிடுவாங்க. கொடைக் கானல்ல போய் எங்கயாவது இருங் களேன்"

**சுஜாதா**

"எங்கயாவது தலைமறைவா இருக்கணும், அவ்வளவுதானே?"

"அவ்வளவுதான், மிச்சத்தை நான் பாத்துக்கறேன். மைகாட்! பிசினஸ் இண்டியால அட்டைப் படத்தில நான் வரப்போறேன். நீங்க ஜெனரல் பாடில வந்து உக்காந்தா போதும். நானும் வினோதும் மத்ததைப் பாத்துப்போம்"

மஞ்சு வீட்டுக்கு வந்ததும் நாகரத்தினம் கோபத்துடன் "எங்க போய்த் தொலைஞ்சே?" என்றார்.

"மாமா, எனக்கு யார்கிட்டயும் பர்மிஷன் கேக்க வேண்டிய கட்டாயம் இல்லை."

"என்ன இது, எல்லாருக்கும் லெட்டர் எழுதியிருக்கியாமே? தந்தி அடிச்சிருக்கியாம், உன் ஷேர்களை ட்ரான்ஸ்பர் பண்ணப் போறதில் லைன்னு. நாங்க என்ன கட்டாயப் படுத்தினோமா? லூஸ் மாதிரி லெட்டர் கொடுத்திருக்கியே."

"ஆமா."

"இதெல்லாம் யார் உனக்கு சொல்லிக் கொடுக்கறாங்க."

"சமயம் வர்றப்ப தெரியும்" என்று தன் அறைக்குச் சென்றாள். தோள் பைக்குள், சில நாட்களுக்கு வேண்டிய மாற்று உடைகள், சோப், டூத்பேஸ்ட் போன்றவற்றை அடுக்கிக் கொண்டாள். மரகதம் உள்ளே வந்து "என்னம்மா எங்க போறாப்ல?"

"கொடைக்கானலுக்கு, நம்ம பங்களாவுக்கு"

"கார் எடுத்துக்கிட்டு போறியா?"

"இல்லைம்மா. ஃப்ரண்ட்ஸை வரவழைச்சிருக்கேன். ப்ளேன்ல மதுரை வரை போறேன்"

"எதுக்கு இப்ப கொடைக்கானல்?"

"மறக்கறதுக்கம்மா. இங்கருந்தா அழகேசன் ஞாபகம் வந்துக்கிட்டே இருக்குது"

"டிரைவரை வரச் சொல்லட்டுமா"

"இல்லை, கால்டாக்சி எடுத்துட்டு வராங்க. என்னவா இருந்தாலும் போன் பண்ணுங்க" என்றுவிட்டு அந்த பையை தோளில் மாட்டிக் கொண்டாள்.

நாகரத்தினம் குறுக்கே நின்றார். "இப்ப யாரும் எங்கயும் போகக்கூடாது. பெரியவர் இருக்கிற நிலையில் தினம் அவர் மஞ்சரி எங்கே மஞ்சரி எங்கேன்னு கேட்டுக்கிட்டே இருக்கார்"

மஞ்சரி சிறிதுதான் யோசித்தாள். "சரி போகலை" என்று அந்தப் பையை அவர்கள் சற்றும் எதிர்பாராதபடி படுக்கையில் எறிந்தாள்.

"நீ செய்யறது நல்லாவே இல்லை. என்னவோ மனசுல தப்பெண்ணம் வந்திருச்சு உனக்கும்."

"இல்லைம்மா, இப்பத்தான் தெளிவு வந்திருக்கு"

ராகவேந்தரின் அறைக்குச் சென்றாள். அவர் தூங்கிக் கொண்டிருந்தார் சற்று நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் "என்னை மன்னிச்சுடுங்க" என்றாள்.

மஞ்சரி கால்டாக்சிக்கு ரூபாய் கொடுத்துவிட்டு, ஒரு ஆட்டோரிக்ஷா ஸ்டாண்டில் நிறுத்தச் சொன்னாள்.

கொட்டிவாக்கத்துக்குப் போகச் சொன்னாள்.

மஞ்சரியை மீனாட்சி எதிர்பார்க்கவில்லை. அவள் பையைப் பார்த்தாள்.

"என்ன புள்ளை, வூட்ல சண்டை போட்டுக்கிட்டு வந்துட்டியா?"

"இல்லம்மா உங்ககூட இருக்

பேசிக்கலா நான் ஒரு ஸ்போர்ட்ஸ்மேன். துப்பாக்கி சுடறதும், ஹார்ஸ் ரைடிங் போறதும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். இந்த மாதிரி விளையாட்டுகள்னால எப்போதும் நான் புத்துணர்ச்சியா உணர்றேன்.

- சுகுமாரன் நம்பியார்

எனக்குப் பிடிச்ச விளையாட்டு...



கலாம்னு வந்தேன்.''

''எங்கூடவா? இந்த குளாய்லயா?''

''ஆமாம்மா. எல்லா மாளிகைலயும் வாழ்ந்தாச்சு. எல்லா நாடுகள்லயும் பெரிய ஓட்டல்களைப் பாத்தாச்சு. குழாய்லயும் இருந்து பார்த்துரலாம்னு வந்தேன்...''

''உன்னால கொசுக்கடியில இருக்க முடியாதம்மா. சொல்றதைக் கேளு''

''அழகேசன் இங்கதானே வாழ்ந் திருக்கார்.''

''அவன் எங்க வேணா சமாளிப் பான்''

''அந்த வித்தையை நானும் கத்துக் கறேனே''

''எதுக்கு''

''அழகேசன் எப்படி உணர்ந்திருப் பார்; வாழ்ந்திருப்பார்னு ஒரு ஐடியா கிடைக்க...''

''பைத்தியக்காரப் புள்ளையா இருக்கே.''

''அம்மா, அழகேசன் சட்டை எதும், இருக்கா''

''எல்லாம் பெட்டியில இருக்குது''

''அவரு பனியன் எதையாவது எடுத்துக் கொடுங்க''

மஞ்சரி கொசுக்கடியும் குழாய்ச் சண்டையும் மண்தரையில் உட்கார்ந்து பேன் பார்க்கும் ஜனங்களும் சூழ்ந்த அந்த வாழ்வில் தனிப்பட்டுத்தான் தெரிந்தாள்.

''நீ யாரு வெள்ளைக்காரியா? பளபளன்னு வாசனையா இருக்கியே''

''இல்லைங்க, இங்க மீனாட்சி அம்மா இருக்காங்களே, அவங்க மருமவ''

''அழகேசன் பொஞ்சாதியா?''

''ஆமாம்''

''அவன்தான் இறந்து போய்ட்டானே இங்க உள்ள எல்லாப் புள்ளைங்களுக் கும் பாடம் சொல்லிக் கொடுத்தான்.''

''எனக்குள்ள இன்னும் அவர் இறக்கலைங்க'' என்றாள்.

''அடியாத்தி, இப்படி ஒரு பொண்ணு இருக்குமா? பாத்தா ரொம்ப பெரிய மனுச வீட்டுப் பொண்ணாட்டம் தெரி யுது. பாரு முகமெல்லாம் கொசுக்கடி, அம்மா வாத்தாப்பல''

''பரவால்லைங்க, பழகிரும்'' என்றாள்.

இடுப்பில் ப்ளாஸ்டிக் குடத்தை



## எனக்குப் பிடிச்ச பொழுதுபோக்கு...

வெளிநாட்டுக்கு டூர் போறது எனக்கு மிகவும் பிடிச்ச பொழுது போக்கு. குறிப்பா, சிங்கப்பூர் போகணும்னா எனக்கு தனி குஷி வந்துரும். எப்படா சமயம் கிடைக் கும்னு காத்துக்கிட்டே இருப்பேன். கிடைச்சா ஐயா ஜூட்டுதான்.

**- புஷ்பா தங்கதுரை**

வைத்துக் கொள்ளும்போது வழுக்கி விழ இருந்தவளை தாங்கிப் பிடித்துக் கொள்ள, உடல் எல்லாம் சேர் பூசி துடைத்துக் கொண்டாள்.

''என்னடி, என்ன ஆச்சு?''

''மீனாட்சி உம் மருமவ ரெண்டு நாள் போனா நம்ம நெறத்துக்கு வந்துருவா. எதாவது வாய்க்கு ருசியா பண்ணிப் போடு''

''மீன் குழம்பு பிடிக்குமா உனக்கு?''

''அழகேசன் சாப்பிடுவாரா?''

''சாப்பாட்டில் கவனமே கிடையாது. மோர் குடிப்பான் நெறைய''

''மோர் குடுங்க அப்ப'' முழுங்கால் வரை வந்த அவன் பனியனை மாட்டிக் கொண்டு, அவன் பெட்டியை நோண்டி னாள்.

'என்னை அழித்தாலும்' என்று ஒரு கட்டுரையை தலைப்பிட்டுத் துவங்கி யிருந்தான்.

'என்னை அழித்தாலும்
என் எழுத்தை அழிக்க முடியாது
என் எழுத்தை அழித்தாலும்
அதன் சத்தத்தை அழிக்க முடியாது
என் சத்தத்தை அழித்தாலும்
அதன் எதிரொலியை அழிக்க முடியாது.'

கண்ணீர்த் துளிகள் அந்த எழுத் துக்களை அழித்தன.

(தொடரும்)

பகிர்ந்துகொள்ளக் கொஞ்சம் கூச்சமாக இருக்கிறது. என்றாலும் இது என்னை அடிக்கடி ஆட்டிப் படைக்கும் பிரச்னையாக இருக்கிறது. ஒரு நாள் இரவு என் கணவர் அலங்கோலமான தோற்றத்துடன், வியர்வை நாற்றத்துடன் என்னை நெருங்கினார். நான் நடுங்கிப் போய்விட்டேன். அதிலிருந்து அவர் எப்போது நெருங்கினாலும் என் மனம் அந்தப் பழைய நாளையே நினைத்து சுருங்கிக் கொள்கிறது. இதிலிருந்து மீள ஓர் ஆலோசனை கூறுங்கள்.

- பெயர், ஊர் வெளியிட விரும்பாத வாசகி

டாக்டர் தாரா, மனவியல் மருத்துவர்:

தோற்றத்தில் கவனம் செலுத்தும்படி உங்கள் கணவரிடம் கூறினால் புரிந்துகொள்வார். அப்படி அவர் மாறிவிட்டிருந்தாலும் உங்கள் மனம் பழையதையே நினைக்கிறது என்றால், நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்... அவருடைய பாஸிடிவ்வான தோற்ற அம்சங்களையும், குணங்களையும் அதிகமாக நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை இதுபோன்ற ஆக்கபூர்வமான எண்ணங்கள் அழித்துவிடும்.



# நடுங்க வைத்த இரவு!

என் நான்கு வயதுக் குழந்தையின் கழுத்துப் பகுதியிலும் தொடைப்பகுதியிலும் பாலுண்ணிகள் காணப்படுகின்றன. இவற்றை எப்படிப் போக்குவது?

- எஸ். காஞ்சனா, காஞ்சிபுரம்

டாக்டர் ஜெயந்தி விஸ்வநாதன், குழந்தை நல மருத்துவர்:

இவற்றை நாங்கள் 'வார்ட்' அல்லது மரு என்போம். இதற்கு நீங்கள் தோல் மருத்துவரை அணுக வேண்டும். லேஸர் மூலம் இவற்றைப் பாதுகாப்பாக நீக்கிவிட முடியும். மாறாக நீங்களாகவே அதை நீக்க முயன்றால், அதிலுள்ள வைரஸ் (வைரஸ் காரணமாக உண்டாவதுதான் இது) பரவி, பக்கத்திலும் பல புதிய மருக்கள் தோன்றிவிடக்கூடும்.



மணி என்றால், எதிர்பார்க்கப்படும் பிரசவ நாளிலிருந்து மேலும் ஒருவாரம் பொறுத்திருக்கலாம். சீராக மாதவிலக்கு இல்லாத பெண்கள் என்றாலோ, மிகவும் தாமதமான வயதில் கருத்தரித்திருந்தாலோ, கருவை ஸ்கேன் செய்து பார்த்துவிட்டு முடிவெடுப்போம்.

**கண்களைச் சுற்றிக் கருவளையம். எப்படிப் போக்குவது?**
**- பெ. சங்கீதா, சென்னை - 60.**

**எம். ஹசீனா சையத், மூலிகை அழகுக் கலை நிபுணர்:**

மில்க் பௌடரை நீரில்



**இன்ன தேதியில் குழந்தை பிறக்கும் (எக்ஸ்பெக்டெட் டேட் ஆஃப் டெலிவரி) என்று குறித்துக் கொடுக்கிறார்கள் டாக்டர்கள். பிரசவம் ஆகவில்லை என்றால் அந்த தேதி முடிந்து எத்தனை நாட்கள் பொறுத்து சிசேரியன் முறையில் குழந்தையை வெளியே எடுக்க வேண்டும்?**

**- காயத்ரி ராகவன், கோவை.**

**டாக்டர் அமுதா ஹரி, மகப்பேறு மருத்துவர்:**

மாதவிலக்கு ஒழுங்காகவும் சீராகவும் வந்துகொண்டிருந்த பெண் கரைத்து ஒரு மெல்லிய துணியால் கண்களைச் சுற்றித் துடையுங்கள். பிறகு பாலாடையும் வெள்ளரிச்சாறும் கலந்த கலவையை கண்களுக்குக் கீழே தடவி, நன்கு மசாஜ் செய்யுங்கள்.

பிறகு மில்க் பௌடரையும் பன்னீரையும் கலந்து ஒரு பேஸ்ட் போல் ஆக்கி, அதைக் கண்களுக்கு மேலும் அடியிலும் தடவுங்கள் (இது உலராமல் பார்த்துக் கொள்ளவும். உலர்ந்தால் சுருக்கங்கள் ஏற்படலாம்).

பிறகு பஞ்சில் நீரைப் பிழிந்து துடைத்தெடுக்கவும். பத்து நிமிடங்களுக்குப் பிறகு சாதாரணத் தண்ணீரால் சுத்தம் செய்யுங்கள்.

**- ஜி.எஸ்.எஸ்.**

‘‘மார்ச்சுவரிக்கு எப்படிப் போகணும்?’’

‘‘எங்கிட்ட ஆபரேஷன் பண்ணிக்கிட்டா போகலாம்!’’

- அம்பை தேவா





‘‘அந்த பிரமுகர் எங்கே போனாலும் ஃபேனை தூக்கிட்டு ஓடுறாங்களே... யாரு அவங்க?’’

‘‘தெரியாதா... அவங்கதான் அவரோட கூலிங் படையினர்...’’

- எஸ். மோகன்

# உயிர் காப்பான்

‘‘இந்த லெட்டரை எழுதியிருக்கிற உன்னோட ஃப்ரெண்ட் பொரிக்கடை வச்சிருக்காரா...?’’

‘‘எப்படிக் கண்டுபிடிச்சே...?’’

‘‘நலம்... நலமறிய அவல்னு எழுதியிருக்காரே...’’

- ஆனந்தன்



‘‘நேத்து தூக்கத்துல நடந்து வந்து என் கன்னத்துல அறைஞ்சிட்டீங்க!’’

‘‘ஸாரி சார், அது நான் இல்லை. எனக்குள்ள இருக்கிற ‘அந்நியன்’’’

- மதுரை முருகேசன்



"ஹலோ சார், எங்க வீட்டு டீ.வி.யிலே படம் சரியாத் தெரிய மாட்டேங்குது. கொஞ்சம் வந்து பார்க்கறீங்களா?"

"வந்து பார்க்கறேன் சார். நல்லா படம் தெரியும்போது போன் பண்ணிச் சொல்லுங்க"

- ஆர்.ஆர்.பூபதி




# தோழன்!"

"என்னோட அப்பா, எப்பப் பார்த்தாலும் என்னை 'தண்டச் சோறு'ன்னு திட்டிக்கிட்டிருந்தார்..."

"உடனே நீ வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டியா?"

"ஊஹூம்... சப்பாத்தி, பூரின்னு சாப்பிட ஆரம்பிச்சுட்டேன்..."

- கே. ஆனந்தன்





"ராத்திரி என் மனைவி எனக்காக சமைச்சு வச்சிருந்த சாப்பாட்டை திடீர்னு என் ஃப்ரெண்ட் வந்துட்டதால, அவனுக்குப் போட்டுட்டு, நான் வெளில போய் சாப்பிட வேண்டியதாப் போச்சு..."

"ரொம்ப டென்ஷனாயிட்டியா...?"

"ஊஹூம்.. 'உயிர் காப்பான் தோழன்'னு சொல்றது சரிதான்னு நினைச்சு சந்தோஷப்பட்டேன்."

- கே. ஆனந்தன்



"பந்தியில் சாப்பிட்டு முடிச்சதும் பணம் எழுதாம நேரா வீட்டுக்குப் போய்ட்டீங்களே... ஏன்?"

"சாரி சார், மொய் மறந்து வந்துட்டேன்!"

- அம்பை தேவா

வெள்ளை வெற்றிலைக்காரத் தெருவிலுள்ள அஞ்சலைக் கிழவி இறந்துவிட்டாள். தகவல் கேள்விப்பட்டதும் அந்தக் கிராமமே ஆடிப்போய் விட்டது. 'என்னாச்சு, எப்படியாச்சு' என்று ஆளாளுக்குப் பதற ஆரம்பித்துவிட்டார்கள்.

"நெஞ்சடைச்சுடுச்சாம்"

"நேத்து கூட எங்கிட்ட பேசிட்டு இருந்தாளே..."

"ஊருக்காக உழைச்ச ராசாத்தி போய்ச் சேர்ந்துட்டாளே" என்று பலரும் பலவிதமாய்ப் புலம்ப ஆரம்பித்து விட்டார்கள்.

அதோடு நின்று விடாமல், கடைசியாக அவள் முகத்தைப் பார்க்க ஊரே அவள் வீட்டின் முன் திரண்டுவிட்டது. அனாதையான அஞ்சலைக் கிழவிக்கு ஊர் மக்களே முன்னின்று இறுதி யாத்திரைக்கு ஏற்பாடு செய்தார்கள். அவள் வீட்டு முன் குவிந்து கிடந்த வறட்டிகளைப் பார்த்து கண்ணீர் விட்டார்கள். அப்படி என்ன இருக்கு அந்த வறட்டிகளில்? அதில்தான் அஞ்சலைக் கிழவியின் உயிர் உறைந்து கிடக்கிறது. ஆம்... கல்யாணம் நடந்த ஆறே மாதத்தில் அவள் புருஷன் யாரோ ஒருத்தியுடன் ஓடிவிட, தனிமரமாய் தவித்துப் போய் நின்ற அஞ்சலைக்கு, வாழ்க்கையில்



விளக்கேற்ற உதவியது இந்த வறட்டிதான். சாலையில் கிடந்த சாணங்களைப் பொறுக்கி, வறட்டிகளாகத் தட்டி ஊர் மக்களுக்கு விற்று, தன் வயிற்றை நிரப்பி வந்தாள். காலம் மாற மாற அதற்கும் முட்டுக்கட்டை வந்தது. மண்ணெண்ணெய் அடுப்பு, கேஸ் அடுப்பு என்று மக்கள் வசதிகளைத் தேடத் தேட, அஞ்சலையின் பிழைப்பில் மண் விழுந்தது. தட்டி வைத்த வறட்டிகள் மூலையில் முடங்கிக் கிடக்க, சோற்றுக்கு வழியின்றி அஞ்சலை வீட்டினுள் முடங்கிக் கிடக்க, ஊராரே அஞ்சலைக்கு ஏதாவது செய்ய வேண்டுமென எண்ணி கூட்டம் போட்டுப் பேசினர். ஒரு முடிவெடுத்து அஞ்சலையிடம் சொன்னார்கள்.



**விமர்சிக்கிறார் லேஅவுட் ஆர்ட்டிஸ்ட்...**

அஞ்சலைக் கிழவி மனதில் தங்கிவிட்டார். உயிரில்லாத ஒரு கேரக்டர் இந்தளவு பாதிப்பை ஏற்படுத்தியது வியப்பு.

- எஸ்.ஸ்டீபன்

"இதா பாரு அஞ்சல... இம்புட்டு நாளா நீயி எங்க வூட்டு அடுப்பெரிய உதவுன... இனியும் நீ கஷ்டப்பட வேணாம். உன்னைய நாங்க கண்ணு கலங்க வுடமாட்டோம். நாங்கள்லாம் சேர்ந்து ஒரு முடிவெடுத்திருக்கோம். இனி நீயி உன் வறட்டிகள நம்ம ஊரு வெட்டியான்கிட்ட மொத்தமா வித்துடலாம். பொணம் எரிக்க அவன் வெளியூரு சந்தைக்கிப் போயிதான் வறட்டி வாங்கிட்டு வர்றான். இனி அவனுக்கு நீயே வறட்டிய வித்துப்போடு. அவனும் இதுக்கு சம்மதிச்சுட்டான்"

அஞ்சலைக்கு கண்ணீரே வந்துவிட்டது. ஊரார் தன் மேல் இம்புட்டுப் பாசத்துடன் இருப்பதை நினைத்து அழுதேவிட்டாள். நெடுஞ்சாண் கிடையாக பூமியில் விழுந்து எல்லோருக்கும் நன்றி சொன்னாள்.

"என் வவுத்துல பால வார்த்த எம் மக்களே... என்னிக்கும் உங்கள மறக்க மாட்டேன். என் உசுரு



# அஞ்சு விரல் அடையாளம்!

சவின்னா கந்தஸ்வாமி

இருக்குற வரை என் வறட்டியாலதான் நம்மூரு பொணம் எரியோணும். நான் செத்தா என் வறட்டிய வெச்சு நீங்கள்லாரும் சேர்ந்து என்னைய எரிச்சுப் போடுங்க சாமியோவ்" என்று கண்ணீர் சிந்தினாள்.

அன்றைக்குச் சொன்ன சொல்லை நேற்றுவரை காப்பாற்றி வந்த உத்தமி அஞ்சலைக்கிழவியை நினைத்து, ஊரார் அழுததில் ஆச்சர்யமில்லை. இத்தனை நாட்கள் ஊராரை எரிக்கப் பயன்பட்ட அவளது வறட்டிகள், இன்று அவளுக்கு...

ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தன. மக்கள் எல்லாரும் காசு போட்டு தாரை தப்பட்டைக்கு ஏற்பாடு பண்ணினார்கள்.

'அஞ்சலி' போஸ்டர் அடித்து ஊர் முழுக்க ஒட்டினார்கள். யாரும் அன்றைக்குப் பிழைப்புக்குப் போகாமல் ஊரே அஞ்சலைக் கிழவிக்காக அழுது கொண்டிருந்தது.

அஞ்சலை வறட்டியால் மட்டும் எல்லோரின் மனதிலும் இந்தளவு புகுந்து விடவில்லை. திருஷ்டி கழிப்பதிலும் அவள் கெட்டிக்காரி. பில்லி சூன்யம், காத்து கருப்பு, கழிப்பு எடுப்பது, கண் திருஷ்டி என்று எல்லாவற்றிலிருந்தும் மக்களைக் காப்பாற்றி நலமாக வாழ வைப்பதில் அஞ்சலை கெட்டிக்காரி. பட்டம் வாங்காத வைத்தியராகவே ஊரில் வலம் வந்தவள் அவள். எல்லாம் சேர்ந்து மக்களை அவள்மீது உள்ளன்போடு உருக வைத்தது.

சுடுகாடு.

கிராமமே கூடியிருந்தது. இத்தனை நாட்கள் அஞ்சலையிடம் வறட்டி வாங்கி பிணங்களை எரித்த வெட்டியான் ராமசாமி, இன்று அவள் வறட்டிகளால் அவளையே எரிக்கத் தயாராக இருந்தான். அஞ்சலையின் முகம் தவிர, ஏனைய இடங்கள் எல்லாம் வறட்டிகளால் மூடப்பட்டிருந்தன. கொள்ளி வைக்க ஊர்த் தலைவர் தீப்பந்தத்தைக் கையிலெடுத்தபோதுதான் அது நடந்தது...

சர்சர்ரென்று இரண்டு ஜீப்புகள் வந்து நின்றன. தபதபவென்று போலீஸ்காரர்கள் குதித்தனர். கொள்ளி வைக்கப் போன ஊர்த் தலைவரைத் தடுத்து நிறுத்தி, அஞ்சலையின் மீதிருந்த வறட்டிகளை அகற்றத் தொடங்கினர்.

"ஏய்... என்னாச்சுப்பா, என்னா நடக்குது இங்க" பதறிப்போன தலைவரும் மக்களும் போலீஸாரைத் தடுத்து நிறுத்தி, கேள்வி கேட்டனர்.

தலைமைக் காவலர் முன் வந்து பதில் சொன்னார்... "இங்க பாருங்க, பக்கத்தூர்ல அரசாங்கம் மின்சார சுடுகாடு கட்டியிருக்கு. இன்னிக்கு அதோட திறப்பு விழா. அமைச்சர் வர்றாரு. அவர் திறந்து வச்சு எரிக்க பொணம் வேணும். இந்த பாடிய அங்க கொண்டுட்டு போயி எரிக்கப் போறோம். விலகுங்க, விலகுங்க...."

"அதெல்லாம் முடியாது. அஞ்சலைக் கிழவிய நாங்கதான் எரிப்போம்" ஊரே கொதித்தெழுந்தது.

"அஞ்சலைக் கிழவி அனாதை. யாரும் அவளை சொந்தம் கொண்டாட முடியாது. எல்லாம் தெரிஞ்சுதான் வந்திருக்கோம். மரியாதையா விலகிடுங்க. இல்ல ரசாபாசமாயிரும்" போலீசார் உறுமினர்.


"யாரு சொன்னது அஞ்சலை அனாதைன்னு... அவளுக்காக இந்த ஊரே

என் வீட்டு பெட்ரூம்தான். அங்கதான் நான் சுதந்திரமா, சந்தோஷமா இருப்பேன். கால் ஷீட் பிரச்னை, ஸ்டார்ட் கட், பேக்கப் இப்படி எதுவும் இல்லாம அமைதியா தியானத்துல ஈடுபடுற மாதிரி எனக்குள்ள என்னை நான் தேடுற இடம் இது. ஐ லவ் மை பெட்ரூம்.

- த்ரிஷா

**எனக்குப் பிடிச்ச இடம்...**





# நாற்காலிக் கனவுகள்!

ஜெ.முனுசாமி

**நா**ற்காலி குறித்த ஏக்கத்துடனே
கழிகின்றன அவனது நாட்கள்

மரநாற்காலிதானென்றாலும்
ராஜாவின் சிம்மாசனமாய்
வீற்றிருக்கிறது அவன் மனதில்

நாற்காலியில் அமர்ந்திருப்பவனைக்
குப்புற வீழ்த்திவிட
சதா எத்தனித்துக் கொண்டேயிருக்கிறான்

நாற்காலி மீது
தனக்கொன்றும் நாட்டமில்லை
என்பதாய்ப் பேசியபடி
நாற்காலியையே சுற்றிச் சுற்றி
வருகிறான்.

இருக்குது'' தலைவர் முன் வந்து சொன்னார்.

"புரியாமப் பேசாதீங்க. அமைச்சர் வர்ற நேரம். இடைஞ்சல் பண்ணாமப் போங்க."

கூட்டம் கொதிப்படைந்து போலீஸ்காரர்களை மொய்க்க, லத்தி சார்ஜ் நடந்தது. பலருக்கு மண்டை உடைந்தது. தலைவர் கத்தினார்.

"நிறுத்துங்கய்யா... நிறுத்துங்க''

அவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு எல்லோரும் அமைதியாயினர். தொடர்ந்து பேசினார்...

''அரசாங்கத்துக்கு மனசாட்சியே இல்ல... இரும்பால இதயத்தை பொருத்தியிருக்குற இவங்களுக்கு என்னா தெரியும், ரத்தமும் சதையுமான உறவப் பத்தி. தூக்கிட்டுப் போவட்டும் வுடுங்கய்யா... நம்ம அஞ்சலை போனா என்ன, அவ அஞ்சு விரலால தட்ன வறட்டி இருக்குய்யா... அதுபோதும்யா நமக்கு... ஒவ்வொரு வீட்லயும் அவ இருப்பா... ஆளுக்கொண்ணு எடுத்துக்கங்கய்யா..."

தலைவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்ட கூட்டம் கண்ணீரோடு தலைக்கு ஒரு வறட்டியை எடுத்துக் கொண்டது. நாலு பேர் அஞ்சலையைத் தூக்கிக் கொண்டு மின் மயானம் நோக்கிச் சென்றனர். ஊரே பின் தொடர்ந்தது.

அமைச்சர் வந்தார். அஞ்சலையின் பிணம் ஒரு ட்ரேயில் வைத்து மெஷினுள் அனுப்பப்பட்டது. பட்டனை அழுத்தினார். ஐந்தே நிமிடம். அஞ்சலை சாம்பலாகி வெளியே வந்தாள். ஊர்த் தலைவரிடம் சாம்பல் ஒப்படைக்கப்பட்டது. அஞ்சலைக் கிழவியின் வறட்டிகளோடும், சாம்பலோடும் தடுமாறித் தடுமாறி ஊர் நோக்கி நடக்க ஆரம்பித்தனர் மக்கள். ●

# பல்லு தாத்தா....

சபா உறுப்பினர்களுக்கான பொழுதுபோக்குக்கு முன்பெல்லாம் டிராமா, கச்சேரிகளைத்தான் ஏற்பாடு செய்வார்கள். இது மாடர்ன் யுகம் அல்லவா? புதுமையாக ஃபேஷன் ஷோக்களை நடத்திக் காட்டி, தங்களது உறுப்பினர்களை மகிழ்வித்து வருகின்றன இன்றைய சபாக்களும் கிளப்புகளும்.

சென்ற வாரம் 'Glitz 05' என்கிற பெயரில் சென்னையில் இதுபோன்றதொரு ஃபேஷன் ஷோவை நடத்திக் காட்டியது 'கன்ட்ரி கிளப்' எனும் அமைப்பு. இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு எப்பொழுதும் இளைஞர், இளைஞிகள்தான் கூட்டம் கூட்டமாக வருவார்கள். ஆனால் இங்கு பல்லு போன தாத்தா முதல், லொள்ளு பண்ணும் பேத்தி வரை குடும்ப சகிதமாக வந்திருந்து கண்டுகளித்தனர். விழாவிலிருந்து சில துளிகள்...

● ஃபேஷன் ஷோக்களுக்கான நிகழ்ச்சித் தொகுப்பு எப்பொழுதும் ஆங்கிலத்தில்தான் இருக்கும். ஆனால் இங்கு விஜய் ஆதிராஜும், சம்ஷத்தும் 'ரெமோ' ஸ்டைலில் தமிழ் பேசி தொகுத்து வழங்கினர்.

● Party Wear, formal, sports wear என்று விதவிதமான ஆடைகளுடன் அழகிகளின் அணிவகுப்பு. பாவம்! அழகன்கள் நடந்து வரும்போது கேமராக்கள் கண் சிமிட்டவேயில்லை.

● ஸ்பென்சர் ப்ளாசாவாக இருந்தாலும் சரி, காயலான் கடை விழாவாக இருந்தாலும் சரி, கூப்பிடு சந்தியாவை என்பதுதான் இன்றைய நிலவரம். வழக்கம்போல் இங்கும் தாமதமாக வந்தார் நடிகை சந்தியா.

● இடையிடையே சினிமாப் பாடல்களுக்கு கவர்ச்சி நடிகைகள் நடனமாடினர். 'புன்னகை மன்னன்' தீம் மியூசிக்குக்கு நளினமாக ஆட்டம்



● சந்தியா





போட்டது ஒரு குழு. ராஜாவின் இசைக்கு என்றும் சாகா வரம்தான்.

● கேமராக் கண்கள் உட்பட அனை





வரின் பார்வையும் தங்களையே மொய்த்ததாலோ என்னவோ, பெண் களின் உடையிலும் அவர்களின் ஒய்யார நடையிலும் அதீத செயற்கைத்தனம் தெரிந்தது.


● மேடையில் கவர்ச்சி காட்டியவர் களை விடுங்கள்... ஆடியன்ஸ் வரிசையில் அமர்ந்திருந்த சிலர் அணிந்து வந்த சிக் கன உடைகளை, நமீதாக்களும் ரகசியாக் களும்கூட அணிய மறுத்து விடுவார்கள், அந்தளவுக்கு மோசம்.

● இத்தனை களேபரத்திலும் கவர்ச்சி உடை அணியாது வந்த சென்னைப் பெண் ரித்துவுக்கு, இறுதியில் சிறந்த மாடலுக்கான பரிசை அளித்ததுதான் ஆச்சர்யமாக இருந்தது.

- செந்தில்

படங்கள் : ஸ்ரீஹரி

# லார்டு பேத்தி!





# புக் பேங்க்

### வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்
**- மாத்தளை சோமு**

தமிழர் வாழ்வியலை இருபது பகுதிகளாகப் பிரித்து, தனித்தனியே ஆய்ந்து, ஆதாரங்களுடன் அவற்றின் அறிவியல் கண்ணோட்டத்தை விளக்கும் நூல். உயிர் தோன்றுவது குறித்தும், மரபணுவைப் பற்றியும், கரு வளர்வது பற்றியும் இன்றைய விஞ்ஞானம் கூறுவதை, நம் இலக்கியங்கள் எப்படி விவரித்திருக்கின்றன என்று தொடங்கி, நிலவியல், விவசாயம், ஆடை அணிகலன்கள், அவற்றின் உருவாக்கம், தாவரவியல் என்று விவரிக்கிறார் ஆசிரியர். எக்ஸ்ரே, ஸ்கேன் என்று எந்த உபகரணங்களுமின்றி மருத்துவ உலகில் தமிழர் சாதித்திருப்பவைகளைப் பட்டியலிடுகிறார். ஆடல், பாடல், ஓவியம், சிற்பம் என்று கலைகளின் கரைகளைக் கண்டு சென்றபடி, ஆயிரம் ஆண்டுகளான பின்னும், அழியாத வண்ணங்களும் காலத்தால் அசைக்க முடியாத கட்டடங்களும்; கடலில் பாயவிட்ட கலங்களும் என்று அறிவியலின் உச்சத்தை அடைந்திருந்த தமிழர் அறிவியலைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

வானவியலையும், வாழ்வியலையும் விளக்கும் இந்நூலைப் படைக்க, ஒரு தமிழர் எடுத்துக்கொண்ட காலத்தையும், ஆய்வின் ஆழத்தையும் எண்ணி வியப்பேற்படுகிறது. மொத்தத்தில் இத்தனை அறிவும் திறனுமா பெற்றிருந்தது தமிழகம் என்று ஏங்க வைக்கும் நூல்.

**உதகம், பி-15, 5வது முதன்மைச் சாலை, ராமலிங்க நகர், திருச்சி - 3. விலை ரூ.80**




### யோகா - ஒரு இனிய அனுபவம் - டி.கே.வி. தேசிகாச்சார்-தமிழாக்கம் : அகிலா ராமசுப்பிரமணியன்

ஆரோக்கியமான வாழ்வு என்பது அதிர்ஷ்ட வசத்தால் அமைவதுதான். இயற்கையாகவே ஆரோக்கியம் குறைவாக இருப்பவர்களுக்கு? அந்த அதிர்ஷ்டத்தை தேடித்தரும் கலைதான் யோகக்கலை. உடல் வாகுக்கு ஏற்றபடி, உடலில் உள்ள கோளாறுகளுக்கேற்றபடி, எவ்வளவு தேவையோ அவ்வளவுக்கு அளந்து செய்து வந்தாலே போதும் என்கிறார் நூலாசிரியர். குரு மூலமாக அறிய வேண்டியதாயிற்றே என்று தயங்குபவர்களுக்காகவே, செய்ய வேண்டிய முறைகளை புகைப்படங்கள் மூலம் விளக்கியிருக்கிறார். பதஞ்சலி யோகத்தை அடிப்படையாகக் கொண்ட இவற்றை முறையாகச் செய்தால், எத்தகைய பலவீனனும் திடசாலியாகிவிட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் படைப்பு.

**கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.200**

**- விஷ்வக்**

# அருள்வாக்கு

“எள், தர்ப்பண ஜலம், பிண்டம், அரிசி, வாழைக்காய், சாப்பாடு எல்லாம் இங்கேயே இருக்கின்றன; அல்லது கண் முன்னாலேயே ஒருத்தன் எடுத்துப்போனான், அல்லது சாப்பிட்டு விட்டான். பிதிரர்கள் எங்கேயோ மறு ஜன்மா எடுத்து விட்டார்கள் என்று நீரே சொல்கிறீர், அப்படியிருக்க இங்கே உள்ள வஸ்து அங்கே போய் அவர்களைச் சேருகிறது என்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா?” என்று சீர்திருத்தக்காரர் கேட்கிறார். அவர் வாய்விட்டுக் கேட்கிறார்; உங்களில் பலருக்கும் மனசுக்குள் இப்படிச் சந்தேகம் இருக்கும்.

மணியார்டர் செய்தவனுடைய பணமே நேராக வாங்கிக் கொள்ளுகிறவனிடம் போவதில்லையல்லவா?

பிதிருக்களிடம் நமக்குள்ள நன்றி மனோபாவமும், சாஸ்திரத்தில், நமக்குள்ள சிரத்தையுமே முக்கியம். “இன்னொருவனுடைய ஆரோக்கியத்துக்காக நான் 'டோஸ்ட்' சாப்பிடுகிறேன்” என்று டீ பார்ட்டியில் வெள்ளைக்காரர்களும் வேறொருவன் பேரைச் சொல்லிக்கொண்டு தாங்களே போஜனம் செய்கிறார்கள். தங்களுடைய மனோபாவத்தின் சக்தியால் இன்னொருவருக்கு ஆரோக்கியம் உண்டாகும் என்று நம்பி அப்படிச் செய்கிறார்கள். சிராத்தம் என்பதற்குச் சிரத்தையோடு பண்ணுவது என்பது அர்த்தம். சிரத்தை நமக்கு முக்கியம். ஒரு காரியம் என்று பண்ண ஆரம்பித்தால், அதற்குரிய சட்டப்படிதான் பண்ண வேண்டும். லெட்டர் எழுதினால், “இப்படித்தான் அட்ரஸ் எழுதுவேன். அந்தத் தபால் பெட்டியில் போடுவானேன்? எங்களகத்தில் அதைவிட நல்ல பெட்டி செய்து அதில் போடுவேன்” என்று சொல்லலாமா? காரியமில்லாத மனோபாவமாக இருக்கிற வரையில் அன்பு, பக்தி, ஞானம் இவற்றைக் கட்டுப்பாடின்றிச் செலுத்தலாம். காரியம் என்று செய்கையில் அதற்காக ஏற்பட்ட விதியை விடவே கூடாது.



- ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்



நடிகர் விக்ரமிடம் கேட்கக்கூடாத பத்துக் கேள்விகள் :

1. ஒரு வருஷத்துல ஒரு படம் மட்டும் கொடுத்தா தப்பா?

2. டூவீலர் லைசென்ஸ் வாங்கும்போது 'ஓ'தான் போடுவேன்னு அடம்பிடிச்சீங்களாமே?

3. நீங்க இல்லாம 'சேது' சமுத்திர திட்ட விழாவை எப்படி நடத்தலாம்?

4. உங்க வயசைக் கேட்டா அந்நியனா மாறிடுவீங்களா?

5. சுருள் முடிக்குள்ளே இத்தனை நாளா ரெண்டு பாம்பும் பல்லியும் மறைஞ்சிருந்ததாமே?

6. 'விக்ரம்' படத்துல கமல் நடிச்சாச்சு! 'கமல்' படத்துல நீங்க நடிப்பீங்களா?

7. உங்க பையனுக்கு காத்தாடி வாங்கப் போறப்பல்லாம் 'சூப்பர் ஸ்டார் பட்டம்' விலைக்கு கிடைக்குமான்னு விசாரிக்கிறீங்களாமே?

8. பாலாவோட க்ளோஸ் ஃப்ரெண்ட் இப்போ அஜீத் தானாமே... தெரியுமா?

9. நடுராத்திரியில ஆஸ்கார் கனவு கண்டு எழுந்து நடிக்க ஆரம்பிச்சிடுறீங்களாமே... இது உங்களுக்கே ஓவரா தெரியலையா?

10. அந்நிய குளிர்பான விளம்பரத்துல நடிச்சவங்களுக்கு கருட புராணத்துல என்ன தண்டனையாம்?

- பத்துக் கேள்வி பரமு

பின்கதைச் சுருக்கம்

சில புத்தகங்களை வாசித்ததும் மறந்துவிடுகிறோம். சில புத்தகங்கள் எப்போதாவது நினைவுக்கு வருகின்றன. மிகச் சில புத்தகங்கள் மட்டும்தான் நமது மனத்துடனும், மனச்சாட்சியுடனும் இரண்டறக் கலந்து விடுகின்றன. நினைவுக்கு வரும்போதெல்லாம் நெஞ்சைப் பிசைந்து என்னவோ செய்கின்றன.

என் கல்லூரிக் காலத்தில்தான் மாலனின் 'ஜனகணமன'வை முதலில் வாசித்தேன். ஆண்டு விடுமுறை சமயம். உள்ளூர் வாடகை நூலகம் ஒன்றில் உறுப்பினராகச் சேர்ந்து, தினசரி ஒரு நாவலை எடுத்து வந்து படித்துக்கொண்டிருந்தேன். சிவகாமியின் சபதம், தாய், மோகமுள் மாதிரி கனமான புத்தகம் என்றால் ஒரு ரூபாய். சுஜாதா, பாலகுமாரனெல்லாம் ஐம்பது பைசா. ஜனகணமனவெல்லாம் ஒல்லிப் புத்தகம். ஆகவே, இருபத்தைந்து காசுதான்.

எனக்கு அப்போது மாலன் யார் என்று தெரியாது. நாவலின் கதாநாயகர்களான காந்தியையும், கோட்ஸேவையும்கூடத் தெரியாது. ஒரு நாளைக்கு ஒரு நாவலை முடித்தாக வேண்டும். ஆகவே வாசிக்க ஆரம்பித்தேன்.

அரைமணி நேரம் ஓடியிருக்கும். எனக்கு அது ஒரு கதை போலவே தோன்றவில்லை. அதுநாள் வரை காந்தி, காந்தி என்று வரைந்து காட்டப்பட்ட கோட்டுருவம் காணாமல் போய், உயிரும் உடலுமாக, சிந்தனையும் செயலுமாக ஒரு நபர் என் எதிரே மிக வேகமாக ஓடிக்கொண்டிருப்பதாக உணர்ந்தேன். கொலைகாரன் என்று ஒற்றைச் சொல்லில் வருணிக்கப்பட்ட கோட்ஸே என்பவனும் ஒரு மனிதன்தான். அவனும் காந்தியைப் போலவே ஒரு தேசபக்தன்தான் என்பதை வாசிக்க, விவரிக்க முடியாத மனப் பரபரப்புக்கு ஆளானேன்.

இதென்ன, இந்த ஆள் உண்மையைச் சொல்கிறாரா, வெறும் கதைதானா என்று வரிக்கு வரி குழப்பமாக இருந்தது. ஒரு கொலைக்கான ஆயத்தங்களில் ஆரம்பமாகிற நாவல், சரியாகக் கொலை செய்யப்படுவதுடன் முடிந்துவிட்டதில், என்னுடைய ஏமாற்றம் அபரிமிதமாகிப் போனது. கோட்ஸேவையும் காந்தியையும் பற்றி முழுக்கத் தெரிந்துகொள்ளாவிட்டால், தலையே வெடித்துவிடும் போல இருந்தது. நூலகத்துக்கு மீண்டும் ஓடினேன். காந்தியைப் பற்றி அங்கே ஒரே ஒரு ஆங்கிலப் புத்தகம்தான் இருந்தது. லூயிஃபிஷர் எழுதிய



● மாலன்

# அல்கொய்தாவின் முன்னோடி! 15

பா.ராகவன்

புத்தகம். என் அப்போதைய ஆங்கில அறிவு சொல்லிக் கொள்ளும்படி யானதல்ல என்பதால், அதை ஒரு ரூபாய் கொடுத்து (மோகமுள் சைஸ்) எடுத்து வரத் தயக்கமாக இருந்தது. சில நாள் கழித்து முன்னால் இருபது பக்கம், பின்னால் இருபது பக்கம் காணாமல் போயிருந்த ஒரு சத்திய சோதனையின் பிரதி அகப்பட்டது.

முதலில் எனக்கு அந்தப் புத்தகம் பிடிக்கவில்லை. ஒரு ஆர்ட் ஃபிலிம் மாதிரி நகருவதாகப் பட்டது. 'ஜனகணமன' அளித்த பரவசத்தை எனக்கு சத்தியசோதனை அந்த வயதில் அளிக்கவில்லை. ஓர் எழுத்தாளராக, காந்தி மிகவும் போராடியிருக்கிறார் என்று நினைத்தேன். வாடகை நூலகரிடம் வாங்கி வந்திருந்த 'ஜனகணமன' பிரதி தொலைந்துவிட்டது என்று பொய் சொல்லிவிட்டு, புத்தகத்தை நானே வைத்துக்கொண்டேன். குறைந்தது மாதத்துக்கு ஒரு முறையாவது எடுத்துப் படித்துக்கொண்டிருந்தேன்.

பதினெட்டு வயதில் 'ஜனகணமன' எனக்களித்த பாதிப்பு மிகச் சாதாரணமானதுதான் என்று இப்போது தோன்றுகிறது. ஒரு த்ரில்லர் போலத்தான் அதை அப்போது வாசித்திருக்கிறேன். உண்மையில், ஜனகணமன ஒரு த்ரில்லர் அல்ல. அது ஒரு தத்துவ தரிசனம்.

உங்களுக்குத் தெரியுமா? கோட்ஸேவுக்கும் காந்திக்கும் மேலதிக வித்தியாசங்கள் கிடையாது. இருவரும் தேச பக்தர்கள். இருவரும் தனி வாழ்வில் ஒழுக்கம் பேணியவர்கள். இருவரும் கொள்கைப்பிடிப்பு உள்ளவர்கள். இருவரும் அதே கொள்கைக்காகத்தான் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள்.

வித்தியாசம் எங்கே வருகிறதென்றால், கோட்ஸே ஒரு வெறி பிடித்த தேசியவாதியாக மட்டுமே இருந்தான். காந்தி தம்மை ஒட்டுமொத்த மானுடகுலத்துக்கும் உரியவராக அர்ப்பணித்துக்கொண்டவர். இந்த ஒரு வேறுபாடுதான் கோட்ஸேவை ஒரு கொலைகாரனாகவும், காந்தியை புத்தருக்கும் இயேசுவுக்கும் பக்கத்தில் நிறுத்தி வைத்துப் பேசத்தக்கவராகவும் ஆக்கியது.

மாலன் சொல்கிறார்... "மேதைமைக்கும் பைத்தியக்காரத்தனத்துக்கும் ஒரு நூலிழைதான் வித்தியாசம்."

ஆனால் கோட்ஸே பைத்தியம் இல்லை. நிச்சயமாக இல்லை. சித்தாந்தத்தால் உந்தப்பட்ட ஓர் இயந்திர மனிதனாகத் தன்னைத் தானே மாற்றிக்கொண்டவன். தன்னுடைய நியாயங்களுக்கு அப்பால் உள்ள எந்த நியாயத்தையும் பொருட்படுத்த விரும்பாதவன். கொலையைக் கூடக் குற்ற உணர்ச்சி இல்லாமல் செய்து முடிக்கக் கூடியவன். இன்றைய அல்கொய்தா தற்கொலைப் படைப் போராளிகளுக்கெல்லாம் அவன்தான் முன்னோடி.

செப்டெம்பர் 11, 2001 அன்று அமெரிக்காவில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடங்களின் மீது விமானம் மோதி, அழித்துச் சிதறிய தீவிரவாதிகளுள் முதன்மையானவன் முகம்மது அட்டா. கெய்ரோ பல்கலைக்கழகத்தில் சிவில் இன்ஜினீயரிங் முடித்தவன். பிறகு ஜெர்மனிக்குச் சென்று, அங்கே அதே துறையில் மேல் படிப்பு முடித்துவிட்டு, மேலைத் தத்துவங்களையும் இஸ்லாமியத் தத்துவங்களையும் கரைத்துக் குடித்தவன். அருமையாக வயலின் வாசிக்கத் தெரிந்தவன். மிக மென்மையானதொரு காதலனும்கூட. கவிதை எழுதுவான். கண்ணீர் மல்க குர்ஆன் ஓதுவான். ஆனாலும் என்ன? விமானம் ஓட்டிச் சென்று மோதி, தானும் இறந்து, உலகையும் உலுக்கிவிட்டுப் போய்ச் சேர்ந்தான்.

கோட்ஸேவுக்கு காதல் தெரியாது. கவிதை எழுதும் வழக்கம் கிடையாது. வயலின் கிடையாது. அவ்வளவுதான் வித்தியாசம். மற்றபடி இதே தீவிரம்தான். இதே கொள்கைப்பிடிப்புதான். இதே சித்தாந்த உந்துதல்தான்.

மாலனின் ஜனகணமன, கோட்ஸே என்

---

பருத்திக்காடு
காவல் பொம்மைக்கு
கந்தலாடை!

- கோவை மாவட்டத்துக்கு பேருந்தில் பயணம் செய்தபோது நான் நேரில் கண்ட காட்சியை இப்படி ஹைக்கூவாக்கினேன். அதுவே எனக்கு பிடித்ததாகவும் ஆகிவிட்டது.

- அறிவுமதி

**எனக்குப் பிடிச்ச ஹைக்கூ...**



கிற மனிதனுடைய முழு வடிவத்தையும், சிந்தனைப் போக்கையும் அப்பட்டமாகப் படம் பிடிக்கிறது என்கிற வகையில் ஒரு சரித்திர ஆவணமும்கூட. இந்த நாவலில் துப்பறியும் போலீஸ்காரர் பாத்திரம் ஒன்றைத் தவிர, வேறு எதுவுமே கற்பனை கிடையாது. சம்பவங்கள் அத்தனையும் உண்மை.

ஜனகணமனவை முதலில் வாசித்த காலத்துக்குப் பல வருடங்களுக்குப் பிறகு, எனக்கு வாசிக்கக் கிடைத்த 'கோட்ஸேவின் மரண வாக்குமூல'மும் கோட்ஸேவைப் பற்றி ஹிம்ஸாகர் என்கிற சரித்திர ஆசிரியர் எழுதிய ஓர் ஆய்வு நூலும் இதை எனக்கு உண்மை என்று நிருபித்தன.

பொதுவாக சரித்திரக் கதைகளில் புகைப்பட ஆதாரம் பெற முடியாத மன்னர்களும் மலர் மஞ்சங்களும் மட்டுமே வந்து கொண்டிருந்த காலத்தில், ஒரு சமகால சரித்திரத்தை நாவலாக்க மாலன் தீர்மானித்தது எப்படி என்பது சுவாரஸ்யமான விஷயம்.

ஒருநாள் வீட்டில் சாப்பாட்டு மேஜையில் சண்டை வந்துவிட்டது. மாலனின் அப்பாவும் அம்மாவும் தீவிர காந்தியவாதிகள். மாலனும் மற்ற சகோதரர்களும் இன்றைய யுகத்துப் பிரதிநிதிகள். அதாவது, காந்தியை விமர்சிப்பதே ஒரு ஃபேஷன் என்று நினைக்கக்கூடிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆகவே காந்தியை ஒரு நம்பிக்கை துரோகி என்றும், மோசமான கணவர் என்றும், ஒரு ஃபாசிஸ்ட் என்றும் ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர் என்றும் இன்னபலவாகவும் அவர்கள் விமர்சித்துக் கொண்டிருக்க, மாலனின் அம்மாவுக்கு திட்டக்கூட வாய் வராமல் அழுகை வந்துவிட்டது.

காந்தியை விமர்சிக்கக் கூடாதா? அவர் மட்டும் என்ன விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவரா? சொல்வது தவறென்றால், மாற்றுக் கருத்தை முன்வைக்க வேண்டியதுதானே?

இவ்வாறு முதலில் தோன்றினாலும், யோசித்துப் பார்த்தபோது மாலனின் அம்மா மட்டுமல்ல; சுதந்தரத்துக்கு முந்தைய தலைமுறைக்காரர்கள் அத்தனை பேருமே காந்தியை வாழ்விக்க வந்த ஒரு தெய்வமாகத்தான் பார்க்கிறார்களே தவிர, ஓர் அரசியல்வாதியாகப் பார்ப்பதே கிடையாது என்று மாலனுக்குத் தோன்றியது.

ஏன் அவரை ஓர் அரசியல்வாதியாகப் பார்க்கக் கூடாது? அதையும் தாண்டி ஒரு மனிதனாக நிறுத்திவைத்து எடை போட்டுப் பார்க்கக் கூடாது?

இந்த யோசனையின் விளைவாகத்தான், மாலனே காந்தியை ஆராய ஆரம்பித்திருக்கிறார். முன் அபிப்பிராயங்கள் இல்லாமல், முன் தீர்மானங்கள் இல்லாமல், அந்த ஆய்வின் போக்கு எங்கு கொண்டு அவரைச் சேர்த்ததோ, அந்த இடத்தில் நாவல் முடிந்து போகிறது.

காந்தியின் மரணம் என்பது ஒரு 'முற்றும்' அல்ல. ஏராளமான புதிய அத்தியாயங்களின் தொடக்கப்புள்ளி அது. காந்தி இருந்திருந்தால் இந்தியா இப்போது எப்படி இருந்திருக்கும் என்று யோசிப்பதில் பிரயோஜனமில்லை. அவர் விட்டுச் சென்றவற்றுள் எதையெல்லாம் நாம் பரிசீலித்திருக்கிறோம் என்றாவது சிந்தித்துப் பார்க்கலாம். மாலனின் 'ஜனகணமன' மிகவும் மௌனமாக நம்முன் வைக்கும் கோரிக்கையும் அதுதான்.

தமிழில் மிக நேர்த்தியாக, கச்சிதமாக, நம்ப முடியாத அளவுக்குக் கட்டுக்கோப்புடன் எழுதப்பட்ட நாவல்களுள் ஒன்று இது. திரைப்படங்களில் மட்டுமே அதிகம் உபயோகிப்படும் 'கட் ஷாட்' உத்தி, இந்த நாவலில் முதல்முறையாக மிக லாகவமாகக் கையாளப்பட்டிருக்கிறது. வாசிக்க ஆரம்பித்தால் ஒரு மணி நேரத்தில் முடித்து வைத்து விட முடியும்.

ஆனால் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத பாதிப்பை உண்டாக்கக்கூடிய படைப்பு இது. (தொடரும்)



## எனக்குப் பிடிச்ச டிஷ்...

தயிர் சாதத்தை மூணு வேளை கொடுத்தாலும் மூக்கு புடிக்க அடிப்பேன். ஒருமுறை ஐரோப்பா போனப்போ தயிர் சாதம் இல்லாம நான் பட்ட பாட்டை இப்ப நினைச்சாலும் அழுகை அழுகையா வருது.

- மீரா கிருஷ்ணா

# தவளைகள் கவனத்திற்கு!

‘தவளைகள் நன்றாக இருந்தால் தான் மக்கள் நன்றாக இருப்பார்கள்’ எனும் புதிய தத்துவம் இப்பொழுது உக்ரைனில் முளைத்திருக்கிறது. ‘தவளைகளின் நலனைக் காப்போம்’ என்ற கோஷத்துடன் உக்ரைனில் ஒரு பிரமாண்டமான திட்டத்தை விரைவில் செயல்படுத்தப்போகிறார்கள். அது என்ன திட்டம் தெரியுமா? தவளைகளும், குட்டித் தவளைகளும் சாலைகளை சுலபமாகக் கடந்து போவதற்கு குட்டி நடைபாதைகளையும், சுரங்கப் பாதைகளையும் அமைக்கும் திட்டம்தான் இது.

உக்ரைனில் உள்ள லவாவ் எனும் பகுதியில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. அவசர அவசரமாக இந்த நெடுஞ்சாலையை அமைப்பதற்குக் காரணம், தவளைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதுதான். சமீபகாலமாக சாலைகளைக் கடக்கும் பொழுது இறக்கும் தவளைகளின் எண்ணிக்கை மிகுதியாகி வருகிறது. வாகனங்களின் நடமாட்டமும் ஒய்வதாகத் தெரியவில்லை. தவளை வரும்பொழுதெல்லாம் ஹாரன் அடித்து, பிரேக் பிடித்து, தவளையை ஓட்டிவிட்டு அதற்குப் பிறகு வண்டியை ஓட்டுவதில் பல நடைமுறை சிரமங்கள் இருக்கின்றன. தவளைகளுக்கும் சாலை விதிகளை சொல்லிக் கொடுக்க முடியாது. இதையெல்லாம் யோசித்துப் பார்த்த அந்தப் பகுதி நிர்வாகம், பேசாமல் ஒரு நெடுஞ்சாலையைக் கட்டிவிடுவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. இதற்கு எவ்வளவு செலவாகும் என்று கால்குலேட்டரைத் தட்டியபொழுது கிடைத்த தொகை 10 மில்லியன் யூரோ!

உக்ரைனில் கிட்டத்தட்ட 45,000 வகையான உயிரினங்கள் இருக்கின்றன. அவற்றுள் தவளைகளுக்கு மட்டும் எப்படியோ இந்த அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது. "இந்தத் திட்டம் மட்டும் நடைமுறைக்கு வந்தால், சந்தேகமேயில்லாமல் தவளைகளுக்கு ஏக குஷிதான். இனி அவை ஜாலியாக ஊர் சுற்றும்" என்று புளகாங்கிதத்துடன் சிரிக்கிறார், இந்தத் திட்டத்தை நிர்வகிக்கப் போகும் ரோஸ்டிஸ்லாவ்.

உக்ரேனியர்களுக்கு பற்றிக்கொண்டு வருகிறது. ‘என்னதான் சொன்னாலும் தவளைக்காகப் போய் இவ்வளவு செலவு செய்வது டூமச்’ என்கிறார்கள். "10 மில்லியன் யூரோ என்பது ஐரோப்பியர்களுக்கு வேண்டுமானால் சாதாரணத் தொகையாக இருக்கலாம். ஆனால் எங்களுக்கு அது மிகப்பெரிய முதலீடு. அதை வைத்து உருப்படியாக எதையாவது செய்யலாம்" என்று வேறு பல முக்கிய திட்டங்களைப் பட்டியலிடுகிறார்கள். ‘உவ்வே, போயும் போயும் தவளையை இப்படி விழுந்து விழுந்து கவனிக்கிறது சுத்தமா நல்லாயில்லை’ என்று முகம் சுளிக்கிறார்கள் பலர். இப்படியாக, தவளைகளை ஆதரித்தும், எதிர்த்தும் பல விவாதங்கள் உக்ரைனில் கிளம்பியுள்ளன. இவை குறித்து தவளைகளின் கருத்து என்ன என்பது தெரியவில்லை. அவை தன் பாட்டிற்கு வழக்கம் போல குதித்துக் கொண்டிருக்கின்றன.

**“தவளைகளுக்காக செலவிடப்படும் தொகை 10 மில்லியன் யூரோ!”**



சரி, தவளைகளை அப்படியே விட்டு

விட்டு தெற்கு ரஷ்யாவிற்குத் தாவுவோம். சமீபத்தில் இங்கு ஒரு சுவாரஸ்யமான சம்பவம் நடந்திருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் சிலர் ஊர் சுற்றி விட்டு காரில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களுக்கு வழி மறந்து விட்டது. இதில் மழை வேறு. இனியும் காரை ஓட்டிச் செல்ல முடியாது என்கிற நிலை. என்ன செய்வது என்று யோசித்து, பிறகு அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். பெண்களையும், குழந்தைகளையும் ஒரு காரில் ஏற்றிப் பாதுகாப்பாக ஓரிடத்தில் நிறுத்தி வைத்துவிட்டு, வழி தேடி மற்றொரு காரில் இரண்டு ஆட்கள் புறப்பட்டனர்.

அப்பொழுது சாலையின் குறுக்கே புஸ¬ புஸ¬ தோலுடன் ஒரு ஆட்டு மந்தை தென்பட்டது. ஆடுகளின் சொந்தக்காரனைக் காணோம். அவர்களுக்கு ஒரு சபலம். மனித வாசமே இல்லை. மழை வேறு. யாருக்கும் தெரியாமல் இந்த மந்தையிலிருந்து ஒரே ஒரு ஆட்டை மட்டும் ஓட்டிக்கொண்டு போகலாம் என்று முடிவு செய்தனர். காரின் கதவை ஒருவன் திறந்து வைத்தான். மற்றொருவன் 'இங்கி பிங்கி பாங்கி' போட்டுப் பார்த்து ஒரு கொழுத்த ஆட்டைத் தேர்ந்தெடுத்து அதை காருக்கு அருகே ஓட்டி வந்தான். ஆடு சரியான குண்டு. ஒருவனால் மட்டும் உள்ளே ஏற்ற முடியவில்லை. பிறகு இருவரும் சிரமப்பட்டு அந்த ஆட்டை வண்டியில் ஏற்றி, 'அப்பாடா யாரும் பார்க்கவில்லை' என்று பெருமூச்சுடன் சாவியைத் திருகும்பொழுதுதான் அந்த ஆட்டை க்ளோஸ்-அப்பில் பார்த்திருக்கிறார்கள்.



அவ்வளவுதான்... மின்சாரக் கம்பியை மிதித்துவிட்டதைப் போல இருவரும் அலறத் தொடங்கினர். ஏன் தெரியுமா? அவர்கள் ஓட்டி வந்தது உண்மையில் ஆடு அல்ல, அது ஒரு வகை ஆட்டு நாய். வாயைத் திறந்தால் சதையைப் பிய்க்காமல் வாயை மூடாது. அவ்வளவு சமர்த்து. சரி என்னதான் செய்கிறார்கள் பார்ப்போம் என்று இத்தனை நாடகத்தையும் பொறுமையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அந்த புஸ¬ புஸ¬, சற்றுப் பின்னால் நகர்ந்து முன்னிரண்டு பற்களைக் காட்டி, தன் மொழியில் பேசத் தொடங்கியது.

இதற்கிடையில் தன் ஆட்டு நாய் குரைப்பதைக் கேட்டு மறைவிடத்திலிருந்து ஓடிவந்தான் ஒரு இடையன். இருவரும் அழுதபடியே அவனிடம் நிலைமையை விளக்க, பரிதாபப்பட்ட அவன் 'சரி போனால் போகட்டும் வீட்டுக்குப் போங்க' என்று சொல்லி இருவரையும் வண்டி ஏற்றி அனுப்பியிருக்கிறான். இருவரையும் 'உர்'ரென்று ஒரு முறை முறைத்துவிட்டு, அந்த புஸ¬ புஸ¬ தன் நண்பர்களுடன் மறுபடியும் இணைந்து கொண்டது.

- மருதன்

# அமரர் கல்கி

# ஜலதோஷ



பதினைந்து வருஷத்துக்கு முன்னால் இரண்டு மூன்று மாதத்துக்கு ஒரு தடவை தான் எனக்கு ஜலதோஷம் வரும். நாளடைவில் மாதத்துக்கு ஒரு தடவை அதன் விஜயத்தை எதிர்பார்க்கும் நிலைமை ஏற்பட்டது. பிறகு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை, அப்புறம் வாரத்தில் மூன்று நாலு நாள் - கடைசியாக ஜலதோஷமில்லாத நாளே இல்லையாயிற்று.

இந் நிலைமையில் நான் அடைந்த அநுகூலங்கள் பல. முக்கியமாக புதிய மனிதர்களை அறிமுகம் செய்துகொள்வதற்கு ஜலதோஷம் ஒரு சிறந்த சாதனமென்று கண்டேன். ரெயிலில் ஏறி உட்கார வேண்டியதுதான் தாமதம். எதிரில் இருப்பவர், 'என்ன ஸார்! ஜலதோஷம் போலிருக்கு' என்று பேசத் தொடங்கிவிடுவார். 'ஆமாம்!' என்றதும் வைத்தியம் சொல்ல ஆரம்பிப்பார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் இவ்விஷயத்தில் அளவில்லாத பெருமைகொள்ளலானேன். யாராவது ஜலதோஷ சிகிச்சை சொல்ல ஆரம்பித்தார்களானால், அவர்களை நான் அதிகம் பேச விடுவதில்லை.

''இங்கே பாருங்கள், ஸார்! உங்களுக்கு எல்லா விஷயமும் தெரிந்திருக்கலாம். ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இந்த ஜலதோஷ விஷயம் இருக்கிறதே, அதில் மட்டும் நான் தான் 'அதாரிட்டி!' வேறு யார் சொல்லுவதையும் நான் கேட்க முடியாது. பதினைந்து வருஷத்து அநுபவம்னா சும்மாவா?'' என்பேன்.

இவ்வளவு பெருமையுடன் இருந்த எனக்கு, ஏழெட்டு மாதத்துக்கு முன் கர்வபங்கம் ஏற்பட்டது.

ஸ்ரீமான் டி.கே. சிதம்பரநாத முதலியாருக்கு மழைக் காலத்தில் ஒருநாள் உடம்பு சுரமென்றும்,' படுத்த படுக்கையாயிருக்கிறாரென்றும் கேள்விப்பட்டதின் மேல், அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவரது வீட்டை அடைந்ததும் நான் கண்ட காட்சி - அதைக் குறிப்பிடத் 'திகைப்பு,' 'பிரமிப்பு' என்பனவெல்லாம் சரியான வார்த்தைகளல்ல. முற்றத்தின் மூலையில், மாடியில் பெய்த மழை ஜலம் கொட கொடவென்று தாரையாய்க் கொண்டிக் கொண்டிருந்தது. அந்தத் தாரையில் முதலியார் சாவதானமாக உட்கார்ந்து ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்.

ஸ்நானம் முடிந்து வந்ததும், ''உங்களுக்கு சுரம் என்று சொன்னார்களே!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

''ஆமாம்; சுரந்தான். நேற்று 104 டிகிரி இருந்தது. இன்று 102 டிகிரி இருக்கிறது'' என்றார்.

''பின், அதற்குள் பச்சை ஜலத்தில்...''

''ஆமாம், சுரத்துக்கு இது சிகிச்சை. குளிர்ந்த ஜல ஸ்நானத்தினால்தான் நேற்றை விட இன்று குறைந்திருக்கிறது. நாளைக்குப் பூராவும் சொஸ்தமாகி விடும்'' என்றார்.

பிறகு, தமது 'மலேரியா' சுரத்தின் கதையை ஆரம்பித்தார். பதினைந்து வருஷ காலம் மலேரியாவினால் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பயனில்லையென்றும், கடைசியாகக் குளிர்ந்த ஜல ஸ்நானத்தின் மூலந்தான் மலேரியாவை வெற்றி கொண்டதாகவும் கூறினார்.

என்னுடைய ஜலதோஷத்தின் சரித்திரத்தை எடுத்துவிட்டேன்.

''தினம் இரண்டு தடவை காலையிலும் மாலையிலும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து வாருங்கள். ஜலதோஷம் நீங்காவிட்டால், என்னைக் கேளுங்கள்'' என்றார்.

''ஆள் உயிரோடிருந்தாலல்லவா உங்களைக் கண்டு கேட்பதற்கு? எத்தனையோ புத்தகங்களில் படித்திருக்கிறேன். எத்தனையோ முறை 'இன்று முதல் வெந்நீரின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை' என்று தீர்மானித்துக் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வேன். சில மணி நேரத்துக்குள் கண்டிப்பாய் ஜலதோஷம் பிடித்துவிடும். பிறகு பழையபடி வெந்நீருக்குத் திரும்புவேன்.



# சரித்திரம்!

இம்மாதிரி சோதனை தொடங்கிவிட்டு விட்ட முறைகளுக்குக் கணக்கே இல்லை'' என்றேன்.

''ஸார்! நீங்கள் ஒரு தடவை ஸ்நானம் செய்துவிட்டு நிறுத்தியதுதான் தவறு. தொடர்ந்து மறுபடியும் மறுபடியும் செய்திருக்க வேண்டும்'' என்றார் ஸ்ரீமான் முதலியார்.

வேறு சந்தர்ப்பத்தில் வேறொருவர் இம்மாதிரி யோசனை சொல்லியிருந்தால் எக்காரணத்தினாலோ அவருக்கு என்னை இப்பூவுலகில் பார்த்திருக்க விருப்பமில்லையென்று தீர்மானித்திருப்பேன். ஆனால் ஸ்ரீமான் முதலியார் மீது இத்தகைய சந்தேகம்கொள்ளச் சிறிதும் இடமில்லை. மேலும் அவர் நான் பார்த்திருக்கும்போதே மறுபடியும் சென்று, முற்றத்தின் மூலையில் உட்கார்ந்து மழைத் தாரையில் ஸ்நானம் செய்துவிட்டு வந்தார். அல்லாமலும் வீட்டிலிருந்த ஏழு வயதுப் பெண் குழந்தையைக் கூப்பிட்டார்.

''அம்மா! உனக்கு ஏதாவது சுரம், கிரம் வந்தால் என்ன செய்வாய்?'' என்று கேட்டார்.

''குளிர்ந்த ஜலத்தில் குளிப்பேன்'' என்றது குழந்தை. இதற்குப் பிறகு என் உயிருக்குத் துணிந்தேன். தும்மலுடன் வீட்டிற்குள் நுழைந்தவன், கொட்டுகிற மழையில் நேரே குழாயடிக்குச் சென்று உட்கார்ந்தேன்.

ஏறக்குறைய ஒன்பது மாதம் ஆகிறது. தினந்தோறும் தவறாமல் இரண்டு வேளை குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து வருகிறேன். உயிரோடு இருக்கிறேன் என்பது வெளிப்படை.

குளிர்ந்த ஜலம் வெற்றி பெற்றுவிட்டது! ஜலதோஷத்துக்குத் தோல்விதான்! அது முழுதும் நீங்கிவிட்டது என்று சொல்லவில்லை. இரண்டு மாதத்துக்கு ஒரு முறையாயிருந்து, மாதாந்தரமாகி, மாதம் இருமுறை, மும்முறை, வாராந்தரம், வாரம் இருமுறை, மும்முறை எல்லாமாகிக் கடைசியில் தினசரியாகி இருந்த ஜலதோஷம், இப்போது மறுபடியும் பின்னோக்கிச் சென்று, மாதம் ஒரு முறைக்கு வந்திருக்கிறது. இனி நான் வெந்நீரின் அடிமையல்லன். குளிர்ந்த ஜலத்தைக் கண்டு பயமே இல்லை.

- அதிர்ஷ்ட கவசத்திலிருந்து...
வானதி பதிப்பகம்

# அந்த நாள் ஞாபகம்

## திரையுலக நினைவுகள்

'சம்சாரம் அது மின்சாரம்' படத்தை வாங்கிய என் இனிய நண்பர் சுரேஷ் 'இது உங்களுக்கு என்னுடைய 'கிஃப்ட் செக்' என்று சொல்லியே, விலைக்கான பணத்தை செக்காகத் தந்தார். அதாவது படம் நிச்சயம் ஓடாது. இருந்தாலும் ஏவி.எம். நிறுவனத்துடனான வர்த்தக உறவு விட்டுப்போய்விடக் கூடாது என்பதற்காக சும்மா ஒரு அன்பளிப்பாக அந்தப் பணத்தை எனக்குத் தருவதாக நினைத்து 'கிஃப்ட் செக்' என்று சுரேஷ் குறிப்பிட்டார்.

எல்லா ஏரியாக்களுக்குமே மிகக் குறைந்த விலைக்குத்தான் நாங்கள் அந்தப் படத்தை விற்றோம்.

ஆனால் படம் நிச்சயம் நன்றாக ஓடும் என்று எனக்கு மட்டும் நம்பிக்கை இருந்தது.

அதற்குக் காரணம், விசு அந்தப் படத்திற்காக உழைத்த உழைப்பு வீண் போகாது என்று நான் கருதியதுதான். ஒரு தவம் போல விசுவும், அவர் தம்பி கிஷ்முவும் பணியைச் செய்தார்கள்.

காலை ஒன்பது மணிக்கு ஷூட்டிங் என்றால், ஒன்பதே காலுக்கு முதல் ஷாட் எடுக்கப்பட்டிருக்கும். அதேபோல மாலை ஆறு மணி வரை படப்பிடிப்பைக் கச்சிதமாக நடத்தினார். வீணாக ஒரு ஆர்ட்டிஸ்ட்டும் கிடையாது.

மொத்தம் முப்பத்தைந்து நாட்கள் ஷூட்டிங். அவ்வளவுதான். முப்பத்து நான்கு ரோல்களில் (3400 அடி) படத்தை விசு முடித்து என்னை வியப்படைய வைத்தார்.

படத்தின் கிளைமாக்ஸ் காட்சி ஒரு முக்கிய அம்சமாக அமைந்தது.


படம் முடிந்ததும் போட்டுப் பார்த்துவிட்டு, 'பயமா இருக்கு' என்று என் இளைய சகோதரர் பாலு குறிப்பிட்டார். கிளைமாக்ஸை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற தம் அச்சத்தை அவர் வெளியிட்டார்.

படம் பார்த்த இயக்குனர் எஸ்.பி. முத்துராமன் 'இந்த கிளைமாக்ஸை படம் தாங்காது' என்று அபிப்ராயப்பட்டார்.

ஆனால் எனக்கோ விசுவின் நாடகத்தில் ரசிகர்கள் தந்த 'ஸ்டாண்டிங் ஓவேஷன்' நினைவில் இருந்தது. 'நிச்சயம் ஹிட் ஆகும். கிளைமாக்ஸை மாற்ற வேண்டாம்' என்று நான் உறுதியாக இருந்தேன்.

சென்ஸார் போர்டு உறுப்பினர்கள் படம் பார்த்தார்கள். ஒரு படத்தை அவர்கள் பார்த்து முடித்ததும், சில நிமிடங்களில் தயாரிப்பாளரை உள்ளே கூப்பிட்டு முடிவைச் சொல்வார்கள். பொதுவாக அதுதான் வழக்கம்.

இந்தப் படத்தை அவர்கள் பார்த்து



* மெல்லத் திறந்தது கதவு

முடித்து இருபது நிமிடங்களுக்கு மேல் ஆகியும் என்னைக் கூப்பிடவில்லை. 'ஏதாவது விவகாரம் பண்ணுவார்களோ' என்று பயம் ஏற்பட்டது.

அந்தப் படபடப்புடன் உள்ளே நுழைந்தேன்.

''கங்கிராட்ஸ். யு சர்டிஃபிகேட் வித்தவுட் கட்ஸ்'' என்றார்கள்.

இதைச் சொல்ல ஏன் இத்தனை நேரம்



# 38

## அவர் வராமல் போனால் ஏமாற்றமடையாதே!

எடுத்துக் கொண்டார்கள் என்று தெரிந்து கொள்ள எனக்கு ஆவலாக இருந்தது. ஆனால் அவர்களை அப்படிக் கேட்பது முறையாக இருக்காது. எனவே "இந்தப் படத்தின் கிளைமாக்ஸ் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று நட்பு ரீதியில் கேட்டேன். அவர்கள் சொன்ன பதில், "நாங்கள் படம் பார்த்துவிட்டு அதைப் பற்றி பாராட்டித்தான் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அதுதான் உங்களை அழைக்க நேரமாகிவிட்டது"

* சம்சாரம் அது மின்சாரம்



# 'எம்.ஜி.ஆர். ஏமாற்றுவாரா?'

படம் நிச்சயமாக 'ஹிட்' என்பது அப்போதே எனக்கு புரிந்துவிட்டது.

அப்படியே படம் 'ஹிட் ஆனது.

குறைந்த பணம் தந்து வாங்கிய எல்லா விநியோகஸ்தர்களுமே பெரும் லாபம் கண்டார்கள். மத்திய அரசின் தங்கப் பதக்கத்தையும் 'சம்சாரம் அது மின்சாரம்' பெற்றது எங்களுக்குத் தனிப் பெருமை.

'ஹோல்ஸம் என்டெர்டெயின்மென்ட்' என்ற பிரிவில் அந்தப் படத்திற்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. எப்படியிருந்தாலும், மத்திய அரசின் தங்கப் பதக்கத்தைப் பெற்ற முதல் தமிழ்ப் படம் என்ற தனிப்பெருமையை அந்தப் படம் தட்டிச் சென்றது.

அந்தப் படத்திற்கான விருதை நேரில் பெற டெல்லிக்குச் சென்றபோது விசுவை மட்டுமல்லாமல், அவரது குடும்பத்தினரையும் விமானத்தில் முதல் வகுப்பில் அழைத்துச் சென்றிருந்தோம். குடியரசுத் தலைவரிடமிருந்து பரிசு பெறும் காட்சியை அவருடைய குடும்பத்தினரும் கண்டு களிக்கட்

டுமே என்ற எண்ணத்தில், அவர்கள் எல்லோரையும் வரச் சொல்லியிருந்தோம். டெல்லியில் நட்சத்திர ஹோட்டலில் அவர்களைத் தங்க வைத்தேன். அதே ஹோட்டலில் நானும் தங்கினேன்.

விழா முடிந்தது. டெல்லியிலிருந்து விமானம் மூலம் சென்னைக்குத் திரும்ப நாங்கள் எங்கள் ஹோட்டல் அறைகளிலிருந்து விமான நிலையம் கிளம்பத் தயாரானோம்.

விசு தம் அறையிலிருந்து எனக்கு போன் செய்தார்.

"ஸார்... கொஞ்சம் அங்கேயே இருங்க. உங்களைப் பார்க்கணும்."

''கிளம்பிட்டேன் விசு... கீழே ரிஸப்ஷன் லவுஞ்சுக்குதான் வர்றேன். அங்கே பார்க்கலாமே...''

"இல்ல ஸார்... உங்க ரூம்ல வந்துதான் பார்க்கணும். அங்கேயே இருங்க..."

சில நிமிடங்களில் என் அறைக்கு வந்த விசுவும் அவர் மனைவியும், நான் சற்றும் எதிர்பாராத வகையில் அப்படியே என் காலில் விழுந்து வணங்கி எழுந்தார்கள்.

"இந்தப் பயணம் என் வாழ்க்கையில் மறக்க முடியாதபடி அமைந்துவிட்டது. இந்த வாய்ப்புக்காகவும், எங்கள் குடும்பத்தையும் அழைத்து வந்து நான் விருது பெறும் காட்சியை அவர்களும் பார்க்க ஏற்பாடு செய்த தங்கள் பெருந்தன்மைக்கும், இப்படித்தான் நன்றி சொல்ல எனக்குத் தோன்றியது" என்று நெகிழ்ந்து போய்ச் சொன்னார் விசு.

'சம்சாரம் அது மின்சாரம்' வெற்றி விழாவில் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார்.

அவரை அழைக்கப் போனபோது நான் அவரிடம் "ஸார்... மொத்தம் 184 பேருக்கு நீங்கள் கேடயம் வழங்கிக் கௌரவிக்க வேண்டும். சிலருக்கு மட்டும் தங்கள் கையால் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்குத் தராமல் இருந்துவிடக் கூடாது. இதைத் தாங்கள் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்'' என்று அன்புடன் கேட்டுக் கொண்டேன்.

"நிச்சயமாக எல்லோருக்கும் என் கையால் கேடயம் தருகிறேன்'' என்று எம்.ஜி.ஆர். உறுதியாகச் சொன்னார்.

விழா தினத்தன்று ஒரு பெரிய ரயில் விபத்து ஏற்பட்டு, அரசாங்க ரீதியாக அவர் சில நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டியிருந்தது.

"இன்று விழாவுக்கு முதலமைச்சர் வருவது சந்தேகம்" என்று எல்லோரும் சொன்னார்கள்.

விழா ஏற்பாடுகளுக்காக நான் விஜய சேஷ மஹாலுக்குச் சென்றிருந்தபோது, அங்கிருந்த என் மதிப்பிற்குரிய நாகி ரெட்டியார்கூட "இந்த முக்கிய விவகாரத்தால் ஸி.எம். இன்று ரொம்ப பிஸியாக இருப்பார். ஒரு வேளை அவர் வராமல் போனால் ஏமாற்றமடையாதே" என்றார்.

"இல்லை ஸார். எம்.ஜி.ஆர். என்னை நிச்சயம் ஏமாற்ற மாட்டார். விழாவுக்கு வருவார் பாருங்கள்'' என்று நான் நம்பிக்கையுடன் சொன்னேன்.

விழா நேரத்திற்குச் சற்று முன்கூட்டியே முதல்வர் எம்.ஜி.ஆர். வந்து விட்டார்.

மொத்தம் 184 கேடயங்கள். அவ்வளவையும் பொறுமையுடன் கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் அன்போடு வழங்கினார்.

அந்தக் கேடயம் பொருத்தப்பட்டிருந்த சலவைக்கல் பீடத்தையும் சேர்த்து, ஒவ்வொன்றும் எட்டேகால் கிலோ எடை.

கொஞ்சம்கூட சளைக்காமல் கொடுத்துக்கொண்டே வந்தார் எம்.ஜி.ஆர். ஒரு கேடயத்தில் இருந்த சிறு பிசிறு அவர்

**ஷ**ங்கர் சார்தான். எங்கியோ இருந்த என்னை இன்னைக்கு தமிழகம் முழுக்க தெரிய வைச்சிருக்கார். அவருக்கு என்னைக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன். என் வாழ்க்கையில மறக்க முடியாத நபர்.

- பரத்

**எனக்குப் பிடிச்ச டைரக்டர்...**



கையைக் கிழித்ததில் ரத்தம்கூட இலேசாக வந்தது. ஜிப்பாவும் லேசாகக் கிழிந்துவிட்டது. அதைப் பற்றியும் அவர் கவலைப்படவில்லை. அவ்வளவு பெருக்கும் தந்து வாழ்த்திவிட்டுதான் கிளம்பினார்.

அது ஒரு மறக்க முடியாத படம். அது ஒரு மறக்க முடியாத விழா.

**1985**ஆம் ஆண்டு ஒரு நாள் எனக்கு திடீரென்று பாரதிராஜா டெலிபோன் செய்தார்.

"ஸார்... நானும் இளையராஜாவும் உங்களைப் பார்க்க வீட்டுக்கு வரலாமென்றிருக்கிறோம்" என்றார்.

இருவரும் வந்தார்கள்.

"எம்.எஸ். விஸ்வநாதன் இப்போது கொஞ்சம் சிரமத்தில் இருக்கிறார். அவருக்கு ஒரு படம் எடுத்து உதவி செய்தால் நன்றாக இருக்கும்" என்று யோசனை சொன்னார்கள். அப்போது நாங்கள் நிறையப் படங்கள் எடுத்துக் கொண்டிருந்தோம். அந்த யோசனையை நான் உடனே ஏற்றுக் கொண்டேன்.

அப்பச்சிக்கு மெல்லிசை மன்னரின் பாட்டுகள் மட்டுமல்ல, அவரது பண்புகளும் மிகவும் பிடிக்கும். அவரது மனதில் நிறைந்திருந்த மனிதர்களில் எம்.எஸ்.வியும் ஒருவர்.

ஒருமுறை அப்பச்சி என்னை அழைத்து 'விஸ்வநாதனை மட்டும் என்றைக்கும் விட்டுவிடாதே. அவருக்கு எப்போது எந்தச் சிரமம் ஏற்பட்டு அது உனக்குத் தெரிய வந்தாலும், அவருக்கு உதவி செய்யத் தயங்காதே' என்று சொன்னார். மெல்லிசை மன்னரை எனக்கும் பிடிக்கும். அவர் மீது எனக்கு என்றும் மரியாதை உண்டு.

பாரதிராஜாவும், இளையராஜாவும் சொன்னதும், எம்.எஸ்.விக்கு உதவ வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட படம்தான் மெல்லத் திறந்தது கதவு!

இளையராஜாதான் அந்தப் படத்துக்கு இசையமைப்பதாக இருந்தது. 'நானும் எம்.எஸ்.வி.யும் சேர்ந்து இப்படத்துக்கு மியூஸிக் பண்றோமே" என்று ராஜா கேட்டபோது, எனக்கு அந்த ஐடியா பிடித்திருந்தது. இரண்டு இசை மேதைகளும் இணைந்து அந்தப் படத்தில் பணியாற்றினார்கள் என்பது ஒரு தனிச்சிறப்பாக அமைந்தது.

பாடல்களுக்கான ட்யூனை எம்.எஸ்.வி. அவர்கள் போட்டார். ஆர்க்கெஸ்ட்ராவை இளையராஜா நடத்தினார். பாடல்கள் மிக இனிமையாக அமைந்தன. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் மதித்துப் பணியாற்றிய விதமும் இனிமையாக இருந்தது.

படம் வெளியானதும் முதலில் சுமாராகத்தான போயிற்று. நாட்கள் ஆக ஆகத்தான் பிக்அப் ஆயிற்று.

நடுவில் ஒரு தமாஷும் நடந்தது.

மதுரையில் எங்கள் விநியோகஸ்தர் நாகராஜராஜா என்பவர் அங்கே சினிப்ரியா தியேட்டரில் அந்தப் படத்தை, இடைவேளைக்கு பிந்தைய பகுதியை முன்னதாகவும், முந்தைய பகுதியைப் பின்னாலும் போட்டால் நன்றாக இருக்கும் போலிருக்கிறதே என்று கருதி, அப்படியே மாற்றிப் போட ஏற்பாடு செய்தார். ஆனால் இப்படி மாற்றிப் போட்டது ரசிகர்கள் யாருக்கும் தெரியாது. ஒரிஜினல் படத்தைவிட அதிகமாக ரசிக்கப்பட்டதாகத் தெரிந்தது. எங்களுக்கே இது ஆச்சரியமாக இருந்தது.

(தொடரும்)



## எனக்குப் பிடிச்ச வசனம்...

'அவனை நிறுத்தச் சொல்லு... நான் நிறுத்தறேன்'னு நாயகன்ல கமல் சார் உணர்ச்சி பொங்க தன் பொண்ணுகிட்ட வாதாடுவாரே... அந்தக் காட்சியையும் அந்த வசனத்தையும் இன்னிக்குக் கேட்டாலும் எனக்கு சிலிர்த்திடும்.

- நித்யஸ்ரீ

பேச்சுலர் சமையல்

# இத்தாலி ஐட்டம்



"சமையல்ங்கறது எனக்குக் கைவந்த கலையில்ல... கை'வெந்த' கலை!" என்று அதிரடியாய்த்தான் ஆரம்பிக்கிறார் பி.ஜே.பியின் அகில இந்தியச் செயலாளர் இல. கணேசன்.

"இந்த டிரையல் அண்டு எர்ரர்னு சொல்லுவாங்களே... அது மாதிரிதான் எனக்கு சமையல்ங்கறது. ஒவ்வொண்ணுத்தையும் நிறைய தடவை முயற்சி பண்ணி, தப்புப் பண்ணி, அதைத் திருத்தித்தான் சமையல் செய்யவே பழகினேன். இப்போ எல்லா வகையான பதார்த்தத்தையும் செய்யத் தெரியலைன்னாலும், செய்யத் தெரிஞ்சதை நான் மட்டுமாவது சாப்பிடற அளவுக்கு சுமாரா செய்துடுவேன்" என்று சிரிக்கிறார்.

"ஒருதடவை என் அண்ணன் பொண்ணு நைட்டு கண் விழிச்சி, எக்ஸாமுக்குப் படிச்சிட்டு இருந்தா. எனக்கு அவ மேல ரொம்பப் பிரியம். 'ஏம்மா... உனக்கு ஏதாவது செய்து தரட்டுமா சாப்பிடறதுக்கு'ன்னு கேட்டா, அவ 'முடிஞ்சா டீ போட்டுக் கொடுங்க சித்தப்பா...'ன்னா. அந்த 'முடிஞ்சா' அப்படிங்கற வார்த்தை என்னை டென்ஷனாக்கிடிச்சி... 'டீ போடறது என்ன பெரிய பிரமாதம்?'னு சொல்லிட்டு, பாலைக் காய்ச்சிட்டேன்... காய்ச்சின பிறகு பால் மேல படர்ந்திருக்குமே, அந்தப் பாலேடு அவளுக்குப் பிடிக்காது. அதனால இடுக்கியால பாத்திரத்தைத் தூக்கி, வாயால ஊதி பாலேட்டை ஒதுக்க முயற்சி பண்ணினேன். திடீர்னு இடுக்கி கை நழுவி, பால் அப்படியே என் மேலயே கொட்டிடுச்சி... தோலே வெந்து போச்சு... அந்தக் காயம் இன்னும் வடுவாவே இருக்கு"- தழும்பைக் காட்டியபடி பேசும் கணேசனின் குரலில் இலேசான வருத்தம்.

"ஆனா பாருங்க... இப்போ மைக்ரோவேவ் ஓவன்லாம் வந்துட்டதால, டீ போடறதெல்லாம்கூட ஒரு பெரிய விஷயமே இல்ல... வேணும்னா நானே உங்களுக்கு டீ போட்டுத் தர்றேன்..." என்று சொல்லிவிட்டு, அடுக்களைக்குள் நம்மையும் அழைத்துச் சென்றுவிட்டார்.

"முதல்ல தேவையான பாலை பாத்திரத்துல கொட்டி, ஓவனுக்குள்ள வச்சி ஸ்விட்ச் ஆன் பண்ணணும்... மூணு நிமிஷம் ஆயிடுத்துன்னா, பால் நன்னா காய்ஞ்சிருக்கும்... இது ஸ்டெப் ஒன்... அடுத்து காய்ச்சின பாலை கப்ல ஊத்தி. இந்த டிப் (Dip) டீ பாக்கெட்டை பாலுக்குள் விட்டுவிட்டு எடுக்கணும். இப்போ டீ பால்ல இறங்கிடும்... இது ஸ்டெப் டூ... இப்போ கப்ல கொஞ்சம் சர்க்கரை போட்டு ஸ்பூனால நன்னா கலக்கினா, டீசென்டா டீ ரெடி..." *(அடடா! எவ்ளோ கஷ்டம்!)* என்றவர், அந்த டீயை நமக்கும் கொடுத்து பயமுறுத்தினார். நாம் சாப்பிட்டு "காபி சூப்பர் சார்" என்று சொன்னதுதான்

**நாலு தேவைப்பட்டா எட்டு தோசை சுடுவேன். கருகுனது போக நாலுதான் மிஞ்சும்.**

## இல.கணேசன்

தாமதம், வெறுப்பின் உச்சத்துக்குச் சென்றுவிட்டார். சற்று நேரத்துக்குப் பின் கூலானவர்,

"எனக்கு கோதுமை தோசையை, அதுவும் என் கையால வார்த்துச் சாப்பிடறதுன்னா ஏக குஷி. இப்போ எனக்கு நாலு தோசை தேவைப்பட்டுச்சுன்னா, குறைஞ்சது எட்டு தோசையாவது வார்த்துடுவேன்... அப்பத்தான் கருகினது, வேகாதது எல்லாம் போக நாலாவது மிஞ்சும் (இதிலேயும் பாதிக்குப் பாதிதான் தேறுமா!). இவ்ளோ நான் ஆனாலும் என்னால சிறப்பா சமைக்க முடியலியேங்கற வருத்தம் எனக்கு அப்பப்போ வரும்... ஆனா சமையல் செய்ய வரலைன்னாலும்கூட, நல்லா ருசிச்சு சாப்பிடுவேன்" என்கிறார் இந்த தஞ்சாவூர் பேச்சுலர்.

"எங்க ஊர் தலை வாழை இலை சாப்பாடு, கன்னியாகுமரி மாவட்டத்து ஸ்பெஷலான பருப்பு வடை, ரச வடை எல்லாமே எனக்கு ரொம்பப் பிடிக்கும்... ஆனா இந்த காளான், சோயா பீன்ஸ், காலிஃப்ளவர் மாதிரியான எதுவுமே பிடிக்காது. குறிப்பா, இந்த பிட்ஸா கிட்ஸால்லாம் அறவே ஒதுக்கிடுவேன். (இத்தாலி ஐயிட்டம் என்பதாலா?)" என்று சொல்லும் இல. கணேசன், தற்போது மருத்துவர்களின் ஆலோசனைப்படி சாப்பாடு விஷயத்தில் நிறைய கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து வருகிறார்.

- **இரா. முத்துக்குமார்**

படங்கள்: **ஸ்ரீஹரி**

# பிடிக்காதா?



பி.மாரிமுத்து

# ஆறு மனமே

நான் நீண்ட நாட்களாகத் தேடி வந்த அந்தப் பழைய புத்தகம், அரசு பொது நூலகத்தில் அன்றுதான் கையில் கிடைத்தது. தொட்டால் நொறுங்கிப் பொடிப் பொடியாகிவிடும் நிலையில், பேப்பர் இத்துப் போய் இருந்தது. அட்டை பழுப்பேறிப்போய் கிடந்தது. நான் நூலகத்தில் உறுப்பினராக ஏற்கெனவே சேர்ந்திருந்ததால், கார்டைக் கொடுத்து அந்தப் புத்தகத்தை எடுத்துச் சென்றேன்.

வீட்டிற்குப் போய் மகிழ்ச்சியுடன், அந்தப் புத்தகத்தை புரட்டினேன். அது சரியாக ஐம்பது வருடங்களுக்கு முன்பு, ஒரு பிரபலமாகாத கவிஞரால் எழுதப்பட்ட கவிதைப் புத்தகம். இன்றளவும்கூட, அந்தக் கவிஞரும் புத்தகமும் பிரபலமாகவில்லை. அந்தக் கவிஞர் கஷ்டப்பட்டு, நோய்ப்பட்டு எங்காவது ஒரு பொது மருத்துவமனையில் அனாதையாய் இறந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

ஆனால் அந்தப் புத்தகத்தைப் படித்த ஒரு சிலரால், அதன் கருத்துகளை, அதன் வீச்சுகளை நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. அப்படிப் படித்து அதன் வீச்சில் லயித்தவர்களில் என் தந்தையும் ஒருவர். அவர் அப்புத்தகத்தின் கவிதைகளில் பாதிக்குமேல் என்னிடம் மனப்பாடமாகச் சொல்லியிருக்கிறார்.

அந்தக் கவிதைகளை கேட்ட நாள் முதல் அந்தப் புத்தகத்தைத் தேடி நாயாய் அலைந்திருக்கிறேன். பொது நூலகம், பழைய புத்தகக் கடை, வாடகை நூலகம் என அலையாத இடம் கிடையாது. தற்செயலாக எதையோ பொது நூலகத்தில் தேட, இந்தப் பொக்கிஷம் கையில் கிடைத்தது. அந்த கவிதைப் புத்தகத்தை விடாமல் மறுபடியும், மறுபடியும் படித்தேன். கிட்டத்தட்ட பதினான்கு நாட்களில், பதினைந்து முறைக்கு மேல் படித்து விட்டேன். இருந்தும் படிக்கத் தூண்டுகிறது.

இப்படிப்பட்ட ஒரு புத்தகம் முதற் பதிப்போடு நின்றுவிட்டது ஆச்சர்யம் தான். எனக்கு மட்டும் வசதியிருந்தால் என் சொந்தக் காசில் மறுபதிப்பு போடுவேன். என்ன செய்வது, என்னிடம் அந்தளவிற்குப் பணம் இல்லை.

இன்று புத்தகத்தை திருப்பிச் செலுத்த வேண்டிய நாள். எனக்கு திருப்பிக் கொடுக்க மனம் இல்லை. அப்புத்தகத்தைப் பிரிவது, காதலியைப் பிரிவதைப் போன்ற ஒரு வருத்தத்தை என்னுள் ஏற்படுத்தியது. என்ன செய்யலாம், சரி... நூலகத்திற்குப் போய் மேலும் ஒரு பதினான்கு நாட்கள் நீட்டிப்பு செய்யலாம் என்ற முடிவோடு நூலகத்திற்குக் கிளம்பினேன்.

போகும் வழியில் புத்தகத்தின் விலையைத் திருப்பிப் பார்த்தேன். ஆறு ரூபாய் என்று போட்டிருந்தது. ஐம்பது வருடத்திற்கு முன்பு அது பெரிய பணம். ஆனால் இன்று ஆறு ரூபாய் என்பது ஒரு குளிர்பானத்தின் விலை. பள்ளிச் சிறுவர்களுக்கே அது சாதாரணக் காசு. என் மனசுக்குள் சாத்தான் குடியேறியது.

பொதுவாக அரசு நூலகங்களில் ஒரு முறை உண்டு. புத்தகம் தொலைந்துவிட்டால், அப்புத்தகத்தின் விலையை ஈடாகச் செலுத்தினால் போதும். பல நல்ல புத்தகங்கள் தொலைந்து போனதாகப் பல பேர் பணம் கட்டி நான் பார்த்திருக்கிறேன். நாமும் அப்படியே செய்வோம் என்ற கெட்ட எண்ணம், என் மனதில் புகுந்துவிட்டது.

உடனடியாக சட்டையைத் தூக்கி, இடுப்பிற்கும் வேஷ்டிக்கும் இடையில் புத்தகத்தைச் சொருகி, சட்டையைக் கீழிறக்கி



# ஆசை!

விட்டு மறைத்துக்கொண்டேன். நூலக வாசலை அடைந்தேன். மின்னல் வெட்டு போல் திடீரென்று ஒரு ஞானோதயம்.

'என்னைப் போல் எத்தனை பேர், இந்தப் புத்தகத்திற்காக அலைந்திருப்பார்கள்... நான் ஒருத்தன் பதுக்கிக் கொள்வதால் அவர்களுக்கு இந்தப் புத்தகத்தின் சாரம் எட்டாமல் போகும். மறைந்து போன அந்தக் கவிஞனுக்கு நாம் செய்யும் சேவை, இந்தப் புத்தகத்தை பல பேர் படிக்கச் செய்வதுதான்.' ஒரு முடிவுடன் புத்தகத்தை வெளியில் எடுத்துக் கொண்டேன். நூலகரிடம் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தேன். அவர் வாங்கி நம்பரைப் பார்த்து என் அட்டையை எடுத்து நீட்டினார். பெற்றுக் கொண்டேன்.

அப்புத்தகத்தை நூலகர் அலட்சியமாக டேபிளின் மேல் வீசினார். எனக்கு வலித்தது. டேபிள் மேல் விழுந்த அப்புத்தகத்தை, ஒரு வழுக்கைத் தலை ஆசாமி பாய்ந்து எடுத்து, பரபரப்பாகப் புரட்டினார்.

அவர் முகத்தின் மகிழ்ச்சியின் ரேகைகள். என்னைப்போல அவரும் இந்தப் புத்தகத்தை பல நாள் தேடியிருப்பார் போலும். புன்னகையுடனும், மனத் திருப்தியுடனும் அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

ஒரு மாதம் சென்றிருக்கும். தற்செயலாக நூலகத்திற்குச் சென்று புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன். வழுக்கைத்தலை ஆசாமி நூலகரிடம் ஏதோ பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அருகில் சென்றேன்.

அந்த ஆசாமி நூலகரிடம், ஆறு ரூபாய் பணம் கொடுத்து, புத்தகம் தொலைந்ததற்கு பணம் கட்டியதற்கான ரசீது வாங்கிக் கொண்டிருந்தார். ●

## விமர்சிக்கிறார் ப்ரூப்ரீடர்...



தன்னலம் கருதாது பிறரைப் பற்றியும் யோசித்து தன் முடிவை மாற்றிக் கொள்ளும் கதை நாயகன், பாராட்டப்பட வேண்டியவன். ஆனால் முடிவுதான் எதிர்பாராதது - அவன் உட்பட!

- விஷ்வக்




## இதெல்லாம் நிஜம்தானா?

★ நீரிழிவு நோய் உள்ளவர்கள் ரசகுல்லா, ஜாமூன் என ஸ்வீட்ஸ் சாப்பிடலாம்!

★ மார்பகப் புற்றுநோய் ஹார்மோன் சம்பந்தப்பட்டது.

★ கருத்தரிக்க ஒரே ஒரு விந்தணு மட்டுமே போதுமா?

★ தீராத காய்ச்சலுக்கு விஷ்ணு சஹஸ்ரநாமம் மருந்தாமே!

கல்கி மருத்துவமலர் படிச்சா தெரிஞ்சுடப் போகுது!

# கல்கி மருத்துவ மலர் 2005

ஆகஸ்ட் முதல் வாரத்தில் அதிரடி ரிலீஸ்!

விலை ரூ.25/- மட்டுமே

# நடக்குமென்பார்: நடக்கும்!

**20.7.2005 முதல் 26.7.2005 வரை**

தஞ்சை பரத்வாஜ்



### மேஷம்:

புத்துணர்ச்சி தரும் வாரம். நினைத்த காரியம் கைகூடும். தனம், வாக்கு, பொருள் சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு இதுநாள்வரை இருந்து வந்த மனக்குழப்பம் தீரும். இடமாற்றம் வரும். வியாபாரிகளுக்கு நற்பலன் கிடைக்கும். மாணவ - மாணவிகள் நன்மதிப்பைப் பெறுவார்கள். வீடு வாசல் வாங்க நல்ல காலம். புதிய முயற்சிகள் கைகூடும். குரு/சனி வழிபாடு அவசியம்.

### ரிஷபம்:

அற்புதமான வாரம். எண்ணங்கள் யாவும் வெற்றிகளைத் தரும். திருமணக் காரியம் கைகூடும். வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் ஏற்படும். பொருளாதாரம் பலப்படும். வியாபாரிகள், கலைஞர்கள் ஏற்றம் காண்பார்கள். மாணவ - மாணவிகள் நினைத்த காரியம் நடக்கும்.

### மிதுனம்:

மகிழ்ச்சியான வாரம். நல்ல காரியம் நடக்கும். வீடு, வாகனம் வாங்க நல்ல நேரம். உத்தியோகத்தில் இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்கும். மாணவ - மாணவிகளுக்கு நல்லது நடக்கும். திருமணத் தடை விலகும். குரு/ராகு/ கேது வழிபாடு சிறந்தது.

### கடகம்:

நிறைவான வாரம். தெய்வ பலம் இருக்கிறது. எதிலும் வெற்றியை அளிக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும். உத்தியோகத்தில் மேன்மை ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். திருமணம் கைகூடும். மாணவ - மாணவியர்கள் நற்பலனை அடைவார்கள். வியாபாரிகளுக்கு வருமானப் பெருக்கம் ஏற்படும். குரு வழிபாடு செய்யவும்.

### சிம்மம்:

திருப்திகரமான வாரம். திடீர் தன லாபம் கிடைக்கும். வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். கைப்பொருள் மீது கவனம் அவசியம். கணவன், மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. ஆரோக்கியத்தில் கவனம் அவசியம். ராகு/கேது வழிபாடு

# முத்தான பதில்கள்

**என் மகனுக்கு திருமணம் எப்போது நடக்கும்? தொழில் உள்ளூரிலா, வெளிநாட்டிலா? பரிகாரம் ஏதும் தேவையா?**

**- எம்.பத்மா, திருச்சி - 1.**

உங்கள் மகனுக்கு 33வயதில், பிறந்த ஊருக்கு தெற்கு / மேற்கு திசையிலிருந்து, படித்த, வேலை செய்யும் பெண் அமையும். உறவு கிடையாது. வெளிநாட்டில் நிரந்தரமாக வேலைவாய்ப்பு கிட்டும் யோகம் உள்ளது. ஸர்ப்ப தோஷம் உள்ள ஜாதகமாகச் சேர்க்கவும்.

**என் மகனது படிப்பு பாதியில் தடங்கல் ஏற்பட்டு நின்றுவிட்டது. மீண்டும் படித்து தேர்ச்சி பெற முடியுமா? திருமணம் தடைபடுகிறது. எப்போது திருமணம் கைகூடும்?**

**- எஸ். ராஜி, பெங்களூர்.**

செப்டெம்பர் 2005க்குப் பின் ஜாதகப்படி சற்று நல்ல காலம் தொடங்குகிறது. டிச. 2006 வரை எல்லாம் சற்று தாமதித்துத்தான் நடக்கும். அதிக கவனமுடன் படித்தால் தேர்ச்சி பெறலாம். இன்னும் ஓராண்டு கழித்து திருமணம் கைகூடும்.

**என் மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்? சொந்தமாக வீடு கட்டும் யோகம் உண்டா?**

**- வைதேகி ராஜகோபாலன், சென்னை - 88.**

உங்கள் மகனுக்கு ஆகஸ்ட் 2005க்கு

அவசியம்.

## கன்னி:

**பி**ரமாதமான வாரம். தொழில் செய்பவர்களுக்கு நல்ல காலம். புதிய வீடு, வாகனம் வாங்கலாம். திருமணம் நடக்கும். தனப் பெருக்கம் ஏற்படும். புதிய தொழில் செய்ய ஏற்ற காலம். கணவன்-மனைவி உறவில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. மாணவ-மாணவிகளுக்கு ஏற்றம் பெருகும். கடன் தொல்லை குறையும். குழந்தைகள் வழியில் சுப காரியம் கைகூடும். குரு/ராகு/கேது வழிபாடு அவசியம்.

## துலாம்:

**ம**கிழ்ச்சியுடன் சந்தோஷமும் இருக்கும் வாரம். வேலையில் நிதானம் அவசியம். புதிய முயற்சிகளை ஒத்திப் போடுவது நல்லது. பண வரவு இருக்கும். குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்படும். தொழில் செய்பவர்கள் எச்சரிக்கையுடன் செயல்படவும். குரு/சனி வழிபாடு அவசியம்.

## விருச்சிகம்:

**பொ**ன்னான வாரம். தொட்டது எல்லாம் வெற்றியைத் தரும். சுப காரியம் நடக்கும். மனக் குழப்பம் இராது. குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். வீடு/வாகனம் வாங்க ஏற்ற காலம். புதிய தொழில் துவங்கலாம். உத்தியோகஸ்தர்களுக்கு பணி உயர்வு, இடமாற்றம் வரும்.

## தனுசு:

**ந**ன்மையும் தீமையும் கலந்த வாரம். நண்பர், உறவினர் மூலம் அனுகூலம் கிட்டும். குழந்தைகள் வழியில் நல்ல காரியம் நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். மனக் குழப்








மேல் திருமணம் கைகூடும். வடக்கு திசையிலிருந்து பெண் வந்து அமையும். 2006ல் சொந்தவீடு கட்டும் யோகம் கூடும்.

***என் மகனின் தொழில் முன்னேற்ற மடையுமா? திருமணம் எப்போது? ஆரோக்கியம் பாதிக்குமா?***

*- ஏ.ஜி. ராமனாதன்,*
*சென்னை - 83.*

உங்கள் மகனது தொழில் முன்னேறும். ஆரோக்கியம் பாதிக்காது. 35வது வயதில் திருமணம் கைகூடும். படித்து நல்ல வேலையிலிருக்கும் பெண் அமையும்.

***என் மகன் தற்போது செய்யும் வேலையில் திருப்தியும் சம்பளமும் குறைவு. வேறு வேலைக்கு முயற்சி செய்யலாமா? திருமணம் எப்போது?***

*- என். ராசரத்தினம், நெல்லிக்குப்பம்.*

உங்கள் மகனுக்கு 28 வயது வரை உத்தியோக யோகம் இருக்கிறது. விரும்பிய இடத்தில் வேலை செய்யும் ஜாதகம். முயற்சி செய்யலாம். 24வது வயதில் திருமணம் முடியும். வடக்கு திசையிலிருந்து, இரு உடன்பிறந்தவர் உள்ள இடத்தில் வரன் அமையும். நீங்கள் அனுப்பியிருக்கும் ஜாதகம் பொருந்து கிறது.

***என் மகனால் இதுவரை எந்த வேலையிலும் நீடிக்க முடியவில்லை. அவனுக்கு நிரந்தர வேலை கிடைக்குமா? சொந்தத் தொழில் செய்யலாமா? திருமணம் எப்போது?***

*- கே. சுப்பிரமணியன்,*
*சென்னை - 2.*

உங்கள் மகனுக்கு சந்திர தசை நடப்பதாலும், கால சக்கர தசை கோளாறாலும் நிரந்தர வேலை கிடைப்பதும், தொழில் செய்வதும் சற்று சிரமம். இன்னும் 3 ஆண்டுகளுக்குப் பிறகு நிரந்தர வேலை கிட்டும். 39வது வயதில் திருமணம் கைகூடும்.

பம் போகும். தொழில் செய்பவர்கள் எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும். சனி/ குரு/ ராகு/ கேது வழிபாடு சிறந்தது.

### மகரம்:


மேன்மையான வாரம். எண்ணிய எண்ணங்கள் யாவும் நடக்கும். சொத்துகள் வாங்கும் வாய்ப்பு வரும். தெய்வ பலம் கூடும். உத்தியோகஸ்தர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். திருமணத் தடங்கல் விலகி திருமணம் நடக்கும். தொழில் செய்பவர்களுக்கு வருவாய் பெருகும். சிலருக்கு குழந்தைப் பேறு ஏற்படும். நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும்.

### கும்பம் :

செல்வாக்கு தரும் வாரம். புதிய முயற்சிகளால் அனுகூலம் ஏற்படும். வாக்குவாதம் வேண்டாம். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். சிலருக்கு மகப்பேறு ஏற்படும். வியாபாரிகள் ஏற்றம் பெறுவர். கலைஞர்களுக்கு நற்பலனை அளிக்கும். எதிர்ப்புகள் விலகும். ராகு/கேது/குரு வழிபாடு சிறந்தது.

### மீனம்:

சோதனைகள் முடிந்து சாதனைகள் செய்யும் வாரம். நினைத்தது நடக்கும். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சி நடக்கும். நண்பர் உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். வியாபாரிகளுக்கு தொழிலில் இருந்த மந்த நிலை மாறி நற்பலனை அளிக்கும். புதிய வீடு/ வாகனம் வாங்கலாம். மாணவ, மாணவியர் மேன்மை கிட்டும். ராகு/ கேது வழிபாடு நன்மை அளிக்கும். ○



பல பேருக்கு என்னை 'மெட்டி ஒலி' மாணிக்க மாத்தான் தெரியும். அன்புன்னா கிலோ என்ன விலைன்னு கேக்கற ஆளு மாணிக்கம். அது வெறும் நடிப்பு. ஆனா எனக்குள்ள ஒரு காதலன் ஒளிஞ்சிருக்கறது எத்தனை பேருக்குத் தெரியும்? ரொம்பச் சின்ன வயசுலயே எனக்கு காதல் கத்திரிக்காய் தெரிஞ்சிடுச்சிங்க. சொன்னா அடிக்க வருவீங்க, மூணாவது படிக்கும்போதே லவ் பத்தி பேசியிருக்கேன். எல்லாம் நம்ப சினிமாக்களோட உபயம்தான். பத்தாவது படிக்கும்போது, பக்கத்து வீட்டுப் பொண்ணு மேல காதல். அதைக் காதல்னுகூட சொல்லக் கூடாது. ஜஸ்ட் இன்ஃபாச்சுவேஷன். பார்த்தேன். பார்த்தா. பேசக்கூட இல்ல. ஒரு பொன் மாலைப் பொழுதுல அந்த இனக்கவர்ச்சி இல்லாமயே போயிடுச்சி. அதுக்கப்புறம் ஒழுங்கு புள்ளையா மாறி காலேஜுக்குப் போனேன். அங்க போய் யாருகிட்ட யாவது லவ்ல மாட்டிப்பேன்னு நெனச்சேன். மாட்டினா அந்தப் பொண்ணையே கல்யாணம் பண்ணணும்னு முடிவெல்லாம்கூட எடுத்திருந்தேன். லவ் மேரேஜ் பத்தி எங்கம்மா நல்ல அபிப்ராயம் வச்சிருந்தாங்க. என் அண்ணன் ஒரு சைக்கிளிஸ்ட். உலகம் பூரா நண்பர்களோட கத்திக்கிட்டேயிருப்பான். லண்டனுக்குப் போனப்ப சடார்னு லவ்ல விழுந்துட்டான். பயலுக்கு அம்மாகிட்ட சொல்ல பயம். அந்த இங்கிலீஷ்காரப் பொண்ணையே விட்டு வீட்டுக்கு லெட்டர் எழுதச் சொன்னான்.

அவங்களும் எழுதினாங்க...! அம்மாவுக்கு அண்ணன் மேல ரொம்ப நம்பிக்கை. அவன் செலக்ஷன் தப்பாயிருக்காதுன்னு நெனைச்சாங்க. கூப்பிட்டுப் பேசி கல்யாணத்த முடிச்சாங்க. இன்னைக்கு அவன் சந்தோஷமா இருக்கான். காதல வீட்ல அங்கிகரிப்பாங்கன்றதுனாலயோ என்னவோ, கல்லூரி நாட்கள்ல எனக்கு காதலே வரல. ஒருவேளை வீட்ல ரொம்பக் கெடுபிடியா இருந்திருந்தா சட்டுன்னு யார்கிட்டயாவது மாட்டியிருப்பேனா தெரியல. ஆனா யார் லவ் பண்ணாலும் நான் துணையிருக்க ஆரம்பிச்சேன். என் டியர் ஃப்ரெண்ட் ஒருத்தன் ஒரு பொண்ணை சின்சியரா லவ் பண்ணான். ரெண்டு பேரோட அன்பைப் பார்த்துட்டு, நண்பர்கள் எல்லாரும் சேர்ந்து அவங்களுக்கு பல விதத்துல ஹெல்ப் பண்ண ஆரம்பிச்சோம். காதல்னு இருந்தா க்ளைமாக்ஸ்னு ஒண்ணு இருக்கும் இல்லையா... பொண்ணோட வீட்டுக்கு மேட்டர் தெரிஞ்சு, பெருசா வெடிச்சுடுச்சு. மும்பைல இருக்குற சொந்தக்



## காதல் சிறகுகள்

**சேத்தன்**

காரங்க வீட்டுக்கு பொண்ணை எஸ்கேப் பண்ணிட்டாங்க. இங்க எங்க நண்பன் தவிச்சுப் போயிட்டான். காதலியை ஒருநாள் பார்க்கலைன்னாலும் அது எவ்வளவு பெரிய துன்பத்தைக் கொடுக்கும்னு எனக்கு அவன்தான் உணர்த்தினான். அவன் பட்ட வேதனைகளை எங்களால பார்க்க முடியல. எப்படியாவது அவங்களைச் சேர்த்து வைக்கணும்னு முடிவெடுத்தோம்.

ஒவ்வொருத்தராலயும் எந்தளவுக்குப் பணம் புரட்ட முடியுமோ, அந்தளவுக்குப் புரட்டி, மும்பைக்குப் போய் அந்தப் பொண்ணை ரகசியமா கூட்டிட்டு வந்து, இவனை இங்க தயாரா இருக்கச் சொல்லி, வந்த மறுநாளே ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வச்சுட்டோம். கண்ணீரோட அவங்க எங்க கால்ல விழ வந்தப்போ, நெகிழ்ச்சியில நாங்க திணறிப் போயிட்டோம். அந்தத் திருப்தியோடயே என் கல்லூரி வாழ்க்கை முடிஞ்சது.



# நாங்க ரெடி... நீங்க ரெடியா?

**15**

அப்புறம் அங்க இங்கன்னு வாழ்க்கை திசை மாறி, கடைசியா டி.வி சீரியல்ல வந்து நின்னுச்சு. அப்போ 'மர்மதேச'த்துல நடிச்சிட்டிருந்த நேரம். வெளியூர் ஷூட்டிங். டாக்டர் கேரக்டர் பண்ண ஒரு பொண்ணைக் கூட்டிட்டு வந்திருந்தாங்க. தொடர்ந்து டைரக்டர் எப்படியெல்லாமோ முயற்சி பண்ணியும் அவர் எதிர்பார்த்த மாதிரி அந்தப் பொண்ணால நடிக்க முடியல. டைரக்டர் கடுப்பாயி, சென்னையில இருக்குற மின் பிம்பங்களுக்கு போனைப் போட்டார். 'உடனே ஒரு ஆர்ட்டிஸ்டை அனுப்பி வைங்க. இல்லைன்னா ஷூட்டிங்

தொடர்ந்து நடக்காது. பேக்கப்தான்' னுட்டார். எனக்கு செம டென்ஷனா யிடுச்சு. ரொம்ப நாள் கழிச்சு 'மர்ம தேசம்' மூலம் ஒரு பிரேக் கிடைக் கும்னு ஆசையா இருந்தேன். ஆனா 'அந்தப் பொண்ணால இப்படியா யிடுச்சே'ன்னு வேதனைப்பட்டுக் கிட்டே, அடுத்து வரப்போற பொண்ணுக்காகக் காத்திருந் தேன். அப்ப எனக்குத் தெரியல, வரப்போற பொண்ணுதான் என் வாழ்க்கைல வெளக்கேத்தப் போற தேவதையா வரப்போறான்னு.

ஆமா... நீங்க நினைக்கிற மாதிரி தேவ தர்ஷிணிதான் அந்த டாக்டர் கேரக்டர் செய்ய வந்தாங்க. அவங்களைப் பார்த் ததுமே என்னமோ தெரியல, எனக்குள்ள இருக்குற எல்லா செல்களும் பட்டாம் பூச்சி மாதிரி பட படன்னு அடிச்சுக் கிச்சு. 'பொண்ணு ரொம்ப அழகா இருக்கே'ன்னு தோணுச்சே ஒழிய, லவ் வரல. மெல்ல மெல்ல யூனிட்ல இருக்குற எல்லார்கிட்டயும் தேவா பழக ஆரம்பிச் சாங்க. எங்கிட்டயும் அப்பப்போ பேசுவாங்க. அந்த மாதிரி நேரங்கள்ல நான் அவங்ககிட்ட கண்டுபிடிச்ச ஒரு விஷயம், அவங்களுக்கு ஸ்க்ரீனுக்குப் பின் னாடி நடிக்கத் தெரியாதுன்றது. இந்த ஒரு விஷயம் போதுமானதா இருந்தது, நான் தேவாகிட்ட நெருங்கறதுக்கு. ஏன்னா எனக்கும் நிஜத்துல நடிக்கப் பிடிக்காது. இயல்பா இருக்கறதுதான் வாழ்க்கைன்னு நம்பறவன் நான்.

இந்த ஒரு விஷயத்துல எங்க ரெண்டு பேரோட அலைவரிசையும் ஒத் துப் போனதால, மனசை ரொம்ப சுல பமா இடம் மாத்திக்கிட்டோம். இது எங்க ளையே அறியாம நடந்துடுச்சி. எங்க காத லுக்கு 'மர்மதேசம்' நல்ல ப்ளாட்ஃபார்மா அமைஞ்சுடுச்சி. கொஞ்சம் கொஞ்சமா யூனிட்ல இருக்குற எல்லாருக்கும், நாங்க ஒருத்தரையொருத்தர் விரும்பறது தெரிய ஆரம்பிச்சது. யார் மொதல்ல அதை வெளிப்படுத்தறதுன்னு டெய்லி கண் ணாம் பூச்சி ஆட்டம் நடக்கும். பொறுத் துப் பொறுத்துப் பார்த்த நான், ஒருநாள் தேவாகிட்ட போய் பட்டுன்னு விஷயத் தைப் போட்டு உடைச்சிட்டேன்.

பார்ட்டி மொதல்ல ஷாக் ஆன் மாதிரி ஃபீலிங் காட்டினாங்க. சட்டுனு சந்தோஷமாகி, ஆனா அதை ஜாக் கிரதையா வெளியில காட்டிக்காம, 'எனக்கு ஒரு மாசம் டைம் வேணும்'னு வாய்தா வாங்கிட்டாங்க. எனக்கு 'என்னடா இது'ன்னு ஆகிப் போச்சு. ஒவ்வொரு நாளும் நரக வேதனையா இருந்துச்சு. எப்படா கெடு முடியும்னு

**"காதலை உலகத்தை விட்டு அனுப்பிட்டா புவி சுடுகாடா மாறிடும்!"**

தவிச்சேன். ஒருவழியா என் அவஸ்தையைக் கண் கொண்டு பார்க்க முடியாம, தேவாவே வந்து சம்மதம் சொல்லிட்டாங்க. அப் புறம் வீட்ல சொன்னோம். எங்க மன சைப் புரிஞ்சுக்கிட்டு கல்யாணமும் பண்ணி வச்சுட்டாங்க. இப்ப ஒரு குழந்தையும் பொறந்தாச்சு. பேரு நியதி. ரொம்ப சந்தோஷமா இருக்கேன். காத லோட அடுத்த பரிமாணத்தை இப்ப நான் உணர்ந்துட்டிருக்கேன். முன்னெல் லாம் தேவாவுக்காக மட்டுமே இருந்த என் காதல், இப்ப என் பொண்ணுக்காகவும் மாறியிருக்கு. கல்யாணத்துக்கப்புறம் காதல் குறைஞ்சுடும்னு பலபேர் சொல் லக் கேட்டிருக்கேன். ஆனா அதெல்லாம் காதலை தப்பா புரிஞ்சுக்கிட்டவங்க, அல்லது காதலி/ காதலனை சரியான நபரா தேர்ந்தெடுக்கத் தவறினவங்க சொல்ற ஸ்டேட்மெண்ட்டாத்தான் எனக்குப் படுது. கணவன் மேல மட்டு மில்லாம, அவனைச் சார்ந்த எல்லார் மேலயும் அன்பு காட்டி நடக்குறது, பெரியவங்கள மதிக்கறதுன்னு, மனை விக்கு எத்தனையோ பொறுப்புகள் இருக்கு. அதேபோலதான் கணவனுக் கும்... தன்னோட உறவுகள் எந்தளவு முக் கியமோ, அவ்வளவு முக்கியம் மனைவி யோட உறவுகளும். இந்த மாதிரி விஷயங்

கள்ல தேவாவும் நானும் ஒருத்தருக்கொருத்தர் சளைச்சவங்களே இல்ல.


எனக்கு ஷூட்டிங் இருக்குற அன்னைக்கு எங்கம்மாவுக்கு பிறந்த நாள் வந்துடுச்சு. 'அவர் இல்லன்னா என்ன உங்க பொண்ணு நானிருக்கேன்'னு அம்மா பிறந்த நாளைக் கொண்டாடினா. எந்தக் காரணத்துக்காகவும் எங்க அம்மாவை விட்டுக் கொடுக்க மாட்டா. மத்தவங்க முன்னாடின்னு இல்ல, என் முன்னாடிகூட அப்படித்தான். இது மாதிரியான பிரியங்கள்தான், காதலை இன்னும் பசுமையாவே வச்சிருக்குன்னு நான் நம்பறேன். இங்க இன்னொரு சம்பவத்தையும் நான் சொல்லணும். கல்லூரி நாட்கள்ல நான் சேர்த்து வச்ச அந்த காதல் ஜோடி, கொஞ்ச வருஷ தாம்பத்யத்துக்குப் பிறகு பிரிஞ்சுட்டாங்கன்னு பின்னாடி கேள்விப்பட்டேன். ரொம்ப வேதனையா இருந்துச்சு. என் ஃப்ரெண்ட் அந்தப் பொண்ணை கொடுமைப்படுத்தி, சித்ரவதையெல்லாம் பண்ணியிருக்கான்னு பல பேர் சொன்னப்போ 'என்னடா காதல்'னு ஒரு நிமிஷம் கோபம் கூட வந்துச்சு. ஆனா தேவா மாதிரியான ஒரு மனைவி கிடைக்கவும் அதே காதல்தானே உதவினதுன்னு நெனைக்கும்போது, காதல் மேல எந்தத் தப்புமில்லன்னு தோணுது. காதலர்கள்தான் காதலை சரியா புரிஞ்சுக்காம, படுகுழியாவும் பாதாளமாவும் அதை உருவகப்படுத்திடுறாங்க. நிஜத்துல அது நந்தவனம். தன்கிட்ட வர்ற எல்லா வண்ணத்துப்பூச்சிகளையும் கையைக் கட்டிட்டு ரசிச்சு, தேன் குடிக்க விடற மென்மையை காதலர்கள் உணரணும். தப்பையெல்லாம் நாம செஞ்சிட்டு, அப்பாவியான காதல் மேல தூக்கிப் போடறது எந்த விதத்துல நியாயம்னு தெரியல. காதலர்கள்தான் காதலுக்கு கௌரவம் சேர்க்கணும். அவங்களே அதுக்கு வில்லனா மாறினா, பெத்தவங்க ஏன் மாற மாட்டாங்க? உயிரில்லாத ஒரு ஜடப்பொருளா அதை தயவுசெஞ்சு யாரும் நினைச்சுடாதீங்க. ரெண்டு உயிருங்களோட ஒட்டுமொத்த உருவம் அது. காதலர்கள் தங்களையே கொல்ற போதும், பிரியற போதும் உயிர் கொஞ்சம் கொஞ்சமா உருக்குலைஞ்சுக்கிட்டே வருது. ஒட்டுமொத்தமா அதை இந்த உலகத்தை விட்டு அனுப்பிட்டா, இந்தப் புவி சுடுகாடா மாறிடும். அந்த நிலைமைக்கு காதலை தள்ளி விட்டுடக்கூடாது. உங்களைப் போல, என்னைப் போல காதலர்கள் நல்லா வாழ்ந்து காட்டறதன் மூலமா, யுகமே அழிஞ்சாலும் காதல் வாழும்னு நிரூபிச்சுக் காட்ட முடியும். நானும் தேவாவும் அதுக்கு ரெடி. நீங்க ரெடியா?



சந்திப்பு: மு.மாறன்
படங்கள்: ஸ்ரீஹரி

பர்மா பஜாரைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஒரு காலத்தில் தமிழகத்துக்கு வந்த அகதிகளுக்கு சோறு போட உதவிய இந்த இடம், இன்றைக்கு பொய் பித்தலாட்டங்களையே வாழ்க்கையாக்கிவிட்ட மனிதர்களிடம் சிக்கி சின்னாபின்னமாகிக் கிடக்கிறது. பெரும்பாலான குற்றம் நடக்கும் க்ரைம் பஜாராகவே மாறிவிட்ட இந்த இடத்தை நோட்டம் விட்டபோது, நம்ப முடியாத தகவல்கள் பல, அதிர்ச்சியின் விளிம்புக்கே நம்மை அழைத்துச் சென்றுவிட்டன.

நான்கு விஷயங்கள் பர்மா பஜாரில் கொடிகட்டிப் பறக்கின்றன. திருட்டு வி.சி.டிக்கள், ஆபாச வி.சி.டிக்கள், அயல்நாட்டு மது பானங்கள், போலி எலக்ட்ரானிக் பொருள்கள்



# க்ரைம் பர்மா பஜார்!

ஆகியவைதான் அவை. மிக மிக ரகசியமாக பிரத்யேக நபர்களால் மேற்கூறிய நான்கு விஷயங்களும் பர்மா பஜாரில் அனுதினமும் அரங்கேறி வருகின்றன. திருட்டு வி.சி.டி விற்கும் ஒரு நபரை நமக்கு அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு நண்பர் விலகிவிட, நாம் அந்த நபரிடம் பேச்சுக் கொடுத்தோம்... "வம்புல மாட்டிவுட்டுடாதீங்க சார்" என்று பலமுறை கோரிக்கை வைத்து விட்டுத்தான் பேசவே ஆரம்பித்தார்...


"இந்த பஜார்ல நூறு பேர் இருந்தாங்கன்னா, அதுல நாப்பது பேரு தொழில்ல இருக்கறவங்களாத்தான் இருப்பாங்க. முதலாளிங்களைத் தவிர மத்த ஆளுங்க, கடைக்குள்ள நிக்காம வராண்டாவுலயே சுத்திக்கிட்டு நிப்பாங்க. நானும் அந்த மாதிரி இங்க வந்தவன்தான். பஜாருக்குள்ள பார்ட்டி உள்ள நுழையும்போதே அவங்க முகத்தைப் பார்த்து நாங்க கண்டுபிடிச்சுடுவோம்... இது படியுமா... படியாதான்னு... படியற பார்ட்டின்னா 'சார்... சிடி.... வேணுமா? ஐஸ்வர்யாராய் இருக்கு, சிம்ரன் இருக்கு'ன்னு டெம்ப்ட் பண்ணிடுவோம்... ஒருவேளை படிஞ்சிட்டாங்கன்னா, டக்குன்னு அவங்களை லபக்கி எங்க இடத்துக்குக் கொண்டுபோய் கறக்க வேண்டியதைக் கறந்துடுவோம். ஆனா ஒண்ணுங்க, எங்ககிட்ட வாங்குனா மேட்டரு பக்காவா இருக்கும். மேட்டர் ஒழுங்கா இல்லாட்டி பழைய பார்ட்டி

• சைலேந்திரபாபு



• சந்துரு





திரும்ப வர மாட்டாங்கல்ல" என்ற வரிடம்

"வி.சி.டிக்கு குண்டர் தடுப்புச் சட்டம் போட்டாச்சே... காவல் துறையினர் கண்ணில் எப்படி மிளகாய்ப் பொடி தூவுகிறீர்கள்?" என்றதற்கு.

"எப்போதுமே திருட்டு விசிடியா இருந்தாலும் சரி, பி.எஃப். சி.டி.யா இருந்தாலும் சரி... வெளியில தெரியற மாதிரி இருக்காது. ஒவ்வொரு கடைக்கும் நாலஞ்சு பேரை வராண்டாவுல சுத்தறதுக்காகவே வேலைக்கு வச்சிருப்போம்... அவங்க சட்டை, பேண்ட்டுக்குள்ளதான் சி.டி.க்களை வச்சுக்கிட்டு உலாத்துவாங்க. பார்ட்டி மடியும்போது, அந்தப் பசங்களுக்குச் சவுண்டு கொடுப்போம். வந்து சி.டி.யைக் கொடுத்துட்டுப் பறந்துடுவானுங்க. இது தவிர அவங்கவங்க கடைக்குள்ளயே பாதாளம் தோண்டியிருப்பாங்க. அதுக்குள்ளதான் மொத்தமா எல்லா சி.டிக்களையும் போட்டு வைச்சிருப்பாங்க. பசங்க கிட்ட இருக்கறது ரீடெய்லுக்கு. அது தவிர, வாசல்ல பார்த்தீங்கன்னா வரிசையா ஏகப்பட்ட டூவீலருங்க நிக்கும். அதுல இருக்குற பெட்டிங்கள்லயும் சி.டி.க்களை வச்சி பூட்டியிருப்பாங்க. திடீர்னு ரெய்டு வர்றப்போ, பசங்க வண்டியில சரக்கோட பறந்துடுவானுங்க" என்றார் படு கேஷுவலாக.

திருட்டு வி.சி.டி கதை இப்படியென்றால், இங்கு விற்கப்படும் எலக்ட்ரானிக் பொருள்களின் கதை வேறு விதம். செல்போன், சி.டி ப்ளேயர், சவுண்ட் சிஸ்டம் என்று இங்கு கிடைக்கும் தொண்ணூறு சதவிகிதப் பொருள்கள் போலி அல்லது பழையவை. நன்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களின் உதிரி பாகங்களை புதிய பொருள்களில் பொருத்தி, பஃபிங், பாலிஷிங் என்று ஏதேதோ ஜிம்மிக்ஸ் வேலை செய்து 'புதுசு கண்ணா புதுசாக்கி' வாடிக்கையாளர் தலையில் கட்டி விடுவதில் கை, வாய் தேர்ந்தவர்களாம் இங்குள்ள வியாபாரிகள்.



* பர்மா பஜார் கடைவீதி...

திருட்டு மற்றும் ஆபாச சி.டி விற்பனைக்கெல்லாம் முன்பே பர்மா பஜாரை ஆக்ரமித்தது இவைதானாம். "எலக்ட்ரானிக்ஸ் பொருள் ஒன்ஸ் வித்துட்டா எங்க பாடு முடிஞ்சது. அது சரியில்ல, இது சரியில்லன்னு திரும்ப யாராலயும் எடுத்துட்டு வர முடியாது. திரும்ப வந்தா அவங்க என்ன கதி ஆவாங்கன்னு அவங்களுக்கே தெரியும்" என்று நம்மை மிரள



## எனக்குப் பிடிச்ச வாகனம்...

**நான்** புதுசா வாங்கியிருக்கிற செவர்லெட் கார்தான். காரணம் கரடு முரடான பாதையிலும் அதுல பயணம் செஞ்சா ரொம்ப சொகுசா இருக்கும். குடும்பத்தோட பயணிக்க ஏத்த வாகனம். எத்தனையோ வண்டியில நான் போயிருந்தாலும் எனக்குப் பிடிச்சது இந்த கார்தான்.

**- பதிப்பாளர் காந்தி கண்ணதாசன்**

வைத்துச் சிரித்தார், பெயர் குறிப்பிட விரும்பாத வியாபாரி ஒருவர்.

அயல்நாட்டு மதுபானங்களின் சொர்க்கபுரியாகவும் பர்மாபஜார் மாறி வெகுநாட்களாகிறது. வெளிநாடுகளிலிருந்து கடத்தி வரப்படுகின்ற அல்லது சொந்த உபயோகத்திற்கென அதிக அளவில் எடுத்து வரப்படும் மது, இங்குள்ள வியாபாரிகளிடம் விற்கப்பட்டு, அவர்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்குக் கைமாற்றப்படுகிறது. இங்குள்ள ட்ரைப்ரூட்ஸ் கடைகளும், பான் பராக் கடைகளும்தான் சேல்ஸ் சென்டர்கள்.

"இத்தனை கோல்மால்கள் நடைபெற்றும், பர்மாபஜாரில் எப்படி இவ்வளவு கூட்டம்?" என்று இங்குள்ள வியாபாரி சந்துருவிடம் கேட்டதற்கு, "சல்லிசான விலைதான் காரணம்" என்றவர், ஒரு செல்போனை எடுத்துக்காட்டி, ''இதை ஷோரூம்ல வாங்கியிருந்தா நாலாயிரத்து எண்ணூறு. ஆனா இங்க நாலாயிரத்துக்கே கிடைக்குது. பேரம் பேசினா, இன்னும் கொறைச்சலாக் கூட கிடைக்கும். சட்டத்துக்குப் புறம்பா இங்க காரியங்கள் நடக்குறதா வெளியிலதான் பேசிக்கிறாங்க. அதெல்லாம் முன்ன ஒரு காலத்தில. இப்பல்லாம் சுத்தமா இல்ல" என்றார்.

அடிக்கடி ரெய்டுகள் நடத்தப்பட்ட போதும், தொடர்ந்து பர்மா பஜார் பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாவது மட்டும் நின்றபாடில்லை. இங்கு நடக்கும் குற்றங்களை ஒட்டுமொத்தமாக ஒழிக்கவே முடியாதா?

''முடியும்'' என்கிறார் சென்னை மாநகர இணை ஆணையர் சைலேந்திர பாபு.

"திருட்டு மற்றும் ஆபாச வி.சி.டிக்களுக்கும் சரி... அயல்நாட்டு மதுபானங்களுக்கும் சரி... தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மொத்த - சில்லறை வியாபாரிகள் நம்பியிருப்பது பர்மா பஜாரைத்தான். சட்ட விரோதப் பொருள்கள் இங்கு மொத்தமாகக் குவியும் நேரத்தில், பர்மா பஜாருக்குள் எங்களால் நியமிக்கப்பட்டிருக்கும் இன்ஃபார்மர்கள் தகவல் கொடுப்பார்கள். அதன்படி நாங்கள் அங்கு அதிரடியாக ரெய்டு நடத்துவோம். இந்தமுறையில் கடந்த நான்கு வருடங்களில் ரூபாய் ஐந்து கோடிக்கும் மேல் இத்தகைய பொருள்களைக் கைப்பற்றியுள்ளோம். தொடர்ந்து வரும் தகவல்களின் அடிப்படையில் அவ்வப்போது ரெய்டுகள் நடத்தி வருகிறோம். அதன் பலனாக முன்பிருந்ததைப்போல் பாதியளவுக் கடைகள் குறைக்கப்பட்டு விட்டன. ஆனாலும் இங்கு குற்றங்கள் இலைமறைக் காயாக நடந்து வருகின்றன. இதற்குக் காரணம் அங்குள்ள வியாபாரிகள் ருசி கண்ட பூனைகளாக இருப்பதுதான். மிகுந்த லாபம் தரக்கூடிய தொழில் அது. கொஞ்சம் கொஞ்சமாக இவை முற்றிலுமாக அகற்றப்படும்" என்றவரிடம்,

"வியாபாரிகளை சட்டப்படி அணுகாமல் மனிதாபிமான முறையில் அணுகி, மாற்றுத் தொழில் ஏற்பாடு செய்து தர காவல் துறை ஏன் முயலக் கூடாது?" என்றதற்கு,

"இந்த முறையில் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மாற்றுத் தொழில் ஏற்பாடு செய்யப்படுகிறது. வருங்காலத்தில் இவர்களுக்கும் கொண்டு வந்தால் நல்ல பலன் கிட்ட வாய்ப்புண்டு... பார்க்கலாம்" என்றார் சைலேந்திரபாபு. அதுவரை எச்சரிக்கையாக இருக்க வேண்டியது பொது மக்கள் மட்டுமல்ல... போலீஸும்தான்!

**- இரா.முத்துக்குமார்**
படங்கள்: **ராஜன்**




# வீட்டுக்குள்ளே கிரிக்கெட்!

–சுவாரசியமான விளையாட்டு

# பொன்விழா ஆண்டில் டிஸ்னிலேண்ட்!

–கவர் ஸ்டோரி





# துப்பறியும் துஷ்யந்த்!

–புதிய சித்திரத் தொடர்கதை

## 1000/- ரூபாய் பரிசுப் போட்டி

## சிறுகதைப் போட்டி முடிவு

# கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

ஆகஸ்ட் 2005 ரூ.6/-

● ஜே.துரைராஜ், சென்னை - 116

*? பாப்ரி மஸ்ஜித் வழக்கில் அத்வானிக்குச் சாதகமாக கீழ் கோர்ட் அளித்த தீர்ப்பை, அலகாபாத் உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டதே!*

! அத்வானியையே தள்ளுபடி செய்யச் சொல்லி இன்னொரு பக்கம் பரிவார் அமைப்புகள் வற்புறுத்துகின்றன... பாவம் அவர்!

● இரா.சக்கரபாணி, மதுரை - 7

*? முப்புரி நூலுக்கு மூன்றாம் முறை முதல்வர் பதவியைப் பெற்றுத்தர சிலர் பாடுபடுவதாக கருணாநிதி கூறியுள்ளது எதைக் காட்டுகிறது?*

! அரசியல் ரீதியாக எதிர்ப்பதற்கு எத்தனையோ விஷயங்கள் இருந்தும்கூட, கருணாநிதி இந்தக் கோணல் பாதையை விடாமல் பின்பற்றுவது, நாய் வாலை நிமிர்த்தினாலும் கோணல் மனத்தை நிமிர்த்த முடியாது என்பதைத்தான் உணர்த்துகிறது.

● எல்.வெங்கட்ராமன், கும்பகோணம்

*? மும்பை பல்கலைக்கழகம், கவர்ச்சி ஆடை அணிந்து வரக்கூடாது என்று சட்டம் போட, மாணவிகள் அதைக் கடுமையாக எதிர்த்துள்ளது பற்றி...?*

! அண்ணா பல்கலைக்கழகமும் மும்பையைப் பின்பற்றுகிறது. கல்வி நிலையங்கள், உயர்த்த கல்வியைக் கவர்ச்சிகரமாக்குவது எப்படி என்பதில் கவனம் செலுத்தினாலே போதும். மற்றவை, தலையீடுக்கு அவசியமின்றி நல்லபடி நடக்கும்.

● மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

*? ஆப்பிரிக்காவில் உள்ள ஏழை நாடுகளில் வறுமையால் தினமும் முப்பதாயிரம் சிறுவர்கள் இறக்கிறார்களாமே?*

! வறுமை கொடிது; அதனினும் கொடிது அறியாமை. இவற்றைவிடக் கொடியது, ஆட்சியில் இருப்போரின் இயலாமை.

● அசோக்ராஜா, அரவக்குறிச்சிப் பட்டி

*? தமிழ் இலக்கியத்துக்கு நோபல் பரிசு கிடைக்க வேண்டும் என்கிறாரே வைரமுத்து?*

! கிடைச்சா ஜாலிதாங்க. தமிழுக்கும் பெருமை என்பது ஒரு பக்கம் இருக்க, அதற்குப் பிறகு இங்கே இலக்கியவாதிகள் என்று சொல்லிக் கொள்வோரிடையே நடக்கும் சர்ச்சை இருக்கு பாருங்க... அது படு ஜாலி!

# ரேஷன் கார்டில் வள்ளுவரைக் காணோமே...?



* அறுவடை டைம்!



* நடிப்பு அரசியல்!

# நீங்கள் கேட்டவை – தராசு

● வே.முருகேசன், ஆதம்பாக்கம்

*? வல்லுவின் கட்சி, தமிழ்நாட்டில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடப் போகுதாமே!*

! 'இருக்கிற கூட்டணிக் கட்சிகளுக்கே எப்படி சண்டை இல்லாமல் சீட் பிரிச்சுக் கொடுக்கப் போகிறார் கலைஞர்' என்று எல்லோரும் கவலையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்க, வேலியில் போகிற ஓணானை வேட்டியில் எடுத்து விட்டுக்கொள்வார் என்று எனக்குத் தோன்றவில்லை. சீட் கேட்காமலே கூட்டணி அமைப்பதாக லல்லு சொன்னால்கூட யோசிக்கத்தான் வேணும்.

● டேவிட் ராஜா, சென்னை - 114

*? காசு கொடுத்து வாங்கிப் படிக்கும் சாமானியர்களுக்கு பத்திரிகை ஆற்ற வேண்டிய கடமை என்ன...?*

! அவர்களை அடுத்த கட்டத்துக்கு இட்டுச் செல்வது.

● வெ.ந.கிரிதரன், புவனகிரி

*? மனத்தளவில் தாம் எப்போதுமே ஒரு விவசாயி என்று நம் முதல்வர் கூறியுள்ளதைப் பற்றி...?*

! அவர் மட்டுமென்ன... எல்லா அரசியல்வாதிகளுமே வோட்டு அறுவடைக்குத்தானே வேலை செய்றாங்க!

● ஆர்.கே. ராமு, குடியாத்தம்

*? நடிகர்கள் அரசியலுக்கு வருவதில் தவறேதும் இல்லை என்கிறாரே விவேக்?*

! அரசியலில் நடிக்க ஆரம்பிக்கும் போதுதான் எல்லாமே தப்பாயிடுதுங்க!

● இளம்பிறை ஃபாரூக், சென்னை

*? சென்னை பொது மருத்துவமனையின் நவீன வசதிகளுடன் கூடிய புதிய இரட்டை மாடி மருத்துவமனை, தமிழக முதல்வரின் சாதனைதானே...?*

! சாதனை, கட்டடத்தில் இல்லை; அதில் உள்ள வசதிகளிலும் இல்லை. மருத்துவமனையின் செயல்பாட்டில் தான் இருக்கிறது.

● ஆர். ராஜதுரை, சீர்காழி


*? 'அனைத்து போலீசாரும் தினமும் ஒரு நல்லது செய்ய வேண்டும்' என்று டி.ஜி.பி. அலெக்சாண்டர் கட்டளையிட்டுள்ளாரே...?*



• கோணல் பாதை!



• படு ஜாலி!



• டபுள் தள்ளுபடி!

! 'யாருக்கு' என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கலாம். இல்லாட்டி தப்பான ஆசாமிங்களுக்குத் தொடர்ந்து நல்லது நடந்துக்கிட்டே போகும் ஆபத்து உள்ளது.

● ச.ஜான் பிரிட்டோ, திண்டுக்கல்-3

*? ஜெ. அரசால் பணி நீக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் எதற்காக சென்னை வீதிகளில் பிச்சை எடுத்து போலீசிடம் மாட்டிக் கொள்ள வேண்டும்? அம்மா ஆரம்பித்த அன்னதான திட்டத்தில் குடும்பத்தோடு சாப்பிடப்*


போய் அரசை மூச்சுத் திணற வைத்திருக்கலாமே?

! தங்கள் நிலைமையின் பரிதாபத்தை - பயங்கரத்தை உணர்த்த, அவர்கள் பிச்சையெடுக்கும் போராட்டம் நடத்தினார்களேயொழிய, பிச்சைக்காரர்களாக மாறிவிடவில்லை.

● லலிதா செல்லப்பா, பம்மல்

? பெண்கள் எல்லோருமே அரக்கிகளா? டி.வி. சீரியலில் கதாநாயகிக்கு எதிராக அப்படித்தானே பெண்களைச் சித்திரிக்கிறார்கள்?

! அவ்வாறு சித்திரிப்பவர்கள்தான் அரக்கர்கள் / அரக்கிகள்!



★ சர்ச்சை சித்திரிப்பு!

● முருகேசன், சென்னை.

? புது ரேஷன் கார்டுகளில் திருவள்ளுவரைக் காணவில்லையே?

! ரேஷன் கார்டு குளறுபடிகள் பற்றி தலைக்குத் தலை இப்போது புகார் செய்வதைப் பார்க்கும்போது, திருவள்ளுவரை அவமானப்படுத்தாதிருக்க செய்யப்பட்ட நல்ல காரியமாக ஏற்கலாம்.

● மகா, திருப்பூர்

? 'லஞ்சம் புழங்குவதில் பீகாருக்கு முதல் இடம்' என்ற புள்ளி விவரத்தை லல்லு எப்படி எடுத்துக் கொள்வார்...?

! 'அதெல்லாம் லஞ்சமில்லை; டீக்காசு' என்று லைட்டாக எடுத்துக் கொள்வார்.

● எஸ். அன்புமணி, ஈரோடு

? ஹிந்து அமைப்புகள் தங்களை இப்படி பொம்மலாட்டம் ஆட வைப்பதை பா.ஜ.க. அனுமதிப்பது எதிர்காலத்துக்கு நல்லதா...?

! நிகழ்காலத்துக்கே நல்லதல்ல.

● த. சந்தனக்குமாரன், திருவையாறு.

? சமூக மாற்றத்துக்கு இலக்கியம் பயன்படுமா?

! பயன்படும், பயன்பட்டிருக்கிறது - அது எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய நடையில் இருந்தவரை... (கல்கி, பாரதி, பாரதிதாசன், மு.வ.) இன்று வடிவ நூதனத்துக்கே முக்கியத்துவம் என்பதால், சமுதாய, சமூக நோக்கு இரண்டாம்பட்சமாகிறது அல்லது தொலைந்து போகிறது.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம் ★

? நம் நாட்டில், நடப்பாண்டில் பத்தாயிரம் கோடி சிகரெட்டுகள் விற்பனையாகும் என்றும், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது விற்பனை ஏழு சதவிகிதம் உயரும் என்றும் கூறப்பட்டுள்ளது எதைக் காட்டுகிறது?

! வளர்ச்சியடைந்த நாடுகளில் விழிப்புணர்ச்சி காரணமாக ஏற்படும் நஷ்டத்தை, சிகரெட் கம்பெனிகள் கல்வி வளர்ச்சி குன்றிய நாடுகளில் ஈடுகட்டப் பார்க்கின்றன என்பதைத்தான் உணர்த்துகிறது.

● அ. அப்துல் காதர், விளாத்திகுளம்

? இந்தியா மீது அடிக்கடி தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகளின் கோபத்துக்கு பா.ஜ.க.தான் காரணம் என்று முலாயம் சிங் யாதவ் குற்றம் சாட்டுவது பற்றி...?


! 'தான்' என்பதை அடித்துவிட்டு 'ஒரு' என்று திருத்தினால் ஏற்கலாம். ●

ரூ.100 பரிசு பெறுபவர்
மு. பெரியசாமி,
பரமேஸ்வரன் தெரு,
விட்டுக்கட்டி - 614 715
திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம்

ரூ.50 பரிசு பெறுபவர் :
க.நா. இராஜேஸ்வரன்,
தெற்கு வீதி,
மொரட்டுப்பாளையம் அஞ்சல்,
ஈரோடு - 638 752



• கலைஞருடன் சண்முகநாதன்...



• ... முகில்!

# யார் இந்த முகில்?

சமீபகாலமாக அரசியல் வட்டாரத்தில் 'கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன் மாற்றப்பட்டு, அந்த இடத்தில் முகில் என்றொரு இளைஞர் நியமிக்கப்பட்டிருக்கிறார்' என்கிற செய்தி மெல்ல கசிய ஆரம்பித்திருக்கிறது. இதை மெய்ப்பிக்கும் வகையில், மேடைகளிலும் கலைஞருக்குப் பின்னால் முகில் தென்படத் துவங்கியிருக்கிறார். 'யார் இந்த முகில்?' என்று அறிவாலய வட்டாரத்தில் விசாரித்தபோது, பல விஷயங்களைச் சொன்னார்கள்...

''அவரை 'முகில்'னு வெறுமனே யாரும் சொல்ல மாட்டோம். 'கம்ப்யூட்டர் முகில்'னு சொன்னாத்தான் தெரியும். முரசொலி வலைத்தளத்தை உருவாக்கி, அதை அப்டேட் செய்யறவர் இவர்தான். சண்முகநாதன் வராதப்போ தலைவருக்கு அறிக்கைகளையும், கடிதங்களையும் டைப் செய்து தருவாரு. சமீபத்துல ஒரு நாள் சண்முகநாதன் வராதப்ப, முகில் தலைவர்கூட ஃபங்ஷனுக்குப் போகும்படியாச்சு. அப்ப தலைவர் பின்னாடி நின்னு சண்முகநாதன் கவனிக்க வேண்டிய வேலைய முகில் செஞ்சார். 'உடனே சண்முகநாதன் இனி இல்ல. முகில்தான் உதவியாளர்'னு செய்தி கிளம்பிடுச்சு'' என்றார், பெயர் குறிப்பிட விரும்பாத அறிவாலய அபிமானி ஒருவர்.

இவர் இப்படிச் சொன்னாலும், சண்முகநாதன் இப்போதெல்லாம் அடிக்கடி வராததையும் சுட்டிக் காட்டுகிறது ஒரு தரப்பு. இதையே காரணம் காட்டி ''இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் முகில் தலைவருக்கு உதவியாளராகப் போகிறார் பாருங்கள்'' என்கிறார்கள்.

இன்னொரு பிரிவோ, ''சண்முகநாதனின் பங்களிப்பையும், முகிலின் பங்களிப்பையும் ஒப்பிடவே முடியாது. சண்முகநாதன் ஒரு சில காரணங்களால் வர இயலாத போது, முகிலின் சேவையை கலைஞர் பயன்படுத்தினாரே ஒழிய, இதுவே நிரந்தரமல்ல. சண்முகநாதனின் சேவை வழக்கம்போல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது'' என்று அழுத்தமாகச் சொல்கிறார்கள்.

இத்தனை சலசலப்புக்கிடையேயும் சமீபத்தில் கலைஞர் திரைப்பட வசனமெழுத பெங்களூருக்குச் சென்றபோது, உடன் சென்றிருந்திருக்கிறார் முகில். மன்னார்குடிக்காரரான இவர், தற்போது எம்.பி.ஏ. படித்து வருகிறார்.

- கௌசி



• அமீர்

ஆச்சர்யமூட்டுகிறது அந்தப் புகைப்படம்! ஃபிரேமுக்குள் மொத்தம் பத்துப் பேர். அதில் ஐந்து பேர், பின்புறம் பிணைக்கப்பட்ட கைகளோடு மண்டியிட்டு நிற்கிறார்கள். அவர்களைப் பிடித்துவிட்ட மிதப்பும், பெருமையும் அவர்களின் பின்னால் நின்று போட்டோவுக்கு போஸ் கொடுக்கும் ஐந்து போலீஸ்காரர்களின் முகங்களில் மின்னுகின்றன. மண்டியிட்டு நிற்கும் ஐந்து பேரில், நடுநாயகமாக கதை நாயகன். முகம் நிறைய தாடி, முரட்டு மீசை, கனமான ஒரு கதையை ஒளித்து வைத்திருக்கும் கண்கள். அவனது இடப்புற மார்பில் 'பருத்தி வீரன் முத்தழகு' என பச்சை குத்தப்பட்டிருக்கிறது. இப்படியொரு தாழ்வான நிலையில் நடிக்க அறிமுக ஹீரோக்களே ஜகா வாங்கும் தமிழ் சினிமாவில், ஆச்சர்யமூட்டுகிறார் கார்த்தி. சிவகுமாரின் இன்னொரு வாரிசு. சூர்யாவின் இளவல்.

அமெரிக்காவில் எம்.பி.ஏ., மணிரத்னத்திடம் உதவி இயக்குனர் பயிற்சி, இப்போது ஹீரோ என்று சுறுசுறு இளைஞராகத் தோற்றமளிக்கும் கார்த்தி, "என்னை பருத்தி வீரன் முத்தழகாக உருவாக்கியிருப்பவர் இயக்குனர் அமீர்! இப்போது நான் பேசுவதை விட, அவர் பேசுவது தான் சரி" என்று அடக்கத்தோடு அமீரைக் கைகாட்டுகிறார்.

இரண்டே படங்கள். இரண்டிலுமே தம்மைத் தனித்து வெளிப்படுத்திக் காட்டிய அமீர், பருத்தி வீரனில் ஒப்பனையில்லாத மண்வாசனையை கையிலெடுத்திருக்கிறார். படத்துக்குப் படம் வித்தியாசம் காட்டும் இவருக்கு, இப்போது கிராமத்தின் மீது காதல்! காரணத்தைக் கேட்டோம்.

"எத்தனை பெரிய தொழில்நுட்பங்கள் வந்தாலும், ஒவ்வொரு நாட்டின் சினிமாக்களும், தங்களது மண்ணின் அடையாளங்களை இழந்து விடவில்லை. உதாரணத்துக்கு ஈரான் சினிமா. அதில் ஈரத்தையும், மனித நேயத்தையும் பார்க்க முடியும். ஆனால் சமீபகால இந்திய சினிமா முற்றாகத் தன்னைத் தொலைத்துவிட்டது. நீலப்படத்தின் அருகில் போய்விட்டது ஹிந்தி சினிமா.

தமிழ் சினிமாவோ இன்னும் தரம் தாழ்ந்து, பெண்ணின் உதட்டைக் கடிப்பது, அதைப் படம் பிடித்து ஊர் முழுக்க போஸ்டர் அடித்து ஒட்டுவது என்று வைரஸ் பரவி, பாய்சனாகிக் கொண்டிருக்கிறது. இது நமது வாழ்க்கையே அல்ல.

சென்னையில் இருப்பவர்களுக்கு வேலைக்குப் போவதில் பிரச்னை. இதுவே சென்னையிலிருந்து 50 கிலோமீட்டர் தள்ளி செங்கல்பட்டுக்குப் போனால், அங்கே வேலை கிடைப்பதே பிரச்னை. அதையும் தாண்டிப் போனால், விவசாயம் செய்ய தண்ணீரில்லாமல் செத்துப் பிழைக்கிற மக்கள்... இன்னும் உள்ளே போனால், ஜாதிப் பிரச்னை... இன்னும் ரிமோட்டாகப் போனால், அரிசிச் சோறோ, மின்சாரமோ பார்க்காத எத்தனையோ கிராமங்கள்.. அங்கே வாழ்க்கை இன்னும் அப்



# "இது எங்க மண்ணுடா...!"

படியேதான் இருக்கிறது. அந்த வாழ்க்கையை, இந்த மோசமான படங்களுக்கு மத்தியில் 'இது எங்க மண்ணுடா, பாருங்க!'' என்று காட்ட விரும்புகிறேன்'' என்று உஷ்ணமாகத் தகிக்கிறார் அமீர்.


''எழுபதுகளில் மதுரையை ஒட்டிய பருத்தியூர் என்ற கிராமத்தில் வாழ்ந்த ஒரு நிஜ மனிதனின் (கிராமத்து தாதா) கேரக்டரை ஒரு இன்ஸ்பிரேஷனாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். இது தாதாவின் கதை அல்ல. இன்றைய தமிழ் கிராமத்தின் வாழ்க்கை'' என்கிறார்.

வரிசையாக வெற்றிப் படம் கொடுத்தும், அறிமுக நட்சத்திரங்களை நம்பி களமிறங்குவது ஏனாம்? ''என்னால் ஹீரோக்களுக்காகக் காத்திருக்க முடியாது. நான் பாத்திரங்களுக்குப் பொருத்தமான முகங்களைத் தேடுகிறவன். நடிகர்களை அல்ல. சினிமாவை நேசிக்கிற யாரும், ஹீரோக்களின் பின்னால் அலைந்து கொண்டிருக்க முடியாது'' என்கிறார் நெத்தியடியாக.

- ஜெய்

படங்கள் உதவி: சுந்தர்









கடந்த டிசம்பர் 26ம் தேதியை அவ்வளவு சுலபமாக யாராலும் மறக்க முடியாது. சுனாமி ராட்சசன் ஏற்படுத்திய காயம் இன்றைக்கும் பலருக்கு ஆறாத ரணமாக உள்ளது. இதில் கொடுமையானது, தங்கள் குழந்தைச் செல்வத்தை இழந்த பெற்றோரின் தவிப்பு தான். இவர்களுள் பலர் 'இனி தங்களுக்குக் குழந்தையே வேண்டாம்' என்று முடிவெடுத்து கர்ப்பத் தடை ஆபரேஷன் செய்து கொண்டவர்கள். 'இனி வாழ்க்கையில் என்ன இருக்கிறது' என்று சோர்வுற்று இருந்தவர்களை, "ரீகேனலைசேஷன் என்கிற ஆபரேஷன் செய்து கொண்டால், மீண்டும் குழந்தை பெற வாய்ப்புண்டு. அதை இலவசமாக நாங்களே செய்து தருகிறோம்" என்று அறிவித்து அவர்களின் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தத்தைக் கொடுத்திருக்கிறது அரசு.

உண்மையில் இந்த ஆபரேஷன் பல ஆண்டுகளாகவே செய்யப்பட்டு வருகிறது. ஆனால், நம்நாட்டு மக்கள் தொகையை மனதில் வைத்து, இதைப் பெரிய அளவில் அரசு மக்களிடம் கொண்டு செல்லவில்லை. இப்பொழுது ரீகேனலைசேஷன் பற்றி அரசு அறிவிப்பு செய்த பிறகு, சுனாமியில் குழந்தைகளை இழந்த பெண்கள் மகிழ்ச்சியுடன் ஆபரேஷன் செய்து கொள்ள முன்வந்துள்ளனர். சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில், எத்திராஜ வள்ளி மற்றும் லதா ஆகிய இரு பெண்களுக்கு ஆபரேஷன் முடிந்துவிட்டது. மஞ்சுளாவிற்கு விரைவில் நடக்க உள்ள நிலையில், நாம் அவர்களை சந்தித்துப் பேசினோம்.

"என் பையன் இப்பத்தான் ஒண்ணாங்கிளாஸ் முடிச்சான். ரொம்ப குறும்புக்காரன்னாலும் தங்கச்சி மேல அவ்ளோ பாசம். ஸ்கூலுக்குப் போறதுக்கு முன்னாடி நாள் தவறாம தங்கச்சிக்கு முத்தம் கொடுத்துட்டு, டாட்டா காட்டிட்டு போவான். ஸ்கூல் முடிஞ்சு வீட்டுக்கு வந்தவுடனே, 'அம்மா.. மூணு இட்லியையும் சாப்பிட்டுட்டேன்'னு சமத்தா டிபன் பாக்ஸைத் திறந்து காட்டுவான். லீவு விட்டா தங்கச்சியைக் கூட்டிக்கிட்டு விளையாடப் போவான். ரொம்ப ரொம்ப செல்லமா வளர்த்தோம். திடீர்னு சுனாமி வந்து அவனை கொண்டு போயிடும்னு நினைச்சுக்கூடப் பார்க்கல" என்று பேசிக் கொண்டிருக்கும்

# "பறிச்சவனே



• மஞ்சுளா

போதே எத்திராஜவள்ளிக்கு அழுகை பொத்துக்கொண்டு வர, பேச முடியாமல் திணறியவர், சட்டென்று சுதாரித்துக் கொண்டு, "ஆனா அப்போவே எல்லாரும் சொன்னாங்க. 'வள்ளி, உனக்கு சின்ன வயசு தான். இப்பவே ஆபரேஷன் பண்ணிக்காதே'ன்னு... ஆனா நான்தான் பாவி, அவசரப்பட்டுட்டேன். இப்போ ஆண்டவன் புண்ணியத்துல ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சிடுச்சு... குழந்தை பொறந்தவுடனே செத்துப்போன என் பையன் பேரையேத்தான் வைக்கப்போறேன்" என்றார் கண்ணீர் மல்க. இருபத்தாறு வயதாகும் எத்திராஜவள்ளி, ஆபரேஷனுக்காக தேவனாம்பட்டினத்திலிருந்து வந்திருக்கிறார்.

முப்பத்தாறு வயதானாலும், கடவுள் மீது பாரத்தைப் போட்டு வந்திருக்கும் லதா, "எனக்கு நல்லா தெரியுதுங்க... சீக்கிரமே எனக்கு ஒரு பிள்ளை பொறக்கும். அது ஆசையா என்னை அம்மான்னு கூப் பிடத்தான் போகுது" என்று நம்பிக்கை தொனிக்கப் பேசினார்...

"பதினாலு வயசுப் புள்ளைய சுனாமிக்கு வாரிக் கொடுத்துட்டு இப்போ சும்மா நிக்கறேங்க.. எனக்கு ஒரு பொண்ணு இருக்கா. இன் னொரு குழந்தை பெத்துக் கணும்னு அவசியமே இல்ல. ஆனா என் பொண்ணுக்குத் துணையா ஒரு புள்ள, கடைசி காலம் வரைக்கும் ஆதரவா இருக்கணும்னுதான் இந்த ஆப ரேஷனுக்கே ஒத்துக்கிட்டேன். சில பேரு சொல்றாங்க, இந்த ஆபரேஷன் பண்ணிக்கிட்ட நூறு பேர்ல அறுபது பேருக் குத்தான் குழந்தை பொறந்



* எத்திராஜவள்ளி



* லதா

# கொடுப்பான்!"

திருக்குன்னு. ஆனா எனக்கு என்ன நினைப்புன்னா 'கொடுத்தவனே பறிச்சிக்கிட்டான்'னு சொல்றாங்கல்ல.. அது மாதிரி பறிச்சவனே கொடுக்கப் போறான் பாருங்க... இந்த சுனாமியால எனக்கு எவ்வளவோ சொத்து பத்து போயிடிச்சு.. ஆனாலும் என் புள்ள இழப்பு மட்டும்தான் எங்களை, குறிப்பா எங்க வீட்டுக்காரரை ரொம்பவே புண்ணாக் கிடிச்சு. முக்கியமா அவரை தேத்தறதுக்காக வாவது, ஒரு குழந்தை பெத்துக்கிட்டே ஆகணும். எங்க குடும்பத்தையே புள்ளதான் தூக்கி நிறுத்தப் போறான்னு நினைச்சோம். ஆனா இப்படி அவன் எங்க நினைப்புல மண்ணைப் போடுவான்னு கனவுல கூட நினைக்கலீங்க" என்று கண்ணீர் தாரை தாரையாக வழியப் பேசிய லதாவை, "அழா தீங்கக்கா.. சீக்கிரமே உங்க மகனே உங்க வயித் துல வந்து பொறக்கப் போறான் பாருங்க" என்று தேற்றினார் மஞ்சுளா. சென்னை பட் டினப்பாக்கத்தைச் சேர்ந்தவரான இவர், ஆபரேஷனுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

"என் புள்ள தெருப்பசங்களோட பீச்சுப் பக்கம் விளையாடப் போயிருந்தான். போற துக்கு முன்னால ரெண்டே ரெண்டு இட்லி சாப்பிட்டுப் போடான்னு ரொம்பப் பிடி வாதம் பண்ணி, சாப்பிட வச்சு அனுப்பி னேன். சுனாமி வந்து எல்லாரையும் அடிச் சுக்கிட்டுப் போகுதுன்னு தகவல் சொன் னப்போ, பயத்துல கையும் ஓடல... காலும் ஓடல... எங்கெங்கயோ போய்த் தேடினோம். குழந்தைகள் பிணத்தை ஒண்ணு மேல ஒண்ணா அடுக்கி வச்சிருந் தாங்க. எங்க புள்ளையை கடைசி வரைக்கும் அடையாளம் கண்டுக் கவே முடியல. அவனுக்கு தெரியாத சேட்டையே கிடையாது. வீட்டுக்கு வாங் கிட்டு வர்ற முட்டையை ஒண்ணுமேல ஒண்ணு மோதி உடைச்சிடுவான். சாம் பார்ல யாருக்கும் தெரியாம உப்பைக் கொட் டிட்டு, ஒண்ணும் தெரியாத புள்ள மாதிரி முழிப்பான். அப்போல்லாம் செமயா அடி வாங்குவான். ஆனா இன்னிக்கு எங்க வீடே 'ஓ'ன்னு இருக்கு. என் பொண்ணு 'எங் கம்மா அண்ணன்?..'னு என்ன நச்சரிச்சிக் கிட்டே இருக்கா. இந்த சமயத்திலதான் 'ஆபரேஷன் பண்ணிக்கலாம்.. அதுவும் இல வசமா'ன்னு கவர்ன்மெண்ட்ல சொன்னாங்க. உண்மையிலயே அன்னிக்குத்தான் எங்க வீட்ல கொஞ்ச நாளா மறைஞ்சிபோன சிரிப்பு திரும்புச்சி. ஆனா ஒண்ணுங்க, திரும்ப இன்னொரு குழந்தை பிறந்து... அது ஆணா இருந்தாலும் சரி... பொண்ணா இருந்தாலும் சரி.. நிச்சயமா வேற ஒரு பேரை தான் வச்சிக் கூப்பிடுவோம்.." என்றுவிட்டு மஞ்சுளா விசும்பத் தொடங்க, இப்போது அவருக்கு லதா ஆறுதல் கூற ஆரம்பித்தார்.

– முராரி

படங்கள் : ராஜன்

# பிட்டா பிடிங்க!



★ ரமேஷ் பிரபாவின் பாட்டு நிகழ்ச்சியும், சமையல் நிகழ்ச்சியும் ஞாயிற்றுக்கிழமை ஸ்லாட்டிலிருந்து விரைவில் வேறு நேரத்துக்கு மாற்றப்பட உள்ளன.

★ கோலங்கள் சீரியலில் அதிரடி மாமியாராக வரும் நளினி, தமிழன் டீ.வி.யில் ஒளிபரப்பாகும் மாமியார் - மருமகள் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் கவுன்சிலிங் வழங்கி வருகிறார்.

★ பிரபலமான சீரியல்களை (ஏற்கெனவே ஒளிபரப்பானவை) வாங்கி, மறு ஒளிபரப்பு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது பொதிகை. முதல் போணி 'சித்தி'.



★ பல்லவி மேனன் டைரக்ஷன் துறையில் அதிக ஈடுபாடு கொண்டதால், அத்துறையின் மீது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார்.

★ புகழ்பெற்ற திரைப்படமொன்றை சீரியலாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார் நடிகர் ராஜேஷ்.

★ இயக்குனர் சுந்தர் கே.விஜயனை செட்டில் அனைவரும் SKV என்றே அழைக்கிறார்கள்.

''செல்வி சீரியல்ல நான் பண்ற 'மது' கேரக்டரைப் பார்த்துட்டு, ஏகப்பட்ட பேர் என்னை சரியான வாயாடின்னு நினைக்கறாங்க. ஆக்சுவலி நான் ரொம்ப சாஃப்டான டைப் தெரியுமா...?'' என்று சிணுங்கும் திவ்யதர்ஷனி, ஏன் இப்போதெல்லாம் அதிகம் காம்பியரிங் பண்ணுவதில்லையாம்? ''தேவையான அளவுக்கு

# கொட்டு



**வி**ஜய் டீ.வி.யின் 'கடவுள் பாதி... மிருகம் பாதி' நிகழ்ச்சியில், அண்மையில் இசையமைப்பாளர்களின் தனிப்பட்ட குணங்களையும், குறைகளையும் நக்கலடித்ததோடு, ஒரு இசையமைப்பாளரை டபுள் மீனிங்கில் பேச வைத்தது டூமச்... (இத்தனைக்கும் அந்தக் குறிப்பிட்ட இசையமைப்பாளர் சில வாரங்களுக்கு முன்பு அந்த டீ.வி.யின் முக்கியமான நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்.)

# ஷொட்டு

**பீ**ரோ புல்லிங் கொள்ளை நடக்காமல் தடுப்பது எப்படி, விபத்தின்றி பிரயாணம் செய்வது எப்படி என்பது குறித்தெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், வல்லுனர்களை வைத்து நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகி வருகின்றன. 'பொதிகை'யில். கீப் இட் அப்!

காம்பியரிங் பண்ணியாச்சு. இப்போ நெக்ஸ்ட் ஸ்டெப் சீரியல்ல நடிக்க ஆரம்பிச்சிருக்கேன். திரும்ப காம்பியரிங் பண்ண யாரும் கூப்பிட்டா, ஐ ஆம் ஆல்வேஸ் ரெடி."

'படிப்பு, படிப்புன்னு சொல்வாங்களே.. அப்படி ஏதும் இருக்கா? ஒழுங்கா படிக்கிறீங்களா.?' என்று கேட்டால், ஏதோ வயதையே கேட்டுவிட்டதைப் போல அனல் பார்வை வீசிவிட்டு, "அண்ணா ஆதர்ஷ்ல பி.ஏ. இங்கிலீஷ் செகண்ட் இயர் படிச்சிட்டிருக்கேன். நான் இங்கிலீஷ் பேசறதையும், நடிக்கறதையும் பார்த்து NFDC தயாரிச்ச ஆங்கிலப் படத்துல என்னை ஹீரோயினா நடிக்க வச்சாங்க. என்ன ஒரு வருத்தம்னா, அந்தப் படத்தை ஃபிலிம் பெஸ்டிவல்ல மட்டும் தான் போடுவாங்க" என்று சொல்லும் திவ்யதர்ஷினிக்கு, சூப்பர் ஸ்டார் மீது அளவு கடந்த கிரேஸ்.

## "பிளான் பண்ணி அடிச்சாங்க!"

ஒரு முறை செல்வி சீரியலுக்காக ராதிகா இவரை அடிக்க வேண்டிய சீனில், உண்மையிலேயே நன்றாக அடித்து விட்டாராம். "எனக்கென்னவோ ஏதோ பிளான் பண்ணித்தான் அடிச்சுட்டாங்கன்னு நினைக்கிறேன்" என்று கண்ணடிக்கும் திவ்யதர்ஷினியின் வசம் தற்போது செல்வி, இது ஒரு காதல் கதை என்று இரு சீரியல்கள்.



# சேனல் ரகசியம்

❐ மூன்றெழுத்து 'கா' நடிகையைப் போல மூன்றெழுத்து 'பூ' நடிகை, சின்னத் திரையில் பெரிய அளவில் ஜெயிக்காததன் காரணம், அவர் இன்னும் கவர்ச்சியையே அதிகம் நம்புவதுதான் என்கிறார் ஒரு சின்னத்திரை சீனியர் நடிகர். இதற்கு உதாரணமாக அவர் சொல்வது, அந்த காஸ்ட்லி ப்ளவ்ஸைத்தான். இப்படிச் சொல்பவர் 'கடலில் பாயும்' சீரியலில் நடித்தவர்.

❐ குடும்ப இசை சேனலில் அந்தக் குறிப்பிட்ட இரு இளைஞர்களுக்கு மட்டும் ஏகக் கெடுபிடி தரப்படுகிறதாம்.

❐ ஒரு பிரபல தமிழ்ப் பத்திரிகை சேனல் தொடங்க எண்ணி கைவிட்ட திட்டத்தை மீண்டும் தூசி தட்டுகிறது.

தொகுப்பு : **கோகிலா**

# “ஜெயலலிதா மன்னிப்பு கேட்க வேண்டும்!”

சென்ற வாரம் ராமேஸ்வரம் ஆலயத்துக்குச் சென்ற காஞ்சி ஜயேந்திரரை கருவறைக்குள் நுழைய விடாமல் அனுமதி மறுத்துள்ளனர் அங்குள்ள அர்ச்சகர்கள். இதனால் அதிருப்தியடைந்த ஜயேந்திரர், வெறுமனே திரும்ப நேரிட்டது. இந்நிகழ்வு குறித்து பா.ஜ.க பொதுச் செயலாளர் ஹெச்.ராஜா நம்மிடம் சுரீரென்று பேசினார்.



## இந்த உத்தரவை தேவாலயத்துக்கும் மசூதிக்கும் செயல்படுத்தத் துணிவிருக்கிறதா?

“மேலிட உத்தரவைக் காரணம் காட்டி, இந்து மதத்தின் மிகப்பெரிய தலைவரான ஜயேந்திரருக்கு இப்படியொரு மிகப் பெரிய அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது ஜெயலலிதா அரசு. இந்தச் சம்பவத்தின் மூலம் ‘தான் ஒரு இந்து விரோதி’ என்று சிறுபான்மை மக்களுக்குக் காட்ட முனைந்துள்ளார் ஜெயலலிதா. இது ஆபத்தானது. கடுமையான கண்டனத்துக்குட்பட்டது.

உண்மையில் ராமநாத சுவாமி ஆலயத்துக்குள் யாருடைய முன் அனுமதியையும் பெறாமல் கருவறைக்குள் செல்வதற்குண்டான அத்தனை உரிமையும் நேபாள மன்னருக்கும் காஞ்சி சங்கராச்சார்யார்களுக்கும் உண்டு. இந்த உரிமை இன்று - நேற்று வழங்கப்பட்டதல்ல... காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. நிலைமை இப்படியிருக்க, ஜெயலலிதா அரசு சிறுபான்மை மக்களின் வாக்கு வங்கியைக்

* ராமேஸ்வரம் கோயிலிலிருந்து வெளியே வரும் ஜயேந்திரர்...





கைப்பற்றும் நோக்கத்தில், இப்படியொரு மோசமான முறையில் செயல்படத் துவங்கியுள்ளது.

ஜயேந்திரர் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவரென்று இதற்கு இன்னொரு காரணமும் சொல்கிறார்கள். எனில் குற்றம் சுமத்தப்பட்ட ஜெயலலிதா மட்டும் முதல்வர் நாற்காலியில் அமரலாமா...? 'விநாச காலே...விபரீத புத்தி...' என்பார்களே, அதுபோல ஜெயலலிதாவுக்கு அழிவு நேரம் தொடங்கிவிட்டது. அதனால்தான் இப்படி இந்து விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் இந்து ஆலயத்துக்குள் நுழையக் கூடாது என்று மறைமுக உத்தரவு போட்ட ஜெயலலிதாவுக்கு, இதேபோன்ற உத்தரவினை தேவாலயத்துக்கும், மசூதிக்கும் செயல்படுத்தத் துணிவு இருக்கிறதா...? இதற்கெல்லாம் ஒரே காரணம், இந்து உணர்வாளர்கள் ஒற்றுமையின்றிச் செயல்படுவதுதான்.

எனவே ஜெயலலிதாவைப் போன்ற இந்து விரோதிகளிடமிருந்து இந்துக்கள் அவமானப்படுத்தப் படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், இந்து உணர்வாளர்கள் ஒன்றுபட வேண்டும்.

எது எப்படியிருந்தாலும், இந்தத் தவறுக்கு பிராயச்சித்தம் தேடும் விதமாக, காஞ்சி சங்கராச்சார்யாரிடமும், இந்துக்களிடமும் ஜெயலலிதா பகிரங்க மன்னிப்பு கேட்டே ஆக வேண்டும். இதைச் செய்யத் தவறும் பட்சத்தில், வரும் தேர்தலில் இந்துக்கள் அவருக்குச் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள்" என்றார் ஆவேசமாக!

"முன்பு அனுமதி மறுத்த அதே அர்ச்சகர்கள், ஜயேந்திரரிடம் மன்னிப்புக் கேட்டு, மீண்டும் ஆலயத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்களே..." என்றதற்கு,

"எங்களுக்குத் தேவை அர்ச்சகர்களுடைய மன்னிப்பு அல்ல... பாவம் ஓரிடம்... பழி ஓரிடமா...? ஜெயலலிதாவும், இந்து அறநிலையத்துறை அமைச்சரும் ஜயேந்திரரிடம் மன்னிப்புக் கேட்டே ஆக வேண்டும். இதுதான் எங்களுடைய நிலைப்பாடு" என்று சீறி முடித்தார் ஹெச். ராஜா.

- **கலை**

படம்: **ராஜன்**

# முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

இப்பொழுது கால வெள்ளோட்டத்திலே வேதபாராயணம் குறைந்துகொண்டே வருகிறது. லோகத்திலே வேத பாராயணம் நடந்தால்தான் சுபிட்சம் ஏற்படும்; க்ஷேமமானது ஏற்படும். மற்றைய சப்தங்கள் குறைய வேண்டும்; வேத சப்தம் உலகிலே நன்கு ஒலிக்க வேண்டும். மங்களமான, பரம மங்களமான சப்தம் அது. பிரும்ம கோஷம் என்றே அதற்குப் பெயர். இந்த பிரும்ம கோஷம் உலகிலே இருந்ததென்றால், எல்லா ஜீவ ராசிகளுக்கும் அதன் மூலமாக க்ஷேமம் ஏற்படும். அதனால்தான் 'வேதத்தைக் கசடறக் கற்றல் பெரிய யோகம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த வேதத்திடம் உத்தமமான குணம் அமைந்திருப்பதனாலேயும், அதனை யோகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

என்ன குணம் இருக்கிறது வேதத்திடம் என்பதை ஆசார்யர்கள் வியாக்யானம் பண்ணுகிறார்கள். வேதத்தைப் போற்றுவதற்குக் காரணம் என்ன? மற்றயதைக் காட்டிலும் அதற்கு அப்படி என்ன தனிப்பட்ட ஏற்றம்?

வேத பாஷ்ய அதிகாரியான வித்யாரண்ய சுவாமி அந்த ஏற்றத்தைச் சொல்கிறார்:

ஆரம்பிக்கிறபோதே அவர் என்ன சொல்கிறார் என்று பார்த்தால், "நரசிம்ஹனை தியானம் பண்ணவில்லையென்றால், வேத பாஷ்யம் சொல்ல முடியுமா!" என்றுதான் கேட்கிறார். லக்ஷ்மி நரசிம்ஹனை தியானம் பண்ணிவிட்டு அவர் சொல்கிறார். 'வேதம் என்றால் என்ன?' என்று முதலில் கேள்வி எழுப்பிக் கொள்கிறார். அந்த வேதத்தோடு சம்பந்தப்பட்டவர் யார்? அதிலே சொல்லப்பட்ட விஷயம் என்ன? சம்பந்தம் என்ன? அதிகாரிகள் யார்? அந்த வேதம் எப்படி நமக்குப் பிரமாணம் ஆகிறது?' என்று கேள்வி கேட்டு அவர் சொல்வது இதுதான்:

'இஷ்டத்தை நமக்கு உண்டு பண்ணுவதினாலேயும், அநிஷ்டங்களை (வேண்டாதவற்றை) நிவ்ருத்தி பண்ணுவதனாலேயும் கண் கூடாகப் பார்த்து உணர முடியாத அலௌகிகமான (கண்ணுக்குத் தெரியாத பரோக்ஷமான) விஷயத்தை அது நமக்கு உணர்த்துவதனாலேயும், அதற்கு வேதம் என்று பெயர்.

இஷ்டம் - அநிஷ்டம் என்பதை சாமானியமாக உலகத்திலே பார்க்கிறோம்.

சரீரத்துக்கு வியாதி வந்து விடுகிறது. நோயினால் பீடிக்கப்படுகிறது. சரியாக வேலை செய்ய மாட்டேனென்கிறது. அவஸ்தை ஏற்படுகிறது. அதற்காக மருத்துவரிடம் காண்பிக்கிறோம். காண்பித்த

37



வுடனேயே அவர் மருந்து கொடுக்கிறார். அந்த மருந்தைச் சாப்பிட்டவுடனேயே நோய் நிவ்ருத்தியாகிறது.


மருந்து சாப்பிட்டதனாலே நோய் நிவ்ருத்தியாகிறதேயொழிய, இத்தனை நாளாக நோய் கண்ட அவரது சரீரம் பலவீனமாகிறது. எழுந்திருக்க முடியவில்லை. அதற்காக இன்னொரு மருந்து கொடுக்கிறார் மருத்துவர்! அதைச் சாப்பிட்டவுடனேயே இவருக்கு சக்தி வந்துவிடுகிறது. பழைய நிலையை அடைகிறார். - உலகத்திலே இதைக் கண்கூடாக நாம் பார்க்கிறோம்.

ஆரோக்கியம் என்பது இஷ்டம்;

அனாரோக்கியம் என்பது அநிஷ்டம்!

அநிஷ்டத்தை மருந்து சாப்பிட்டுப் போக்கிக் கொள்கிறோம். இஷ்டப் பிராப்தி - ஆரோக்கியத்தை - நாம் அடைகிறோம்.

கடையிலே போய் மருந்தை வாங்கிக் கொண்டு வருகிறபோது பார்க்கிறோம். அதிலே ஆரம்ப நாள், முடிவு நாள் இரண்டும் எழுதப்பட்டிருக்கிறது. அதற்கப்புறம் அந்த மருந்துக்கு



வீரியம் கிடையாது. அதை உபயோகிக்கக் கூடாது. மருந்துக்கே இந்த லட்சணம் என்றால், அதைச் சாப்பிடுகிற, அதை நம்பி இருக்கிற இந்த சரீரம் இருக்கிறது பாருங்கள்... அதன் இலட்சணம் எப்படிப் பட்டதாகயிருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்!

இந்த சரீரத்துக்கும் ஆரம்ப நாள், முடிவு நாள் எழுதப்பட்டிருக்கிறது. முடிவு நாள் நமக்குத் தெரிவதில்லை. பகவான் இதிலே எழுதி வைத்துவிட்டான் ஏற்கெனவே. ஆனால், அது தெரியாததனாலே, நாம் அதை கவனிப்பதில்லை.

மருந்தை நாம் உண்டு பண்ணுவதனாலே, அதன் முடிவு தேதியை நாம் எழுதி வைக்க முடிகிறது. அழியக்கூடிய அந்த மருந்தினால் தயாரிக்கப்பட்டு, செப்பனிடப்படும் நமது சரீரமும் அழியக்கூடியதுதான் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

வேதமானது, இப்படியெல்லாம் அழியக்கூடிய விஷயத்தைச் சொல்லவில்லை. அழியாத ஆத்மா இருக்கிறது பாருங்கள் உள்ளே... அதற்கும் ரோகம் ஏற்படுகிறது... என்ன ரோகம் என்றால், திரும்பத் திரும்பப் பிறத்தல் என்கிற ரோகம். ஆதிசங்கரர் சொன்னது போல, 'புனரபி ஜனனம் புனரபி மரணம்' என்று பிறவிகளை அடையும் ரோகம். பலவிதமான சரீரங்களை அடைதல் என்கிற பிணி. இந்த அநிஷ்டத்தைப் போக்கி, இஷ்டப் பிராப்தி அளிக்கிறது வேதம். பகவானை அடைந்து, அவன் திருவடியிலே நித்ய கைங்கர்யம் பண்ணும் அளவுக்கு நம்மை உயர்த்தி வைப்பதனாலே, அநிஷ்டம் எது இஷ்டம் எது என்பதை நமக்கு நன்கு தெரியும்படி உணர்த்துவதனாலே அதற்கு வேதம் என்று பெயர்.

- இதுதான் வித்யாரண்யரின் விளக்கம்.

இப்படிப்பட்ட வேதம், எல்லோருக்குமே - உலகத்தில் இருக்கும்படியான எல்லோருக்குமே - பொதுவாக இயங்குகிறது. எல்லோருடைய நலனையும் இந்த வேதமானது பிரார்த்திக்கிறது.

பிராத:கால சந்தியாவந்தன பிரார்த்தனையில், "இந்தச் சமயத்திலே விவசாயி நிலத்தைப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார். அவர் ஏர் உழுதுகொண்டிருக்கிறார். அவர் உழவில்லை என்றால் உலகத்திலே அன்ன சம்விருத்தி ஏற்படுமா...?

எல்லோருக்கும் தானியம் கிடைக்குமா? சாப்பிட முடியுமா...! அதனாலே, ஹே மித்ரா (நண்பா)! சூரியனே! இந்த நிலத்தை உழக்கூடிய விவசாயியையும், அவர் குடும்பத்தையும் நீ நன்கு ரக்ஷிக்க வேண்டும். ஆரோக்கியத்தோடு, திடகாத்திரத்தோடு அவர்கள் இருந்து இந்த உலகுக்குத் தொண்டு செய்து, அன்ன சம்விருத்தியை உண்டு பண்ண வேண்டும்" என்று பிரார்த்திக்கிறது.

சந்தியாவந்தனமோ, ஜபமோ, யாகமோ... அதைப் பண்ணுகிற ஒருவருக்காக மட்டுமல்ல... உலகத்திலே அத்தனை பேருடைய க்ஷேமத்தையும் வேண்டித்தான் பண்ணப்படுகிறது. வேதத்தின் பிரார்த்தனையே, இஷ்டத்தை அளித்து அநிஷ்டத்தைப் போக்க வேண்டும் என்பதுதான்.

இப்படிப்பட்ட வேதமானது நித்யத்வம் என்ற குணம் உடையது. விசேஷமான குணம் இது. மற்றொரு குணம் அபௌருஷேயத்வம். இன்னொரு குணம் அவிச்சின்ன பரம்பராகதத்வம்; இன்னொரு குணம் அனந்தத்வம்.

**சு**ப்ரபாதம் ரிங்டோன்தான் எப்போதும் என் செல்போன்லே இருக்கும். அந்த இனிமையான நாதத்தை எப்போது கேட்டாலும் மனசுக்கு இதமா இருக்கும். கோபம் வரும்போது, சோகம் இருக்கும்போது யாராவது போன் பண்ணா, இந்த ரிங்டோன் மூலமா நான் சாந்தமாயிடுவேன்.

**- சீர்காழி சிவசிதம்பரம்**

**எனக்குப் பிடிச்ச ரிங்டோன்...**



நித்யத்வம் - வேதம் எப்போதும் நித்யமாய் இருக்கிறது. இருந்துகொண்டேயிருக்கிறது. பிரளய காலத்திலும் அழியாமல் பகவான் அதை வைத்துக் கொண்டு, மறுபடியும் உபதேசம் பண்ணுகிறான். அதை அழியாமல் காப்பவன் பகவான்தான். வேதத்தை நாம் சம்ரக்ஷணம் பண்ணுகிறோமா, பகவான் சம்ரக்ஷணம் பண்ணுகிறானா என்றால், பகவான்தான் ரொம்ப ஜாக்கிரதையாக சம்ரக்ஷிக்கிறான்.

வேதம் இருக்கிறது என்றால், பரமாத்மா இருக்கிறான்; வேதம் இல்லையென்றால், பரமாத்மா இல்லை!

- முதலில் சொன்ன வாக்கியத்தை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால், இரண்டாவது சொன்ன வாக்கியத்தை ஒப்புக்கொள்வது கஷ்டம்.

வேதம் இல்லை என்றால் பரமாத்மா இல்லை என்று சொல்ல முடியுமா? வேதத்தைச் சொல்கிறவர்கள் பூலோகத்திலே குறைந்து, வேத சப்தமே இல்லாது போனால், பகவான் இல்லை என்று சொல்வது முறையாகுமா? வேதத்தைக் காதால் நாம் கேட்காததனாலேயே, பகவான் இல்லை என்று சொல்ல முடியுமா?

இதற்கு என்ன பொருள் என்றால், வேதம் இருந்தால்தான் பகவான் இருப்பதை நாம் உணர முடியும். அவனை உணர்த்துவதிலே தோஷமில்லாத பிரமாணமாக வேதம் இருக்கிற காரணத்தினாலே, அந்த வேதம் போய்விட்டால், வேதமே ஒலிக்காவிட்டால், பரமாத்மா இல்லை.

வேதத்தைக் கொண்டுதான் பரமாத்மாவை உணர முடியும். அப்படிப்பட்ட வேதம் எப்பொழுதும் நித்யமாய் இருக்கிறது. கால வெள்ளோட்டத்திலும், நித்யமாய் இருக்கிறது.

திரேதாயுகம், கிருதயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று யுகங்கள் மாறினாலும் வேதம் நித்யமாக இருக்கிறதா என்றால், எத்தனை யுகங்கள் மாறினாலும் வேதமானது இருந்துகொண்டே இருக்கிறது. அது பகவானுடைய மூச்சுக்காற்றாக இருப்பதனாலே, எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது.

அது மாத்திரமில்லை... ஒரு வடிவு இருக்கிறதா வேதத்துக்கு என்றால், அதற்கு வடிவம் என்பது கிடையாது.

ஒவ்வொரு வேதத்தைச் சொல்கிறபோதும், அதற்கொரு சப்தோச்சாரணம் இருக்கிறது.

கேட்கிறபோதே இது யஜுர் வேதம் என்று தெரிகிறது. ஸ்வரத்தையோ பதத்தையோ மாற்றி உச்சரிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

சூர்ய: என்றால் சூரியன்.

சூரியனுக்கு மார்த்தாண்ட: என்றொரு சப்தம் இருக்கிறது. பானு: என்றொரு சப்தம் இருக்கிறது. திவாகர: என்று ஒரு சப்தம் இருக்கிறது. அதற்காக சூர்ய: என்ற சப்தத்தை எடுத்துவிட்டு, பானு: என்று போட முடியுமா...?

நமக்கு சுயேச்சையாக அந்த இடத்திலே மாற்றிப் போடக் கூடிய அதிகாரம் கிடையாது. பதத்தையோ, ஸ்வரத்தையோ மாற்றுவதற்கு உரிமை கிடையாது.

ஆதியிலிருந்து எப்படி நம்மால் கேட்கப்பட்டதோ, அதன்படிதான் அதை உச்சரிக்க வேண்டும்.

கேட்டுக் கேட்டு வளர்க்கப்பட்டது. ஓலைபடாக் கிளவி என்று பெயர் வேதத்துக்கு. எழுதிப் படிக்கக்கூடியது அல்ல...

(வளரும்)



## எனக்குப் பிடிச்ச ஆண்...

**என்** கணவர்தான். நான் காதல் திருமணம் செய்து கொண்டவள். எனக்குச் சுதந்திரம் தந்து, என் மீது அளவு கடந்த அன்பு செலுத்தி, ஒரு பூவைப் போல மென்மையாக என்னைப் பார்த்துக் கொள்ளும் என்னவரை விட எனக்குப் பிடித்த ஆண், வேறு யாராக இருக்க முடியும்?

- பாரதி பாஸ்கர்

மக்களின் பழக்கங்களில்...

குறைந்து கொண்டிருப்பவை: தாவணி, கடிதம்

கூடிக் கொண்டிருப்பவை : கம்ப்யூட்டர், செல்போன்

என்றும் மாறாதவை : இட்லி, கல்கி!

- பட்டுக்கோட்டை பிரபாகர்

# மாறாதது!




• படம்: ஸ்ரீஹரி

Superbrand

As per BIS,
IS:2888-1983.



# உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
# தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் சிந்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. சிந்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே சிந்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.




**மேனிப் பராமரிப்பு என்றென்றும்**

Orchard B *GCPMSOCN 913/04 TAM*

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka



• மத்திய உள்துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டீல் அவர்களிடமிருந்து டைரக்டர் திரு. S.P. நாயுடு அவர்கள் விருது பெறுகிறார்.
S.P. Naidu - Ex. President of Madras Diamond Manufacturer's Association.
Former Trade Protocal Agent of Romania in India.

**ARTHRITIS- மூட்டுவலி:** ◆ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி ◆ கை, கால் மூட்டுகளில் வீக்கமும், வலியும் ◆ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும் ◆ கழுத்து வலி ◆ நடு முதுகின் கீழ்ப்பகுதியில் வலி. பல ஆண்டுகளாக இருந்தாலும் வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம் பெறச் செய்கின்றோம். வெளிநாடுகளில் இருந்தும் (USA, Moscow, Malaysia, Singapore, Zambia, Australia, Switzerland and many other countries) வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.

## புற்று நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்

ஆரம்ப நிலை புற்று நோய் குணப்படுத்தப்படுகிறது, மற்றும் RADIATION, CHEMOTHERAPY எடுத்துக் கொள்பவர்களுக்கு பக்க விளைவுகளிலிருந்து (முடி உதிர்தல், வாய்புண், இரத்த சோகை, குமட்டல், வாந்தி) நிவாரணம் கிடைக்கிறது. முற்றிலும் பக்க விளைவுகளற்ற மூலிகை மருந்துகள் மற்றும் இயற்கை மருத்துவ சிகிச்சை முறைகளால் புற்று நோய் பரவுவது தவிர்க்கப்படுகிறது.

1. நேரில் வந்து எங்கள் மருத்துவமனையில் தங்குபவர்களுக்கு: எங்கள் மருத்துவமனையில் 6 விதமான சிகிச்சைகள் தருகிறோம். மேலும் கேன்சர் ஹெர்பல் லேகியம் மற்றும் கேப்சூல் தரப்படுகிறது. புற்று நோயாளிக்கான பிரத்யேக உணவு வழங்கப்படும். அத்துடன் பிசியோதெரபி, யோகா, பிராணவாயு சிகிச்சை மற்றும் இரத்த ஓட்டத்தை சீராக்கி புத்துணர்ச்சி அளிக்கும் இயற்கை முறை சிகிச்சை அளிக்கப்படுகிறது.
2. நேரில் வர முடியாதவர்களுக்கு: நோயாளியின் தற்போதைய மருத்துவ நிலையைத் தெரிந்து கொண்ட பின் கேன்சர் ஹெர்பல் லேகியம் மற்றும் கேப்சூல் அனுப்பி வைக்கப்படும். அதற்காக நோயாளியைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

## PARKINSON'S - நோயாளிகளுக்கு ஓர் அறிவிப்பு

எங்கள் சென்டரில் பார்கின்சன் ஹெர்பல் லேகியம் மற்றும் கேப்சூல் முதலியவை ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு (மூளையில் பேசல் கேங்கிலியே பகுதியில் உள்ள நியூரான்கள் அதிகம் பாதிப்படையாதவர்களுக்கு) மிகச் சிறந்த நிவாரணம் கொடுக்கின்றது. எங்கள் மருத்துவமனையில் தங்கி கை நடுக்கம், விறைப்புத் தன்மை, மற்ற வேக குறைபாடுகள் குறைய சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம்.

**DIABETES - சர்க்கரை நோய்:** FOR TYPE 2- சிறப்பான இயற்கை மருத்துவம். FOR TYPE 1- இன்சுலின் ஊசி மருந்தை குறைக்கும்படியான மூலிகை மருந்து AT AFFORDABLE PRICE- ல் கொடுக்கிறோம். வர இயலாதவர்களுக்கு மூலிகை மருந்து அனுப்பி வைக்கிறோம் நோயின் முழு விவரங்களையும் தெரியப்படுத்தவும்.

ஆஸ்துமா, உடல் பருமன், சர்க்கரை நோய், வயிற்று உப்புசம், கண்களில் நீர் வராமை - சிறந்த இயற்கை முறை சிகிச்சை வழங்கப்படும். மற்றும் எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

# அடையார் இயற்கை வைத்திய மையம்

# ADYAR NATURE CURE CENTER ™

Registered Hospital (Opp to Gandhinagar Bus Terminus)

No. 6, 2nd Cross Street, Kasturba Nagar, Adyar, Chennai - 20. Ph: 044 - 2441 3399, 2440 2470. Fax: 044-2491 6650
Email : adyarnaturecure@yahoo.com Web : www.adyarnaturecure.com

குறிப்பு: A/c, Delux A/c சாதா, தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதியுடன் கிடைக்கும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.